2012, August 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்



## கிழக்கில் மீண்டும் தமிழர் முதல்வராக முடியுமா?

### தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டை நோக்கி

### வரலாற்றின் இறுதி நிலையம் எது?

### Z புள்ளி உருவாக்கும் சமூகப் பிரச்சினைகள்




### ராகுல் காந்தி ஒரு புதிர்



| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 150.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS..........CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக தகவல்களுக்கு : +94-773-186-987




இருவாரங்களுக்கு ஒருமுறை

மலர் 01 இதழ் 03
**2012, ஆகஸ்ட் 01 - 15**

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட், கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்கள்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்
துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

**புகைப்படங்களும்**
**பக்க வடிவமைப்பும்**
எம்.ஸ்ரீதரகுமார்

**தகவல் தொழில்நுட்பம்**
எஸ்.டி.தயாளன்

**விளம்பரம்**
எஸ்.ரமேஸ்வரன் 0117322736
அ.பிரவீன் 0117767702
ஜெ.அர்ஜுன் 0117322777

**விநியோகம்**
கே.திலிப் குமார்

**உற்பத்தி பிரிவு**
எஸ்.ஏ.டி.ஜோசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

எமது விருந்தினர்
விஜேயதாச ராஜபக்ஷ 08

கிழக்கில் மீண்டும் தமிழர்
முதல்வராக முடியுமா?
என்.சத்தியமூர்த்தி 11

Z புள்ளி சர்ச்சை 14
பேராசிரியர் மா.கருணாநிதி

சுயதணிக்கையின் ஆபத்துகள்
கானாக் மணி தீக்சித் 20

தனிநாயகம் அடிகளாரின்
நூற்றாண்டை நோக்கி 22
ராஜன் பிலிப்ஸ்

ஈழப்பிரச்சினையும்
திராவிடக்கட்சிகளும் 26
வீ.அரசு

தீவிர பொருளாதார நெருக்கடி 29
கோ.அமிர்தலிங்கம்

வரலாற்றின் இறுதி நிலையம் எது? 32
பேராசிரியர் என்.சண்முகரத்தினம்

டில்லி டயறி 42
எம்.பி.வித்தியாதரன்

ராகுல்காந்தி ஒரு புதிர் 47


அமெரிக்க துப்பாக்கி நபர்களின்
வெறியாட்டங்கள் 50

முகத்தில் சிரிப்பு....
மூளையின் தெறிப்பு 56
வைத்திய கலாநிதி
எம்.கே.முருகானந்தன்

மர்லின் மன்றோ மறைவின்
அரை நூற்றாண்டு 58
கே.எஸ்.சிவகுமாரன்

கணேசனைத் திரும்பிப் பார்க்கிறோம் 60

கடைசி பக்கம் 64
சோ.சந்திரசேகரன்





08



20



22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2012, ஆகஸ்ட் 01-15



14



26



42



50



56



58



60

## ஆசிரியரிடமிருந்து...

# மாகாணசபை தேர்தல்கள்

கிழக்கு மாகாணசபை, வடமத்திய மாகாண சபை மற்றும் சப்ரகமுவ மாகாண சபை ஆகியவற்றுக்கான தேர்தல் பிரசார இயக்கங்களை அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. வடமத்திய மாகாணத்திலும் சப்ரகமுவ மாகாணத்திலும் தங்களது வெற்றியை யாருமே தடுக்க முடியாது என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் மார்தட்டிக் கொண்டே பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியையும் நாட்டின் மூன்றாவது பெரிய அரசியல் சக்தி என்று கூறிக் கொள்வதில் அதன் தலைவர்கள் ஒருவித பெருமையைக் காண்கின்ற ஜனதாவிமுக்தி பெரமுனை (ஜே.வி.பி)யும் பல வருட காலமாக இருந்து வருகின்ற படுமோசமான பலவீனமான நிலையில் இருந்து மீள முடியாது தவித்துக்கொண்டே தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்துவருகின்றன.

முன்னென்றுமில்லாத பொருளாதார நெருக்கடி, சட்டத்தின் ஆட்சி சீர்குலைவு, அரசதுறைகளில் தலைவிரித்தாடும் ஊழல், குற்றச்செயல்கள் குறிப்பாக கொலைகள், ஆட்கடத்தல்கள், பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் போன்றவை படுமோசமாக அதிகரித்திருப்பதன் காரணமாக ஆட்சியாளர்கள் மீது மக்கள் பெரும் அதிருப்தி கொண்டிருக்கின்றபோதிலும் கூட, அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசாங்கத்துக்கு எதிராக மக்களை அணிதிரட்ட இயலாத அரசியல் வங்குரோத்து நிலையில் தான் எதிரணிக்கட்சிகள் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் இந்த அதிருப்தி நிலைக்கு மத்தியிலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்குப்பலம் அசைக்க முடியாமல் இருப்பதற்கு பிரதான காரணம் அவர்கள் சிங்கள கடும் தேசியவாத வாக்குவங்கி வீழ்ச்சியுறாதிருப்பதை உறுதிப்படுத்தக் கூடியதான அரசியல் அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து வருவதேயாகும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசாங்கப் படைகள் கண்ட வெற்றியைத் தொடர்ந்தும் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் ஆட்சியாளர்களினால் ''விற்பனை'' செய்யக் கூடியதாக இருக்கின்ற நிலைவரத்தை மாற்றியமைப்பதற்கான அரசியல் கொள்கைகளையும் செயன்முறைகளையும் முன்னெடுக்கத் துணிச்சல் கொள்ளாதபட்சத்தில் எதிரணிக் கட்சிகளினால் குறிப்பாக ஐ.தே.க.வினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.வி.பி.யினாலும் எந்தவொரு தேர்தலிலும் சிறப்பான செயற்பாட்டைக் காண்பிக்க முடியாது. பல்வேறு காரணங்களுக்காக அரசாங்கத்தின் மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பைப் பயன்படுத்தக் கூடிய அரசியல்சாதுரியமும் விவேகமும் கூட எதிரணித் தலைவர்களுக்குக் கிடையாது.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரை, கிழக்கு மாகாண சபைத் தேர்தலே முக்கியமானதாக இருக்கிறது. வடமாகாணத்துடனான இணைப்புத் துண்டிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் நடைபெறுகின்ற இரண்டாவது தேர்தல் இதுவாகும். முதலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து கிழக்கு மாகாணத்தை விடுவித்த பிறகு 2008 மேயில் அந்த மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டது. அந்தத் தேர்தலை அவசர அவசரமாக அந்த நேரத்தில், அதுவும் வடக்கில் போர் தீவிரமடைந்து கொண்டிருந்த கட்டத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் அக்கறை காட்டியதன் காரணம் புரிந்துகொள்ளக்கூடியதே. அத்துடன் அந்த மாகாணசபையின் முதலமைச்சராக ஒரு தமிழரையே கொண்டுவரவேண்டுமென்பதில் அரசாங்கத் தலைவர்கள் காட்டிய சிரத்தையும் கூடப் புரிந்து கொள்ளக் கூடியதே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அத்தேர்தலில் போட்டியிடக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. அத்தகைய சூழ்நிலை வலிந்தே ஏற்படுத்தப்பட்டுமிருந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.வுடன் இணைந்து போட்டியிட்ட போதிலும் மாகாண சபை அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடியதாக இருக்கவில்லை. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே அதிகாரத்தைக் கைப்பற்றியதென்பதும் அந்த நிருவாகத்தில் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் முதலமைச்சராக கடந்த நான்கு வருடங்களுக்கும் கூடுதலான காலமாக எவ்வாறு செயற்படக்கூடியதாக இருந்தது என்பதும் அண்மைக்கால வரலாறு.

உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து மூன்று வருடங்களுக்கும் கூடுதலான காலம் கடந்துவிட்ட நிலையிலும்கூட, வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதில் அக்கறை காட்டாத அரசாங்கம் கிழக்கு மாகாணசபைக்கு அதுவும் அதன் பதவிக்காலம் பூர்த்தியடைவதற்கு பல மாதங்கள் முன்கூட்டியே இரண்டாவது தடவையாகத் தேர்தலை நடத்துவதற்கு அக்கறை காட்டிய விசித்திரத்தைக் காண்கிறோம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இத்தடவை கிழக்குத் தேர்தலில் போட்டியிடுகிறது. 2010 பாராளுமன்றத் தேர்தல் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டவர்களில் ஒரு தமிழர்கூட கிழக்கில் வெற்றி பெறவில்லை. அதை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் மாகாண சபைத் தேர்தலில் கிழக்குத் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை அளிக்கக்கூடிய பாணியைச் சுமாராக புரிந்துகொள்வதில் எவருக்கும் சிரமம் இருக்க முடியாது. அரச இயந்திரத்தின் ஒத்தாசையுடன் ஆளும் கட்சி வேட்பாளர்களினால் செய்யப்படுகின்ற கெடுபிடித்தன மான கைங்கரியங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு குந்தகமாக இருப்பதாக பெருவாரியான முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பொறுத்தவரை, கொழும்பில் மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அதேவேளை,கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலில் தனித்துப் போட்டியிடுகின்றது. இத்தகைய தீர்மானமொன்றுக்கு முஸ்லிம் காங்கிரஸ் வந்ததற்கு பல்வேறு வியாக்கியானங்கள் முன்வைக்கப்படுகின்றன. எது எவ்வாறிருந்தாலும்,தேர்தல் முடிவுகளின் பிறகு முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ளக்கூடிய தீர்மானம் கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசும் மக்களின் தனித்துவ அடையாளங்களை நிலை நிறுத்துவதில் எதிர்நோக்கப்படுகின்ற பெருவாரியான நெருக்கடிகளை மனதிற்கொண்டதாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பே தமிழ் மக்களிடமும் முஸ்லிம் மக்களிடமும் பரவலாக இருக்கிறது. மத்தியில் அரசாங்கத்துடன் இணைந்திருந்து அமைச்சர் பதவிகளையும் வகிக்கின்ற அதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பகைக்கக்கூடிய தீர்மானமொன்றை கிழக்கில் எடுப்பது அசௌகரியமானதாகவே நிச்சயம் இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கோ கிட்டத்தட்ட சமவளவான ஆசனங்கள் அல்லது ஒன்றிரண்டு கூடக் குறையக் கிடைக்கும் பட்சத்தில் கிழக்கில் தனது கட்சிக்கு கிடைக்கக்கூடிய ஆசனப் பலத்தை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எவ்வாறு பயன்படுத்தப்போகிறார் என்பது மிகவும் முக்கியமான கேள்வி.

கிழக்கில் தனித்துப் போட்டியிடுவதற்கு தீர்மானித்து வேட்புமனுக்களையும் தாக்கல் செய்த பிறகு சிலவாரங்களுக்கு முன்னர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் எம்.சிவசிதம்பரம் நினைவுப் பேருரையை நிகழ்த்திய ரவூப் ஹக்கீம் தனது பேச்சின் இறுதியில் கூறிய வார்த்தைகளை இங்கு நினைவுபடுத்துவது காலப் பொருத்தமானதாக இருக்கும்.

"கிழக்குமாகாணத் தேர்தல் தொடர்பில் இறுதியாக மேற்கொண்ட தீர்மானம் காரணமாக நான் முதுகெலும்புடையவனாக உங்கள் முன்னிலையில் வந்துபேசக் கூடியதாக இருக்கிறது" என்று அவர் கூறினார். தேர்தலின் முடிவுக்குப் பிறகு கிழக்கு மாகாணசபை நிருவாகத்தை அமைப்பதற்கான முயற்சிகளின் போது முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கக்கூடிய தீர்மானமும் கூட இந்த முதுகெலும்புடன் சம்பந்தப்பட்டது தான் என்பதை முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு நாம் கூறிவைக்க விரும்புகிறோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரக்குழலைம்....

மூன்று தசாப்த காலமாக நாடு உள்நாட்டுப் போரினால் அல்லோலகல் லோலப்பட்டுக் கொண்டிருந்த போது சிறு பிரச்சினைகளை மக்கள் கணக்கில் எடுக்கவில்லை. அவர்கள் தங்களது பிள்ளைகளினதும் உறவினர்களினதும் குடும்பங்களினதும் பாதுகாப்பைப் பற்றியே சிந்தித்தார்கள். ஆனால், போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நாட்டில் அமைதி திரும்பியதும் சிறிய சம்பவங்கள் எல்லாம் பெரிதுபடுத்திக் காண்பிக்கப்படுகின்றன. அது தான் உண்மைநிலையேதவிர, நாட்டில் குற்றச்செயல்கள் ஒன்றும் பெரிதாக அதிகரிக்கவில்லை.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு.கருணாநிதியினால் சென்னையில் கூட்டப்படுகின்ற தமிழீழ ஆதரவாளர் மகாநாட்டுக்கு (டெசோ) அழைக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கருணாநிதியினதும் இலங்கைத் தமிழர் பிரச்சினையினதும் கடந்த காலத்தை மறந்துவிடக்கூடாது. போரின் போது ஆயிரக்கணக்கான தமிழ்க் குடிமக்களின் உயிரிழப்புக்கு கருணாநிதி தெரிவிக்கின்ற அனுதாபச் செய்தி தான் இந்த டெசோ மாநாட்டுக்கான அழைப்போ என்று நான் வியக்கிறேன்.



ரெலோ என்.ஸ்ரீகாந்தா

அரபுலக வசந்தம் என்கிற எழுச்சி முஸ்லிம் உலகின் பார்வையைத் திருப்பிவிட்டிருக்கிறது. அதன் தாக்கம் முஸ்லிம் உலகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டது. அந்த அதிர்வுகள் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தெரியவேண்டும் என்பதே முஸ்லிம் காங்கிரஸின் நோக்கமாகும்.



ரவூப்ஹக்கீம்
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்

பத்திரிகையாளர்கள் என்ற வகையில் நாம் பல சந்தர்ப்பங்களில் துணிச்சலற்றவர்களாக அடிபணிந்துவிடுகின்றோம். சுய தணிக்கை என்பது பத்திரிகையாளர்களுக்கு எதிராக மிகவும் மோசமான பயமுறுத்தல் செயற்பாட்டு வகையாகும். கொலைசெய்யப்பட்ட பத்திரிகையாளர்களின் தொகையை எண்ணிக்கொண்டு நாம் ஊடகங்கள் மீதான அடக்குமுறை பற்றிப் பேசுகின்றோம். சுய தணிக்கை என்பது குறித்து நாம் தீவிரமாக விவாதிக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் பத்திரிகைத்துறையில் பயந்தாங் கொள்ளித்தனம் அதிகமாக இருப்பதை காணமுடிகிறது.



கானக் மணி தீக்ஷித்
ஆசிரியர், ஹிமால் சவுத் ஏசியன்

சர்வதேச பாடசாலைகள் திட்டம் முற்போக்கான ஒன்றல்ல. அது நாட்டை பழைய காலனித்துவ ஆட்சிக்காலத்துக்குக் கொண்டு சென்றுவிடும். வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் மாத்திரம் அரசாங்க பாடசாலைகளுக்குப் போவார்கள். சர்வதேச பாடசாலைகளில் கற்றுத்தேறும் பிள்ளைகள் நாட்டின் எதிர்காலத்தைக் கையேற்பார்கள்.



வண.கலாநிதி பல்லன்வில
விமலரத்ன தேரர்

பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவை யாருமே முட்டாளாக்க முடியாது. அவரை முட்டாளாக்க முயற்சித்தவர்கள் வீதியோரத்தில் விழுந்து கிடக்கிறார்கள். பாதுகாப்புச் செயலாள ருக்கு நன்றி தெரிவிக்க ஆரவாரப் படுகின்ற பலருடன் நான் சண்டை யிட்டிருக்கிறேன். அவரை முட்டாளாக்க முடியாது என்பதை நான் நன்கறிவேன். அவரை முட்டாளாக்க முயற்சித்த ஜெனரல் ஒருவர் இப்போது வீதியில் நிற்கிறார்.




ஏ.ஜே.எம்.முஸம்மில்
கொழும்பு மேயர்

தனித் தமிழ் ஈழம் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையில் இருந்து நான் ஒருபோதும் பின்வாங்கியதில்லை. அந்தக் கோரிக்கையைக் கைவிடுபவர்கள் மக்களால் நிராகரிக்கப்படுவார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை தனித் தமிழ் ஈழமே எமது இலக்கு. இலக்கை நாம் அண்மிக்கும்போது, அதை அடைவதற்கான முயற்சிகளை முன்னெடுப்போம்.



மு.கருணாநிதி

மாற்றமடைந்து வந்திருக்கும் பூகோள அரசியல் சூழ்நிலைகளை கருத்திலெடுக்க விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தவறிவிட்டார். முழு உலகமுமே ஐக்கியப்பட்டு போரில் இலங்கைக்கு ஆதரவளித்ததை உணர்ந்தபோது தனது படைப்பிரிவை அவர் கலைத்திருந்தால், பெரும் எண்ணிக்கையிலான மனித அழிவுகளை தவிர்த்திருக்க முடியும். தமிழர்களை அவர் பாதுகாத்தார் என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், தமிழர்களின் தலைவர் என்றவகையில் பிரபாகரனை ஏற்றுக் கொள்வதில் நான் எப்போதுமே ஐயுறவைக் கொண்டிருந்தேன். அவரது ஆளுமையில் ஒரு குறைபாடு இருந்தது.



எஸ்.ஏ.டேவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்திச்சரம்**

## வடக்கின் அரசியல் உறுதிப்பாடு?



தென்பகுதியில் ஆரம்பித்து யாழ்ப்பாணத்தில் முடிவடைந்த ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி)யின் 6 நாள் பேரணி போரின் முடிவுக்குப் பின்னர் வடமாகாணத்தில் தோற்றுவிக்கப் பட்டிருக்கும் அரசியல் உறுதிப்பாட்டை பறை சாற்றுகிறது என்று பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

சர்வதேச சமூகமும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொடரும் இராணுவப் பிரசன்னத்தைப் பற்றி இன்னமும் முறையிட்டுக் கொண்டிருக்கின்றவர்களும் யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பி. அனுப விக்கின்ற சுதந்திரத்தை அவதானிக்க வேண்டும் என்றும்



ராஜபக்ஷ இலங்கை வந்திருக்கும் பிரிட்டிஷ் பாராளுமன்றத் தூதுக் குழுவினருடனான சந்திப்பின் போது கூறினார்.

ஜே.வி.பி.யினரின் வடக்கு நோக்கிய அரசு எதிர்ப்புப் பேரணி இதைவிட நல்லதொரு சந்தர்ப்பத்தில் நடந்திருக்க முடியாது. சில வருடங்களுக்கு முன்னர் வடக்கு நோக்கி இத்தகைய பேரணியை நடத்துவது குறித்து ஜே.வி.பி.யினராலோ அல்லது தென்னி லங்கையின் வேறு அரசியல் கட்சியினாலோ நினைத்திருக்க முடியுமா? நாட்டின் எந்தப் பகுதியிலும் அரசாங்கத்துக்கு எதிராக யாரும் கண்டனப் பிரசாரம் செய்யலாம்.

அதில் யாரும் தலையிட முடியாது. ஆனால், பிரசாரம் நேர்மையானதாக இருக்க வேண்டும் என்றும் பாதுகாப்புச் செயலாளர் கூறியிருக்கிறார்.

## சிதம்பரம் மீண்டும் நிதியமைச்சர்

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடுவதற்காக கடந்த ஜூனில் பிரணாப் முகர்ஜி நிதியமைச்சர் பதவியைத் துறந்த போது பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் அந்த அமைச்சை தனது நேரடிக் கண் காணிப்புப் பொறுப்பிலேயே வைத்தி ருக்க விரும்புவார் என்றே பரவலாக எதிர் பார்க்கப்பட்டது.

இந்திய பொருளாதாரம் தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையில், மீண்டும் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தனது பொறுப்பில் முன்னெடுக்கவே பிரதமர் பெரிதும் விரும்புவார் என்ற அபிப்பிராயமே இந்த எதிர்பார்ப்புக்குக் காரணமாக இருந்தது.

ஆனால்,ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு மத்திய உள்துறை அமைச்ச ராக இருந்த பி.சிதம்பரத்தை நிதியமைச்ச ராக மன்மோகன்சிங் நியமித்திருக்கிறார். சிதம்பரம் வகித்த உள்துறை அமைச்சர் பதவி சக்தி.வலு அமைச்சராக இருந்த சுசில் குமார் ஷிண்டேயின் கைக்கு மாற்றப் பட்டிருக்கிறது.

சிதம்பரத்துக்கு நிதியமைச்சர் பதவி புதியதல்ல. ஐக்கிய முற்போக்கு கூட்டணி யின் முதல் பதவிக்காலத்தில் அவர் நிதியமைச்சராக இருந்தவர். மீண்டும் சிதம்பரம் நிதியமைச்சராகியிருப்பதை வர்த்தக சமூகம் பெரிதும் வரவேற்றிருக்கி றது. இதற்கு பிரதான காரணம் அவர் சந்தைப் பொருளாதாரக் கொள்கையின் ஒரு உறுதியான ஆதரவாளர் என்பத னாலாகும்.


சக்தி.வலு அமைச்சர் என்ற வகையில் ஷிண்டே சிறப்பாகச் செயற்படவில்லை. அதற்கு முன்னதாக மகாராஷ்டிரா மாநில முதலமைச்சர் என்றவகையிலும் அவர் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அரசியல் வட்டாரங் களில் இருக்கிறது.

பிரதியமைச்சர் பதவிகள் மாற்றங் களைப் பொறுத்தவரை நிதியமைச்சு சிறப்பான ஒருவரிடமும் உள்துறை அமைச்சு பலவீனமான ஒருவரிடமும் சென்றிருப்பதாக இந்திய பத்திரிகைகள் கருத்து வெளியிட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜதந்திரத்தின் முடிவு



சிரியாவுக்கான ஐக்கிய நாடுகள் மற்றும் அரபு லீக்கின் விசேடதூதுவர் பொறுப்பில் இருந்து ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் நாயகம் கொபி அனான் விலகியமையை சிரிய நெருக்கடிக்கு முடிவொன்றைக் காண்பதற்கான இராஜதந்திர முயற்சிகளின் முடிவு என்றே வர்ணிக்க வேண்டியிருக்கிறது.

அனான் விலகியது குறித்து சர்வதேச இராஜதந்திர வட்டாரங்களில் அதிர்ச்சி தெரிவிக்கப்படவில்லை. கடந்த பெப்ரவரியில் விசேட தூதுவராக நியமிக்கப்பட்ட அனான், சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பினருமே அமைதியான வழிமுறைகளின் மூலமாகத் தீர்க்க விரும்பாத ஒரு நெருக்கடியில் சுமார் 6 மாதங்களாக எவ்வாறு பொறுமையுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுத்தார் என்பதே ஆச்சரியத்துக்குரியதொன்றாக இருக்கிறது.


விசேடதூதுவர் பொறுப்பில் இருந்து விலகும் போது அனான் கூறிய வார்த்தைகள் இவை.

"ஒரு தூதுவர் என்ற வகையில்,நெருக்கடியில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களை விடவும் நான் கூடுதலான அளவுக்கு சமாதானத்தை விரும்ப முடியாது. ஐ.நா.பாதுகாப்புச்சபையையோ அல்லது சர்வதேசசமூகத்தையோ காட்டிலும் கூடுதலான அளவுக்கு சமாதானத்தை நான் விரும்பமுடியாது."




## குழந்தைகளுக்கு பசுப்பால் நல்லதல்ல

பசுப்பால் குழந்தைகளுக்கு ஒவ்வாதது என்று ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. பசுப்பாலில் போதுமான ஊட்டச்சத்து இல்லாததே இதற்கு காரணமாக ஆய்வாளர்களினால் கூறப்பட்டிருக்கிறது.



"பசுப்பாலைக் குடிக்கும் குழந்தைகளுக்கு உகந்த ஊட்டச் சத்து கிடைப்பதில்லை. ஏனென்றால் பசுப்பால் உயர்ந்த மட்டங்களில் புரதத்தைக் கொண்டிருக்கிறது.

இப்புரதம் குழந்தைகளில் உள்ள முதிர்ச்சியடையாத சிறுநீரகங்களுக்கு பொருத்தமற்றதாகும்" என்று கொல்கத்தாவில் உள்ள அகில இந்திய உடல் நலவியல் மற்றும் பொதுச்சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த டெப்நாத் சௌதூரி கூறியதாக பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் அறிவித்திருக்கிறது.

மருத்துவக் காரணங்களுக்காக தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்ட முடியாதவர்களாக இருக்கும் தாய்மார், பசுப்பாலைபிள்ளைகளுக்குபருக்குகிறார்கள். விரைவாக வளர்ந்து வரும் பராயத்தில் உள்ள குழந்தைகளுக்கு போதுமான ஊட்டச் சத்தைக் கொண்டிராத பசுப்பாலுக்கு மாற்றீடாக எது அமையும் என்பது குறித்து தாய்மார் குடும்ப மருத்துவர்களிடம் ஆலோசனை பெறுவது உகந்தது என்று ஊட்டச்சத்து நிபுணர்களை மேற்கோள் காட்டி "தேசிய குடும்ப சுகாதார ஆய்வு III" இல் சௌதூரி தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விருந்தினர் பக்கம்

# ஆயுதப்போர் முடிந்த பிறகு தொடருகின்ற பனிப்போர்

விஜேயதாச ராஜபக்ஷ

சகல உயிரினங்களும் வாழக்கூடிய வளமான சூழலையும் நிறைந்த இயற்கை வளங்களையும் கொண்டதாக எமது இலங்கை நாடு விளங்குகின்ற போதிலும் துரதிர்ஷ்டவசமாக நாம் நெருக்கடியும் பகைமையும் நிறைந்த வரலாறு ஒன்றை மரபுரிமையாகப் பெற்றிருக்கிறோம். தென்னிந்தியாவில் இருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புகளும் பின்னரான காலகட்டத்தில் போர்த்துக் கேயர், டச்சுக்காரர்கள், பிரிட்டிஷ் காரர்கள் மேற்கொண்ட ஆக்கிரமிப்புகளும் இலங்கையர்களின் மனங்களில் குறிப்பிட்ட சிலர் மருட்சிகளையும் ஏமாற் றங்களையும் தோற்றுவித்திருந்தனர். 1815 கண்டி உடன்படிக்கைக்குப் பின்னர் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சி எமது நாட் டில் மொழிகள், மதங்கள் மற்றும் சாதி களை அடிப்படையாகக் கொண்ட சமூகங் களுக்கிடையேயான நம்பிக்கையை அக லப்படுத்திவிட்டது. பிரித்தாளுவது என்பது எந்தவொரு இரக்கமற்ற அரசியல்வாதி க்கும் பொருத்தமான கொள்கையாக விளங்குகின்ற அதேவேளை, சமூகங் களுக்கிடையேயான ஒற்றுமையின்மை எந்தவொரு சர்வாதிகாரிக்கும் அல்லது கொடுங்கோன்மை ஆட்சியாளருக்கும் ஒரு வரமாக போய்விடுகிறது.

சுதந்திரம் பெறும்வரை ஐக்கியம் என் பது கேள்விக்குரியதாக இருக்கவில்லை. ஆனால் 1948 தொடக்கம் அவநம்பிக் கையின் விளைவாக சிங்களவருக்கும் இலங்கைத் தமிழருக்கும் இடையேயான வெளி அகலமாகத்தொடங்கியது. அரசி யல் அறிவாளிகள் எனப்படுவோர் வெறு மனே அரசியல் அனுகூலத்திற்காக இன வாதத்தைத் தூண்டிவிடுவதில் நாட்டம் காட்டியது பெரும் துரதிர்ஷ்டவசமானது. 1956 ஆம் ஆண்டு கட்சி அரசியலுக்குள் பௌத்த பிக்குமாரைக் கவர்ந்திழுத்து எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தனது தலைமையில் அரசியல் பிரசார ங்களை முன்னெடுக்கத் தொடங்கிய போது இனவாதச் சூழ்நிலை மேலும் தீவிரமடையத் தொடங்கியது. அதன் விளைவாக அவர் சிங்களத்தை மாத்திரம் அரசகரும மொழியாக்கும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டார். அதையடுத்து சிறுபான்மை இனத்தவர்கள் விரக்தியும்,ஏமாற்றமும் அடைந்தார்கள்.

அத்தகைய சூழ்நிலையின் விளை வாகத் தமிழர்கள் தமது சொந்த நாட்டி லேயே தாங்கள் பாதுகாப்பு அற்றவர் களாகவும் பாரபட்சத்திற்குள்ளாக்கப்படு பவர்களாகவும் இருப்பதை உணரத் தொடங்கினார்கள். குறிப்பிட்ட சில தீவிர வாதச் சக்திகள் 1958இல் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வ நாயகத்துடன் பண்டாரநாயக்கா உடன் படிக்கையொன்றைக் கைச்சாத்திடுவதை யும் பலவந்தமாகத் தடுத்தார்கள். சோல் பரி அரசியலமைப்பை இல்லாமல் செய்து 1972 இல் கொண்டுவரப்பட்ட குடியரசு அரசியலமைப்பு நிலைவரத்தை மேலும் பாரதூரமாக்கியது. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சோல் பரி அரசியலமைப்பில் இருந்த 29 ஆவது சரத்துக்கு நிகரான எந்தவொரு ஏற்பாட் டையும் குடியரசு அரசியலமைப்பு கொண்டிருக்கவில்லை. அந்தக் குடியரசு அரசியலமைப்பை நிறைவேற்றிய ஐக்கிய முன்னணி அரசாங்கம் கணிச மான அளவுக்கு மார்க்சியவாதிகளையும் இடதுசாரிகளையும் சோசலிசவாதிகளை யும் கொண்டிருந்தது. அவர்களின் அரசி யல் நோக்குகளையும் குறிக்கோள் களையும் விளங்கிக் கொள்ள முடியாமல் இன்றும் மக்கள் அதிர்ச்சியடைந்தவர் களாக இருக்கிறார்கள்.

1975 இல் அப்பாப்பிள்ளை அமிர்த லிங்கம் தலைமையிலான அரசியல்வாதி கள் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தைச் செய்தபோது நிலைவரங்கள் அரசியல் வாதிகளின் கட்டுப்பாட்டை மீறிச் செல் லும் என்று தமிழர்களோ சிங்களவர்களோ நினைக்கவில்லை. விடுதலைப்புலிகள் கெரில்லா இயக்கம் பலமுடையதாக வளர்ந்தபோது ஆட்சியாளர்களும் தமிழர் களும் பாதிக்கப்படத் தொடங்கினார்கள். பிரபாகரனின் குரோத உணர்வும், பிடி வாதமும் காரணமாக தமிழர்களும் சிங் களவர்களும் தங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கான தீர்வைக் கண்டு ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான பொன் னான சந்தர்ப்பத்தையும் இழக்கவேண்டி யுள்ளது. போர் முடிந்துவிட்டபோதிலும், பனிப்போர் இன்னமும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. எந்த இடத்தில் எந்த நேரத்தில் மீண்டும் போர் வெடிக்குமோ என்பதை யாரும் அறியார். ஆனால், போரினால் மோதலையோ நெருக்கடியையோ தற்காலிகமாகவே ஒடுக்கி வைத்திருக்க முடியும். போரினால் ஒருபோதுமே மனிதநெருக்கடிக்கு உலக வரலாற்றின் நீண்டகால நோக்கில் தீர்வைக் காண முடிந்ததில்லை என்ற உண்மை எம் முன்னால் விரிந்துகிடக் கிறது.

1987இல் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழான மாகாண சபைகளை ஏற்க மறுத்தது விடுதலைப் புலிகள் செய்த பெருந்தவறாகும். இன நெருக்கடிக்குத் தீர்வொன்றைக் காண் பதைத் தாமதிப்பதற்கு காலத்தைக் கடத்துவதற்கான அனுகூலமொன்றை தங்களது செயலின் மூலமாக புலிகள் ஆட்சியாளர்களுக்கு வழங்கிவிட்டார்கள். சரித்திரம் குறித்து கழிவிரக்கம் காட்டுவது காயங்களைக் குணப்படுத்தப்போவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை. பதிலாக தீர்வொன்றைக் காண்பதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும்.

தமிழர்களின் முன்னுரிமைக்குரிய விடயங்கள் பொருளாதார சொத்துகளோ அல்லது அபிவிருத்தியோ அல்ல. அவர்களுக்கு முக்கியமானது சுயமரியாதையும் சமத்துவமும் என்பதை நாம் அறிவோம். ஏனைய விடயங்கள் அவர்களுக்கு இரண்டாம் பட்சமானவை. அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் நெருக்கடியில் சம்பந்தப்பட்ட மையவிவகாரங்களை விளங்கிக்கொள்ள தவறிவிட்டார்கள் அல்லது அது குறித்து அறியாதவர்களாக பாசாங்கு செய்துவிட்டார்கள். அது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. சர்வதேச சமூகங்களின் ஆதரவுடன் புலம்பெயர்ந்த தமிழர்கள் வலோத்காரமான அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிக்க முயற்சிக்கிறார்கள். இதனால் அரசாங்கமும் சிங்கள சமூகத்தின் குறிப்பிட்ட சில பிரிவுகளும் சீற்றமடைந்திருக்கிறார்கள். மறுபுறத்தில் இந்திய அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்க்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்குதலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவர்களுக்கு இருக்கின்ற அக்கறையைவிட தமிழ்நாட்டு அரசியல்வாதிகளை மகிழ்ச்சிப்படுத்துவதும் தங்களுக்கு ஆதரவாக வைத்திருப்பதுமே முக்கியமானதாக இருக்கிறது. தமிழக அரசியல்வாதிகளை திருப்திப்படுத்த வேண்டுமென்ற ஆர்வம் இலங்கைத் தமிழர்களின்பிரச்சினைகளுக்குத்தீர்வுகாண வேண்டுமென்ற ஆர்வத்தைவிட மேலோங்கியதாக இருக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளைத் பூர்த்திசெய்வதற்கு வெளிநாட்டுச் சக்திகளிடம் தங்கியிருப்பதைவிட பிரச்சினையுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களும் சுயமரியாதையைப் பாதுகாத்துக்கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதே அர்த்தமுடையதும் நடைமுறைச் சாத்தியமானதுமாகும்.

இராணுவத்தின் பிரசன்னம் காரணமாக வடக்கில் தமிழர்கள் இன்னமும் அச்சம்கொண்டவர்களாகஇருக்கிறார்கள் என்பது உண்மையே. சனத்தொகை விகிதாசாரத்திற்கு பொருத்தமில்லாத முறையில் வடபகுதியில் இராணுவத்தினர் போரின் முடிவிற்குப் பின்னரும் கூட தொடர்ந்து நிலைவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தமிழர்கள் முறையிடுகிறார்கள். கிழக்கில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத்தேர்தல்கள் புதிய வகையான வன்முறைகளையும் குழப்பநிலையையும் கொண்டுவரும் என்ற பீதி நமக்கு இருக்கிறது. ஆட்சியாளர்களினதும் புலிகளின் தலைவர்களினதும் நடத்தை தமிழர்களுக்கு மாத்திரமல்ல எந்தவிதமான இன,மொழி பாகுபாடுமின்றி நியாயமான முறையில் சிந்திக்கக்கூடிய சகலருக்கும் விரக்தியையும் ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கின்றது. ஆனால் இன்னமும் கூட அவர்களுடைய பிரச்சினைக்கு எங்களிடம் மறுமொழி இருக்கிறது. சமூகங்களுக்கிடையேயான அவநம்பிக்கையை இல்லாமல் செய்வதே அதுவாகும். காலப்போக்கில் இந்தப் பிரச்சினை கூடுதல் சிக்கலானதாக மாறிவிட்டது. எந்தவொரு தீர்வுமே முஸ்லிம்களையும் திருப்திப்படுத்தவேண்டியதாக இருக்கிறது. பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்ற தரப்பினர் நேர்மையுடனும் மானசீகமாகவும் தான் அதைச் செய்கிறார்களா என்று மக்களில் பெரும்பாலானோருக்கு சந்தேகம் இருக்கிறது. இவ்வாறு நான் கூறுவது ஒன்றும் மிகைப்படுத்தப்பட்டது அல்ல. மானசீகமாகத் தான் பேச்சுவார்த்தையில் தாங்கள் ஈடுபடுகிறார்கள் என்பதை நிரூபிப்பது பாசாங்குத் தனத்தில் அல்ல துணிவாற்றலை வெளிப்படுத்துவதிலேயே தங்கியிருக்கிறது.

1983 கறுப்பு ஜுலை வன்முறைகள் இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் நேர்ந்த மிகவும் துரதிர்ஷ்டமான நிகழ்வுகளாகும். இந்த அனர்த்தத்தை முன்கூட்டியே தடுப்பதில் ஜே.ஆர்.ஜயவர்தன அரசாங்கத்திற்கு இருந்த இயலாமையும் அறிவுபூர்வமற்ற நோக்கும்சீர்படுத்தமுடியாதபாரதூரமான சேதத்தை ஏற்படுத்திவிட்டது. சமூகங்களுக்கிடையேயான இடைவெளியை அகலப்படுத்திய அந்த துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகளின் விளைவாக ஏற்பட்ட வேதனைகள் என்றுமே போக்கடிக்க முடியாதவையாகும். அதேபோன்றே அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களின் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் இழைத்த சரித்திரத் தவறுகள் சமூகங்களை மேலும் தூரவிலக்கி வைத்துவிட்டன. இதன் விளைவாக இறுதியில் தமிழர்கள் தங்களது தலைவிதியை கெரில்லாத் தலைவர் பிரபாகரனிடம் ஒப்படைத்தார்கள். அதேவேளை பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஆட்சியாளர்கள் ஜனாதிபதிப் பதவியினூடாக சகல நிறைவேற்று அதிகார சட்டவாக்க அதிகாரங்களையும் தங்களுக்குள் எடுத்துக்கொண்டார்கள். ஜனநாயக உரிமை, நெறிமுறைகள், கோட்பாடுகள், பண்பு விழுமியங்கள் சகலதுமே நாளடைவில் தேய்ந்து போய்விட்டன. சட்டவாக்க சபையின் உறுப்பினர்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் புகழ்பாடுகின்ற கையாட்களாக போய்விட்டார்கள்.

எவ்வாறெனினும் அரசியல்வாதிகள் உட்பட பெரும்பான்மையான சிங்கள மக்களும் பெரும்பான்மையான தமிழ் மக்களும் நெருக்கடிக்கு கண்ணியமான முறையில் நியாயமான தீர்வொன்றைக் காணவேண்டும் என்பதில் உண்மையான அக்கறை கொண்டவர்களாக இருந்தார்கள். ஆனால் நாளடைவில் அவர்கள் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளில் இருந்து படிப்படியாக வெளியேற்றப்பட்டுவிட்டார்கள். இதன் விளைவாக ஜனநாயகம் அருகிப் போய்விட்டது. தேர்தலினூடாக வாக்குரிமையைப் பயன்படுத்துவது என்பது வெறுமனே அரசியல் அனுகூலத்திற்கானதாக மாத்திரம் இருக்கின்றதே தவிர நெருக்கடிகளுக்குத் தீர்வைக் காணும் அல்லது தேசத்தின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் நோக்குடனானவையாக இல்லை. வாக்காளர்களின் அரசியல் கலாசாரமும் தனிப்பட்ட பலாபலன்களை அடிப்படையாகக் கொண்டதாக மாறிவிட்டது. அரசியல் அனுகூலம் தேசிய நலனை கிரகணப்படுத்திவிட்டது.

நாட்டு மக்களை தேச பக்தர்களென்றும்,தேசத்துரோகிகள் என்றும் இரு முகாம்களாக வகைப்படுத்திய செயல் அண்மைய கடந்த காலத்தில் நாட்டில் இடம்பெற்றிருக்கக்கூடிய மிகவும் ஆபத்தானதொரு போக்காகும். ஒரு அரசியல்வாதியைப் பொறுத்தவரை தேசபக்தர் என்ற நிலையிலிருந்து துரோகியாக மாறுவதற்கோ அல்லது துரோகியாக இருந்து கொண்டு தேசபக்தராக மாறுவதற்கோ 24 மணி நேரங்கள் கூடத் தேவையில்லை. போர்க்காலகட்ட நடவடிக்கை உட்பட ஆட்சியாளர்களின் கடந்த நடத்தைகளை நியாயப்படுத்துவதற்கே தற்போது முழு அரச இயந்திரமும் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்ட வண்ணம் இருக்கிறது. சர்வதேச சமூகத்தின் மத்தியில் தங்களை நேர்மையானவர்களாக காட்டிக்கொள்வதற்கு உலகம் பூராவும் யாத்திரை செய்வதே அரசாங்கத் தலைவர்களினதும் அமைச்சர்களினதும் அதிகாரிகளினதும் வேலையாக இருக்கிறது. பிரஜைகளின் தேவைகளை நிறைவேற்ற அரசுக்கு நேரமில்லை என்பதை காணக்கூடியதாக இருக்கிறது. பத்தில் ஒரு பங்கு முயற்சி எடுத்தால் கூட இந்த நாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டில் சிறுபான்மையினங்களை திருப்திப் படுத்தியிருக்க முடியும். உலகில் பெருமைக்குரிய ஐக்கியப்பட்ட ஒரு நாடாக இலங்கையை கட்டியெழுப்பியிருக்க முடியும். அவ்வாறு செய்திருந்தால் சிங்கப்பூர், மலேசியா மற்றும் கொரியா ஆகிய நாடுகளை விடவும் மேம்பட்ட நிலையினை நாம் அடைந்திருக்க முடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்போதும் கூட காலம் கடந்துவிடவில்லை. எமது நெருக்கடிகளை மிகவும் கூடுதலான அளவிற்கு அறிவுகூர்மையுடனும் துடிப்பான முறையிலும் எம்மால் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதை நிரூபிப்பதற்கு இன்னமும் கூட வாய்ப்பிருக்கிறது.

எமது மனப்போக்கில் மாத்திரமே மாற்றம் ஏற்படவேண்டும். சகல இலங்கையர்களும் ஒரு தோழமைக் குடும்பத்துக்குச் சொந்தமானவர்களென்று நினைக்க வேண்டும். தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகளில் பங்கும் ஈடுபாடும் கொண்ட சகலரும் நேர்மையானவர்களாக இருக்க வேண்டும். சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையேயான உறவுகளை நாம் துண்டிக்கின்ற தினம் அரசும் சிங்களவர்களும் தமிழர்களும் வீழ்ந்து விடுகின்ற தினமாக அமையும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் தமிழர் மீண்டும் முதல்வராக முடியுமா?




என்.சத்தியமூர்த்தி

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டாலும் அரசு தரப்பு ஒழித்து அனைவரும் கூறிவரும் ஒரு விஷயம் உள்ளது. கடந்த பல ஆண்டுகளாக அரசு தரப்பு எதுவானாலும், தேர்தல் முறைகேடுகள் என்று தேர்தலுக்குப் பல வாரங்கள் இருக்கும் போதே எதிர்க்கட்சிகள் பல விதத்திலும் குற்றம்சாட்டி வந்துள்ளன. அத்தகைய குற்றச்சாட்டுகள் தற்போதும் தொடர்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி போன்ற கட்சிகள் இத்தகைய குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன.

வேட்பாளர் கடத்தல், வாக்காளர்களை பயமுறுத்தல் என்பன போன்ற குற்றச்சாட்டுகளை இந்த மூன்று கட்சிகளும் தற்போது கூறி வருகின்றன. தேர்தல் நெருங்க நெருங்க, அரசு இயந்திரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை, எதிர்க்கட்சித் தொண்டர்கள் தாக்கப்பட்டமை மற்றும் வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டமை குறித்த தகவல்கள் அல்லது குற்றச்சாட்டுகள் இந்தப்பட்டியலில் சேர்க்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். இவையும் வழக்கமான குற்றச்சாட்டுகளே. ஏன், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, தேர்தல் ஆணையர் மிரட்டப்பட்டதாகக் கூட ஹேஸ்யங்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அதில் ஒரு புதுமை இருந்தது. ஆனால், இவை அனைத்துமே வருந்தத்தக்கது. இது போன்ற குற்றச்சாட்டுகள், தற்போது மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் மற்ற இரு மாகாணங்களுக்கும் பொருந்தும் என்று கூறலாம்.

இவை அனைத்துமே இன்றைய ஜனநாயகத்தின் சாபக்கேடு. உலகின் முதல் ஜனநாயகமான இங்கிலாந்து, வலிமையான ஜனநாயகமான அமெரிக்கா, பெரிய ஜனநாயகமான இந்தியா உட்பட்ட அனைத்து நாடுகளிலும் இது போன்ற குற்றச்சாட்டுகள் பல்வேறு வகைகளில், பல்வேறு காலகட்டங்களில் எழுந்துள்ளன. மூன்றாவது உலக நாடுகளான



இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் அந்தந்த நாடுகளில் உள்ள எதிர்க்கட்சிகளும், பத்திரிகைகளும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் இந்த அவல நிலைமையை உலகிற்கு படம் பிடித்துக் காட்டுவதை ஒரு தேர்தல் காலத்தய கடமையாகவும் உரிமையாகவும் கொண்டுள்ளன.

முதல் உலக நாடுகளில் இவ்வாறு நடப்பதில்லை. ஆனால் அங்கெல்லாம் தேர்தல் முறைகேடுகள் நடைபெறுவதில்லை என்பது அல்ல பொருள். புரையோடிப் போன தங்களது தவறுகளை அவர்கள் புடம் போட்டு, உலகிற்கு அவை அனைத்தும் பெருமை சேர்க்கும் விஷயம் என்பது போன்று அவர்கள் ஒரு பிரமையை ஏற்படுத்திவந்துள்ளனர். அதற்கு மூன்றாம் உலக நாடுகளும் தலையசைத்து ஒப்புதல் தந்து வருகின்றன. அதனைத் தங்களது நாடுகளில் செயல்படுத்த முயலும் போது அதுவே புதிய தவறுகளுக்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் அமைந்து விடுகின்றன. இதுவே முதல் உலக நாடுகளின் முதல் ஜனநாயக


வெற்றி.

இதனால் எல்லாம் இலங்கைத் தேர்தல்களில் உள்ள முறைகேடுகளை எந்த விதத்திலும் நியாயப்படுத்தி விடமுடியாது. மாறாக, தற்போது புழக்கத்தில் உள்ள "நிறைவேற்று" அல்லது "எதேச்சாதிகார" ஜனாதிபதி முறை போன்றே இதுவும் நடைமுறையில் உள்ள தவறாகும். பதவியில் இல்லாத கட்சிகள், ஆட்சியில் உள்ள கட்சிகளைச் சாடுவதற்கு பயன்படுத்தும் ஒரு வழிமுறையாகவே தேர்தல் முறைகேடுகள் இருந்துவந்துள்ளன. பதவியில் அமர்ந்ததும் அந்தக் கட்சிகளே தங்களது முந்தைய குற்றச்சாட்டுகளையும் உறுதிமொழிகளையும் மறந்து விடுகின்றன.

பதவியில் பங்கு வகித்த போது இது போன்ற குற்றச்சாட்டுகளுக்கு காரணமான ஜே.வி.பி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவை பதவியை இழந்த பின்னர் இத்தகைய குற்றச்சாட்டுகளை முன்வைத்தன. அதே சமயம், எழுபதுகளில் தான் பதவியில் இருந்த போது, முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகாவின் உரிமைகளைப் பறித்த ஐக்கிய தேசிய கட்சி இன்றுவரை அது குறித்து வருத்தம் தெரிவிக்கவில்லை. இது போன்ற ஜனநாயகப் படுகொலைகளையும் அனைத்துக் கட்சிகளும் தொடர்ந்தும் அரங்கேற்றி வருகின்றன. அது குறித்து, தேர்தலுக்குப் பிந்திய காலகட்டத்தில் யாருமே பேசுவதில்லை என்பது விந்தையான வருந்துவதற்குரிய பழக்கமாக மட்டுமே மாறிவிட்டது.

தேர்தல் முறைகேடுகள் குறித்து இங்கு விஸ்தீரணமாக அலசுவதற்குக் காரணம் இருக்கிறது. அரசு சார்ந்த எல்லா முறைகேடுகளையும் இனப் பிரச்சினையின் ஒரு பகுதியாக மட்டுமே தமிழ்ச் சமுதாயம் பார்க்கப் பழகி விட்டது. இது போன்றே பத்திரிகைச் சுதந்திரம், தனி மனிதர் சுதந்திரம் போன்றவற்றை எல்லாக் கால கட்டங்களிலும் இனப் பிரச்சினையின் ஒரு அலகாக மட்டுமே தமிழ்ச் சமுதாயம் காணக்கூடாது. இது அரசியல் சார்ந்த விஷயம், விஷமம். இனப்பிரச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்த அளவிற்கு தலை தூக்கி இருக்க வில்லை என்றாலும் இத்தகைய நிகழ்வுகள் தொடர்ந்து அரங்கேறிக் கொண்டு தான் இருக்கும்.

இனப்போர் காலகட்டத்திலும் இனப் பிரச்சினை தலைவிரித்தாடத் துவங்கிய நேரத்திலும் சிலபல நிகழ்வுகளை மட்டுமே அவ்வாறு எடுத்துக் கொள்ள முடியும். உதாரணத்திற்கு, போரின் கடைசி மாதங்களில் நடைபெற்றதாகக் கூறப் படும் மனித உரிமை மீறல் குறித்த செயல் பாடுகளை வேண்டுமென்றால் அவ்வாறு எடுத்துக் கொள்ளலாம். மாறாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், ஏன், மலையகத்திலும் தேர்தல் காலகட்டங் களில் அரங்கேறும் பல்வேறு முறைகேடு களையும் கூட முன்னின்று நடத்துவது ஏதாவது ஒரு தமிழ்ப் பேசும் மக்களின் கட்சிகளின் தமிழ் உறுப்பினர்கள் என்று தான் பல வேளைகளிலும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எங்கே இங்கு வந்தது இனப்பிரச்சினை? எதற்காக தமிழர்கள் தங்களைத்தாங்களே ஏமாற்றிக் கொள்ள வைக்கும் இத்தகைய முயற்சி?

இன்றைய கிழக்கு மாகாண சபைத் தேர் தலில் இவை மட்டுமே முக்கியமான பிரச் சினை இல்லை. அதன் முக்கியத்துவமே முதல்முறையாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு மாகாண சபைத் தேர்தல்களில் பங்குபெறப் போவது என்பது தான். இதனை அடுத்து வடக்கு மாகாணம் மற்றும் தமிழ் பேசும் மக்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் வாழும் மேற்கு மாகாண சபைத் தேர்தல்கள் எப்போது நடைபெற்றாலும் கூட்டமைப்பு போட்டி யிடும் என்று எதிர்பார்க்கலாம். அதிலும், வடக்கு மாகாண சபைத் தேர்தலையும் உடனடியாகவே நடத்த வேண்டும் என்று கூட்டமைப்பு தொடர்ந்து கோரி வருவதும் வரவேற்கத்தக்கது.

கடந்த முறை கிழக்குப் பகுதியில் இனப் போர் முடிந்த காலகட்டத்தில் அங்கு மாகாண சபைத் தேர்தலை அரசு அதிர டியாக நடத்தி முடித்தது. அதில், அரசு தரப்பில் ஒன்றல்ல, இரண்டு முன்னாள் போராளித்தலைவர்கள்பங்குபெற்றனர். அரசு கூட்டணியில் அங்கமாக பிள்ளை யான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி போட்டியிட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை யிலான ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கருணா தேர்தலில் பணியாற்றினார். முடிவில் பிள்ளையான் என்ற சந்திரகாந்தன் முதலமைச்சரானது குறிப்பிடத்தக்கது.

அரசியல் ரீதியாக பிள்ளையானின் ஆட்சிக்கு ஒருவித முக்கியத்துவம் உண்டு. இனப்போரோடு ஒட்டி அரசு தருவதாகக் கூறிய அரசியல் தீர்வுகளை வழங்க வில்லை. அது குறித்துப் பேசி வந்த இளம் முதலமைச்சரும் அவ்வப்போது அதனை நினைவு கொண்டதோடு, மற்றப்படி மற ந்து விட்டார் என்றே எண்ணத் தோன்றுகி றது. அதே சமயம், நான்கு ஆண்டுகள் மட்டுமாவது முதலமைச்சராக பதவி வகி த்த முதல் தமிழர் என்ற பெருமை பிள்ளையானையே சேரும். இதே தேர்தல் வழக்கமான ஐந்து ஆண்டுகள் கழிந்தே நடைபெற்றிருந்தால், முதன்முதலாக முழுப் பதவிக்காலத்திலும் ஆட்சியில் இருந்த தமிழர் என்ற பெருமையும் அவருக்கு அடுத்த காலத்தில் கிடைத்தி ருக்கலாம். பேச்சுக்காகவாவது, இன்றை க்கும் அவருக்கு அந்த வாய்ப்பு இருப்பதாக கருத இடம் உள்ளது.

கடந்த முறை கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட மறுத்த கூட்டமைப்பு இந்த முறை போட்டியிட முன் வந்திருப்பது வரவேற்கத் தக்க விஷயம். இதே முடிவை கடந்த முறையும் அவர்கள் எடுத்திருந் தால், எடுக்க முடிந்திருந்தால், போரின் வழித்தடம் கூட மாறியிருக்கலாம். மாறி யிருக்கும் என்று அறுதியிட்டுக் கூற முடி யாது என்பதும் உண்மை. கடந்த காலத் தைப் பற்றி அதிகமாக கவலைப்பட்டால் மட்டுமே எதிர்காலம் பிரகாசமாக ஆகி விடாது. அதே சமயம் சமகால நிகழ்வு களை அலசி ஆராய்ந்து முன் செல்வது தான் அரசியல்.

போராகட்டும், அல்லது தேர்தலாகட் டும், வெற்றி பெற்றால் தனது கொள்கை க்குக் கிடைத்த வெற்றி என்றும் தோல்வி அடைந்தால் அதற்கு அனைத்து உலக முமே காரணம் என்ற மனப்போக்கை தமிழ்ச் சமுதாயம் தனக்கே உரிய, உரி மையாகி விட்ட களிவிரக்கத்தோடு காணத் துவங்கி பல தசாப்தங்கள் உருண்டோடி விட்டன. அவ்வாறான களிவிரக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரக்தி நிலையை அடைந்த போது தான் அன்றைய இளைஞர் சமுதாயம் மிதவாத அரசியலை கைவிட்டுவிட்டு தீவிரவாதப் போக்கில் நம்பிக்கை வைக்கத் துவங்கியது.

இத்தகைய சூழ்நிலை வளர்வதற்கு தமிழ் அரசியல் சமுதாய தலைமைகளே காரணம். அதற்கும் அப்பால் சென்று தேர்தல் சூழ்மங்களை அந்த நிலையில் மட்டுமே பார்த்து வந்தால் தான் தமிழரின் அரசியல் முழுமை பெறும். இனப்பிரச்சினை ஒரு கொள்கை சார்ந்த விடயம். அதனை அரசியல் ஆக்குவது எவ்வளவு முக்கியமோ, அது போன்றே அரசியல் என்பது இனப்பிரச்சினை மட்டுமே என்ற எண்ணத்தில் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் இன்னமும் தொடர்ந்து இருக்கக் கூடாது. இத்தகைய தேவையான மாற்றங்களுக்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்ளாததினால் தான் மிதவாத தமிழ்க் கட்சிகள் அவர்களை "ஏமாற்றி விடும்" சூழலுக்கு தள்ளி விடப்படும். ஜனநாயக அரசியல் என்பது கொள்கை ரீதியாக மட்டுமே தங்களது மக்களுக்கும் தங்களது வாக்கு வங்கியினருக்கும் ஆதரவாக குரல் கொடுப்பதற்கும் அமைதிப் போராட்டங்கள் நடத்துவதற்கும் என்ற காலம் மலையேறி விட்டது. நியாயமான அரசியலில் கூட தங்களது வாக்கு வங்கியினரின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் தேர்தல் அரசியலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டிய சூழ்நிலை உலகளவில் தோன்றி தசாப்தங்கள் பல உருண்டோடி விட்டன.

ஆனால், "அடைந்தால் மஹாதேவி, இல்லையேல் மரணதேவி" என்ற எம்.ஜி.ஆர் பட சித்தாந்தத்தின் அடிப்படையில் மட்டுமே அரசியல் செய்து வந்த தற்கால தமிழ் மிதவாத அரசியல்வாதிகள்

> கிழக்கு மாகாண அரசியல் சூழலில் முஸ்லிம் கட்சிகளில் ஒன்றைச் சேர்ந்த உறுப்பினரே முதல்வர் ஆவார் என்ற எதிர்பார்ப்பும் பரவலாக இருக்கிறது. ஆனால் அந்தத் தலைமை கூட்டமைப்பை நம்பிச் செயல்படப் போகிறதா, அல்லது அரசு சார்ந்த கட்சிகளுடன் ஆட்சியில் முக்கிய பங்கு வகிக்கப் போகிறதா என்பதே தற்போதைய கேள்வி

கட்சிகள் ஒரு காலகட்டத்தில் காணாமல் போய்விட்டன.

உதாரணத்திற்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலையே எடுத்துக் கொள்ளலாம். இலங்கையின் முக்கியமான இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தத் தேர்தலில் கூட்டமைப்பின் நிலைப்பாடும் எதிர்பார்ப்பும் என்ன? தமிழர் பகுதிகளில் மட்டுமே தேர்தலில் வெற்றி பெறுவதா, அல்லது மாகாண சபையில் மெஜாரிட்டியைக் கைப்பற்றி முதலமைச்சர் பதவியைத் தனதாக்கிக் கொள்வதா? இடைப்பட்ட காலகட்டத்தில் முன்னது இனிக்கும். காரணம், கூட்டமைப்பு போருக்குப் பிந்தைய தற்போதைய காலகட்டத்திற்குத் தன்னை பலவாறாகத் தயார்படுத்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இதில் இல்லை.

ஆனால், தேர்தலுக்குப் பிந்தைய காலகட்டத்தில் தமது மக்களுக்கு ஏதாவது நல்லது அரசுமூலமாகச் செய்ய வேண்டிய நிலையில், கூட்டமைப்பு போன்ற கட்சி தங்களை இன்னமும் மாற்றிக் கொள்ளவில்லை. இத்தகைய வழிமுறை மக்களின் வாழ்விற்கு வழிவகுக்காது. மிதவாத அரசியல்வாதிகள் மீண்டும் தங்களைக் காணாமல் போக்கிக் கொள்வதற்கான முதல்படி என்று தான் இதனைப் பார்த்துக் கவலைப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது குறித்துப் பேசும் தமிழ் அரசியல் தலைமைகள் இரு மாகாண சபைத் தேர்தல்களுமே ஒருசேர நடைபெற்றிருந்தால் தங்களது நிலைப்பாட்டை என்னவென்று பிரசாரம் செய்திருக்கும்? வடக்கு மாகாணத்திற்கு ஒரு வாக்குறுதி, கிழக்கு மாகாண மக்களுக்கு வேறொரு வாக்குறுதி என்று தங்களது தீர்வுத் திட்டத்தையே இரண்டாக ஆக்கி இருக்குமா? அல்லது, போருக்கு முந்தைய காலகட்டம் துவங்கி இன்று வரை பேசப்பட்டு வரும் வடக்கு முழுமைக்கும் கிழக்கின் ஓர் அலகிற்குமான இணைப்பு என்பதோடு நிறுத்தியிருக்குமா?

அவ்வாறானால் ஒன்றுபட்ட தமிழ் மாகாணத்திற்கு திருகோணமலையே தலைமையகமாக இருக்கும் என்று "தந்தை" செல்வா அளித்த வாக்குறுதி என்னாவது? அதன் அடிப்படையில் தானே வட தமிழர்களின் அரசியலில் பங்கு பெற முடியாதிருந்த கிழக்குத் தமிழர்களின் ஆவலையும் அபிலாஷைகளையும் தூண்டிவிட்டார்கள். போராட்டங்களிலும் போரிலும் அவதிப்பட்டுவிட்டு இன்று வடக்கு மாகாணம் மட்டுமே முக்கியத்துவம் பெறும் வகையில் ஓர் தீர்வு என்றால், கிழக்கு வாழ் தமிழர்களின் தியாகத்திற்கு கிடைத்த பரிசு தான் என்ன?

போர் முடிந்த தற்போதைய காலகட்டத்தில் இனப் பிரச்சினையும் அது சார்ந்த தீர்வும் இது போன்ற நோக்கத்தில் அலசி ஆராய்வது நிறுத்தப்பட வேண்டும். மாறாக, இருப்பதைச் சமைத்து உண்டுவிட்டு மட்டுமே, பறப்பது குறித்து ஆராய்ச்சி செய்ய தமிழ்த் தலைமையும் தமிழர் சமுதாயமும் தங்களைப் பழக்கிக் கொள்ள வேண்டும். தற்போதைய சூழ்நிலையில், பிள்ளையான் என்றல்ல, எந்த ஒரு தமிழ்த் தலைவரும் கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சராக வர முடியுமா என்ற கேள்வி உள்ளது.

கிழக்கு மாகாண அரசியல் சூழலில் முஸ்லிம் கட்சிகளில் ஒன்றைச் சேர்ந்த உறுப்பினரே முதல்வர் ஆவார் என்ற எதிர்பார்ப்பும் பரவலாக இருக்கிறது. ஆனால் அந்தத் தலைமை கூட்டமைப்பை நம்பிச் செயல்படப் போகிறதா, அல்லது அரசு சார்ந்த கட்சிகளுடன் ஆட்சியில் முக்கிய பங்கு வகிக்கப் போகிறதா என்பதே தற்போதைய கேள்வி. அந்த நம்பிக்கையை முன்னால் வரும் முஸ்லிம் கட்சித் தலைமைக்கு கூட்டமைப்பு வழங்கி அதன் வழி கடைசிவரை இருக்க முடியுமா என்பதே தற்போதைய கேள்வி.

அதாவது, உலகளவில் அறியப்படும் தனது அரசியல் சித்தாந்தத்தை மட்டுமே முன்னிறுத்தி கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து கூட்டமைப்பு அரசியல் செய்யப் போகிறதா? அல்லது, கொள்கை வேறு, மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் வேறு என்ற வகையில் செயல்பட தன்னை தயார்படுத்திக் கொள்ளப் போகிறதா? இதுவே கிழக்கு மாகாணத் தேர்தலில் முன்வைக்கப்படும் முக்கிய கேள்வியாக இருக்க வேண்டும். ஆனால் கேள்வியின் தாக்கமும் ஆழமும் கருதி, தேர்தல் முறைகேடுகளே இந்தத் தேர்தலிலும் முக்கிய பிரச்சினையாக ஆக்கப்படும், மாற்றப்படும்! அப்புறம் எங்கே தோன்றும் உதயம்? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்புகள் சீர்குலைந்துள்ளமையால் மாணவர்கள் மாத்திரமல்ல பெற்றோர்களும் மன அழுத்தங்களுக்குள்ளாகின்றனர். இதனால் பல சமூக பிரச்சினைகள் தோன்றும் ஆபத்து



# Z புள்ளி – இலங்கையின் கல்வி முறைமையில் எழுந்துள்ள சர்ச்சை

## அறிமுகம்

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக் கழகமானியங்கள்ஆணைக்குழுவினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட Z புள்ளிகளும் பல்கலைக்கழக அனுமதிக்கான மாணவர் வரிசை நிலைகளும் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் பிரச்சினைகளைக் கிளப்பியுள்ளன. மாணவரும் பெற்றோரும் எதிர்கொண்ட பிரச்சினைகளின் விளைவாக மனித உரிமை மீறல் என்னும் அடிப்படையில் பரீட்சைத் திணைக்களம் மற்றும் உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வழக்குகளை விசாரித்த மீயுயர் நீதிமன்றம், பிரச்சினையை ஆராய்ந்ததன் பின்னர் மீண்டும் Z புள்ளிகள் இரு பரீட்சைகளுக்கும் வெவ்வேறாகக் கணிப்பிடப்பட்டு மாணவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமெனத் தீர்ப்பளித்துள்ளது.

இரண்டாவது முறையும் அவசரம் அவசரமாக வெளியிடப்பட்டுள்ள Z புள்ளிகளும், வரிசைப்படுத்தல்களும் முன்னரிலும் பார்க்கப் பல புதிய பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளன. இப்பிரச்சினைகளுக்குப் பொருத்தமான தீர்வினை வழங்கும் முறைகளையிட்டுப் பல்வேறு தரப்பினரும் குழப்பமடைந்துள்ளனர்; சிந்தனையில் மூள்கியுள்ளனர்.


## Z புள்ளியை அறிமுகப்படுத்தியதன் பின்னணி

இலங்கையில் இலவசக் கல்வியைத் தாய்மொழியில் வழங்கத் தொடங்கிய தன் பின்னர் பெருந்தொகையானவர்கள் உயர்கல்வியைக் குறிப்பாக பல்கலைக் கழகக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்புகள் திறந்துவிடப்பட்டன. உயர் குழாத்தினரின் சொத்தாக இருந்து வந்த பல்கலைக்கழகக் கல்வியைச் சாதாரண மக்களும் அனுபவிக்கக் கூடிய நிலைமைகள் உருவானமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். 1960கள் வரையில் அக்காலத்திலிருந்த ஒரு சில பல்கலைக்கழகங்களுக்கு சிறு தொகை மாணவர்களே அனுமதிக்கப் பட்டனர். 1970களின் முதல்பகுதியளவிலே பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக எழுந்த பிரச்சினைகள் நாட்டில் படித்த இளைஞர்மத்தியில் அமைதியீனங்களுக்கு காரணமாயின என்பதால் அனுமதிக் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டிய தேவைகள் உருவாயின. இதுகாலவரையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலும் திறமைச் சித்தியின் அடிப்படையிலும் வழங்கப்பட்டு வந்த அனுமதி முறைகள் மாற்றங்களுக்கு உள்ளாயின.

1970களிலிருந்து போதனா மொழியின் அடிப்படையில் சோதனைப் புள்ளிகள் தரப்படுத்தப்பட்டு, ஒரு சீரான அளவுத் திட்டத்திற்குக் குறைக்கப்பட்டு, ஒரு போதனா மொழியில் தகுதிபெறுவோர் தொகையை அந்தமொழியின் மூலம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் தொகையுடன் தொடர்புபடுத்தி வெவ்வேறு புள்ளிகளின் அடிப்படையில் பாடவாரியாகவும் போதனா மொழிவாரியாகவும் மாணவர்கள் தரப்படுத்தப் பட்டனர். 1974 இலிருந்து பல்கலைக் கழகங்களுக்கான அனுமதி மாவட்ட ரீதியாக அறிமுகமாயிற்று, மாவட்ட ரீதியான அனுமதி முறையில் திறமைக்கு முக்கிய இடம் வழங்கப்பட்ட வேளையில், குறிப்பிட்ட மாவட்டத்தில் இருந்து அனுமதி பெற்றோர் பற்றிய தீர்மானம் அவ் மாவட்டத்தின் சனத்தொகை விகிதாசாரத் திற்கு ஏற்ப அமைந்தது. இத்தகைய அனுமதி முறை 1977 வரை தொடர்ந்து நீடித்தது.

1978 இல் மேற்கூறியவாறான தரப் படுத்தல்கள் கைவிடப்பட்டு மூலப்புள்ளிகளின் அடிப்படையில் அனுமதியை வழங்க வேண்டும் என்னும் முடிவுக்கு வந்தனர். இந்தமுறையின் கீழும் புள்ளிகள் தரப்படுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக இந்த முறையின் கீழும் தகுதி பெற்றிருக்கக்கூடிய மாணவர்கள் அனைவருக்கும் அனுமதி பெறக்கூடிய வாய்ப்புகள் இருந்தன. மூலப்புள்ளிகளைக் கவனத்திற் கொண்டு 30% திறமைச் சித்தியின் அடிப்படையிலும் 55% மாவட்டங்களிலுள்ள சனத்தொகையின் அடிப்படையிலும் 15% பின்தங்கிய மாவட்டங்கள் என்ற வகையிலும் வழங்கப்பட்டன. இத்தகைய அணுகுமுறைகள் தொடர்பாக எழுந்துவந்த பிரச்சினைகளால், மேற்கூறிய பங்கீடுகளின் சத வீதங்கள் காலத்துக்குக் காலம் மாற்றங்களுக்குள்ளாயின. பொருத்தமான மற்றும் நியாயபூர்வமான அனுமதிக்கொள்கையை அறிமுகம் செய்யவேண்டிய தேவையை இவை உருவாக்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பேராசிரியர்
மா.கருணாநிதி

## Z புள்ளி அடிப்படையில் அனுமதி

பல்கலைக்கழக அனுமதியில் Z புள்ளியை அடிப்படையாகக் கொண்டு தரப்படுத்தும் செயல்முறையை 2001 இலிருந்து ஆரம்பித்தனர். க.பொ.த. உயர்தரத்தில் கற்பிக்கப்படும் பாடங்களின் அடிப்படையில் பெறப்படும் மொத்தப்புள்ளிகள் மட்டும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது நியாயமற்ற தன்மை என்ற முடிவின் அடிப்படையில் புள்ளிகளைத் தரப்படுத்துவதற்கான பல முன்னேற்றகரமான கணிப்பீட்டு முறைகளைத் தேடிய வேளையில் Z புள்ளி அணுகுமுறைகள் பொருத்தமாக இருக்குமென புள்ளியியல் வல்லுநர்கள் முடிவுசெய்தனர். Z புள்ளியின் அடிப்படைமுறையிலான அனுமதியை பின்வரும் முறையில் நியாயப்படுத்தினர்.

மாணவர்கள் தோற்றும் பாடங்களின் கடினத்தன்மையில் வேறுபாடுகள் உள்ளன. இவ்வேறுபாடுகள் துறைகளிடையிலும் துறைகளுக்குள்ளும் நிலவுகின்றன. உதாரணமாக விஞ்ஞானத்துறையில் கணிதம்,பௌதிகவியல் மற்றும் இரசாயனவியல் முதலியவை கடினமானவை என்றும் உயிரியல் துறையோடு தொடர்புடையவை இலகுவான பாடங்கள் என்றும் கருதப்படுகின்றன. கலைத்துறையில் பொருளியல், புவியியல், அரசியல் முதலானவை கடினமானவை எனவும் இந்துநாகரீகம், இஸ்லாமிய நாகரீகம், அளவையியலும் விஞ்ஞான முறையும் முதலானவை இலகுவானவை எனவும் வகுக்கப்பட்டுள்ளன. கடினமான பாடங்களில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கும். மறுபுறத்தில் இலகுவான பாடங்களில் எப்பொழுதும் கூடுதலான புள்ளிகளை ஈட்டலாம். பௌதிகவியலில் பெறப்படும் 70 புள்ளிகளுக்கும் உயிரியலில் பெறப்படும் 70 புள்ளிகளுக்கும் இடையில் தராதரம் வேறுபட்டிருக்கும். அவ்வாறே கலைத்துறையிலும் கடின மற்றும் இலகுவான பாடங்களுக்குள் புள்ளிகளின் தராதரம் வேறுபடும். இத்தருணத்தில் மூலப்புள்ளிகளின் மொத்தத்தைக் கொண்டு அனுமதி வழங்கப்படுமானால் இலகுவான பாடங்களுக்குத் தோற்றுவோர் கூடுதலான மொத்தப்புள்ளிகளை ஈட்டிக்கொள்ள வாய்ப்புண்டு. கடினமான பாடங்களுக்குத் தோற்றுவோர் அனுமதியை பெறுவதற்கான வாய்ப்புகள் குறைந்து செல்லும். மேலும் இவ்விருசாரரின் தேர்ச்சி மட்டங்களும் மதிப்பீட்டு முறைகளும் வேறுபட்டவை. நியாயத் தன்மையின் அடிப்படையில் அனுமதியை வழங்குவதற்கு தரப்படுத்தல் அவசியம் என்பதை இங்கு உணரலாம். இத்தருணத்திலேயே Z புள்ளி அணுகுமுறையை பயன்படுத்துவதற்கான தேவைகள் உருவாயின.

## Z புள்ளி என்பது யாது?

Z புள்ளி ஒரு தரப்படுத்தப்பட்ட புள்ளியாகும். ஓர் அளவுத் திட்டத்திற்கமைய தரவுகளைத் தரப்படுத்துவதற்குரிய பொதுவான வழிமுறையாக அமைவதுடன், Z புள்ளிகளைப் பயன்படுத்தி இலகுவில் ஒப்பீடுகளையும் மேற்கொள்ளலாம். மேலும் புள்ளியானது சகல வகையான தரவுகளுக்கு ஒரு பொதுவான அளவுகோல் போன்றது. சாதாரண பரம்பல் ஒன்றிலே ஒரு புள்ளி எங்கு இருக்கும் எனவும் மற்றும் சராசரி அல்லது பெறுமானத்தில் இருந்து எவ்வளவு தூரம் விலகியிருக்கும் எனவும் Z புள்ளி எடுத்துக்காட்டும். Z புள்ளியைக் கணிப்பிடுவதற்குப் பின்வரும் வாய்ப்பாடு பயன்படுகிறது.

$$Z = \frac{X - \overline{X}}{SD}$$

**X = மாணவரின் தனிப்பட்ட புள்ளி**

$\overline{X}$ குறித்த பாடத்திற்குத் தோற்றிய மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் சராசரி.

SD = நியம விலகல்.

ஒரு சோதனையிலே ஒரு மாணவன் பெற்ற மூலப் புள்ளியிலிருந்து இச்சோதனையில் ஒரு தொகுதி மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் சராசரியை அல்லது இடைப்பெறுமானத்தைக் கழித்து, அத்தொகுதி மாணவர் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட நியம விலகலால் பிரிக்கும்போது கிடைக்கும் பெறுமானம் Z புள்ளியாகும். நியம விலகல் அலகுகளின் அடிப்படையில் ஒருபுள்ளி எவ்வளவுதூரம் கூடுதலாக அல்லது குறைவாக இருக்கின்றது என்பதை இது எடுத்துக்காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைகளில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் பொதுவாக 0 இலிருந்து 100 வரை வரிசைப்படுத்தப் படுகின்றன. Z புள்ளியைக் கணிப்பிடுவதற்கான தரவுகள் எப்பொழுது இத்தகைய வீச்சினுள் இருக்க வேண்டும் என்பதில்லை. Z புள்ளியைக் கணிப்பிடும் செயல்முறை இலகுவானதாகத் தெரிந்தாலும் பெறப்பட்ட Z பெறுமானங்களுக்கு மிகக் கவனமாக வழங்குதல் வேண்டும். கணிப்பீடுகள் மூலம் பெறப்பட்ட அநேகமான Z பெறுமானங்கள் நடுப்பகுதியைச் சார்ந்து காணப்படும். அதாவது 0-99 சதவீதமான மாணவர்களின் Z புள்ளிகள் - 3 இலிருந்து +3 வரையிலான வீச்சுக்குள் இருக்கும். அதேவேளையில் Z புள்ளியானது பல தசம எண்களுடன் கூடியதாகவும் இருக்கும். மாணவர்கள் தோற்றிய மூன்று பாடங்களுக்குமான Z புள்ளிகளின் மொத்தத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கான வரிசைநிலை மாணவர்கள் தெரிவு செய்யும் கற்கை நெறிகளுக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

Z புள்ளியானது மாகாணம் மற்றும் மாவட்ட அடிப்படையில் நிலவும் கல்வி வசதிகளைப் பிரதிபலிப்பதில்லை. அல்லது மாவட்ட பங்கீட்டு முறைக்கு பிரதியீடாகவும் இருக்காது. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கு மாவட்டப் பங்கீடு அறிமுகம் செய்யப்பட்டமைக்கு பல காரணங்கள் இருந்தன. பாடசாலை வசதிகள், கற்றல் - கற்பித்தல் செயல்முறைகளின் தராதரங்கள், கற்றலுக்கான பாடசாலைகளுக்கு அப்பாலுள்ள காரணிகளில் மாவட்ட ரீதியான சமநிலையின்மை நிலவுதல் பெறுபேறுகளில் செல்வாக்குச் செலுத்தும் என்பதைக் காரணமாகக் கொண்டு மாவட்ட பங்கீட்டுக்கான சார்பான மற்றும் எதிரான வாதங்கள் இருந்து வருகின்றன. ஒரு மாவட்டத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் எவ்வகையான பாடசாலையிலிருந்து தோற்றுகிறார் மற்றும் அவரது உளச்சார்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்தல் நியாயமானதாக இருக்கும் என்ற வாதம் பின்னர் கவனத்தில் எடுக்கப்படலாயிற்று.

## Z புள்ளி தொடர்பாக இன்று எழுந்துள்ள பிரச்சினை

2011 இல் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு பழைய பாடத்திட்டம், புதிய பாடத்திட்டம் என இருவகைப்பட்ட பாடத்திட்டங்களுக்கு அமைவாக



மாணவர்கள் தோற்றினர். இவ்விரு பாடத்திட்டங்களுக்குமென இருவேறுபட்ட வினாத்தாள்களும் வழங்கப்பட்டன. இரு பரீட்சைகளுக்குமான மதிப்பீடுகளும் வெவ்வேறாக நடைபெற்றன. ஆயினும் இரண்டு பரீட்சைகளுக்குமான புள்ளிகளின் Z புள்ளிகளைக் கணக்கிடத் தொடங்கிய வேளையில் அதனை எவ்வாறு கணக்கிடுவது என்ற வினா பரீட்சைத் திணைக்களத்தினால் இறுதி நேரத்தில் முன்வைக்கப்பட்டது. மறுபுறத்தில் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கு எடுத்த காலதாமதம் மாணவர் மற்றும் பெற்றோர் மத்தியில் பலவிதமான குழப்பங்களை ஏற்படுத்தியமையால் மேலும் தாமதமின்றி முடிவுகளை வெளியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இரண்டு வெவ்வேறு பரீட்சைகளுக்கான Z புள்ளிகளைத் தொடர்ச்சியானதொரு அளவுத் திட்டத்திற்குக் கொண்டுவருவது பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதில் இருந்த குழப்பநிலை பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதங்களை ஏற்படுத்தியது.

Z புள்ளிகள் மூன்று வகையில் அமைந்திருக்க வேண்டும் என்பது மானியங்கள் ஆணைக்குழுவின் வேண்டுகோளாக இருந்தது. பழைய பாடத்திட்டத்திற்கான Z புள்ளிகள் 2, புதிய பாடத்திட்டத்திற்கான Z புள்ளிகள் 3, இருபாடத்திட்டங்களுக்கும் பொதுவான Z புள்ளிகள். இந்தவகையில் வகைப்படுத்திய விபரங்களை வெளியிடுவது சிறந்தது என்பது தெரிந்திருந்தும், அதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்ற காரணத்தினால் உடனடியாக முடிவுகள் வெளியிடப்பட்டமை பல சர்ச்சைகளை உருவாக்கியிருந்தன.

Z புள்ளிகள் வெளியிடப்பட்டதன் பின்னர், உரிய தேர்ச்சியைப் பெற்றிருந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் தமக்கு உரிய நியாயம் வழங்கப்படவில்லை என்பதை முன்வைத்து நீதிமன்றில் மேன்முறையீடு செய்தனர். இம்முறையீடுகளை விசாரணை செய்த மீயுயர் நீதிமன்று இரண்டு பாடத்திட்டங்களுக்குமாக Z புள்ளிகளை வெவ்வேறாக வெளியிடுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவைப் பணித்தது. அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ள Z புள்ளிகள் மீண்டும் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன.

முதலில் வெளியிடப்பட்ட Z புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்கள் பலர் புதிய Z புள்ளிகளின் அடிப்படையில் அத்தகுதியை இழந்துள்ளனர். குறிப்பாக பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தோற்றிய பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவோர் மனித உரிமை மீறல் என்ற அடிப்படையில் மாணவர்கள் தமது முறையீடுகளை மீண்டும் மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் பல்கலைக்கழக ஆணைக்குழுவுக்கும் முன்வைத்துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மட்டுமல்லாது அவர்களுடைய பெற்றோரும் தமது எதிர்பார்ப்புகள் சீர்குலைந்துள்ளமையால் மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர். இப்பிரச்சினை பல சமூகப் பிரச்சினைகளுக்கு வழிகோலியுள்ளது.

பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாக 2012 இலும் பரீட்சைக்கும் தோற்றும் மாணவர்கள் பலர் இருக்கின்றனர் என்பதால் Z புள்ளியைக் கணிப்பிடும் பிரச்சினை மீண்டும் எழ இடமுண்டு. பரீட்சைத் திணைக்களம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் புள்ளி விபரவியலில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற வல்லுநர்கள் ஒன்று சேர்ந்து கடந்தகால நிலைமைகளை நன்கு ஆராய்ந்து மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் பாதிப்பு உண்டாகாத வகையில் பொருத்தமான தீர்வுகளை முன்வைத்தல் அத்தியாவசியமான - உடனடியான தேவையாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத் தேர்தலில் நாம் கவனிக்க வேண்டியவை



தெ.மதுசூதனன்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களது பிரச்சினைகளையும் அதன் ஸ்தாபகத் தலைவரான எம்.எச்.எம்.அஷ்ரபின் தனிமனித ஆளுமையையும் தலைமைத்துவப் பண்புகளையும் மூலதனமாகக் கொண்டே வளர்ச்சியடைந்த கட்சியாகும். ஆனால் 2000 ஆம் ஆண்டு அஷ்ரப் மரணித்ததன் பின்னர் முஸ்லிம் காங்கிரஸினுள் பல் வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுப் பின்னர் கட்சி துண்டுதுண்டாகச் சிதறியது.

எவ்வாறாயினும் இன்றுவரை முஸ்லிம் காங்கிரஸ் ரவூப் ஹக்கீமின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. கட்சியிலிருந்து பிரிந்து போனவர்கள் வேறு பெயர்களிலேயே இயங்கி வருகின்றனர். இங்கு கொள்கை சார்ந்த அடிப்படையில் பிளவுகள் ஏதும் ஏற்படவில்லை. மாறாக தேர்தல் அரசியலையும் அதன் வெற்றிகளையும் மையப்படுத்தியதொன்றாகவே பிளவுகள் அமைந்தன. இதனால் இவர்கள் யாவரும் ஆளும் அரசு அதிகார வர்க்கத்தில் எப்போதும் ஒன்றிணையக் கூடியவர்களாகவே உள்ளனர்.

மத்தியில் அமைச்சுப் பதவிகள் மற்றும் வேறு உயர்பதவிகள் எதுவும் இல்லாமல் முஸ்லிம் அரசியல் முன்னோக்கி நகர முடியாமல் உள்ளது. அந்த தலைமைகளும் வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகள் விருப்புகள் சார்ந்து இயங்கக்கூடியவர்களாக இல்லை.

இலங்கையில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் தொடர்ந்துவரும் சிங்கள ஆட்சியாளர்களினால் அடக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் சமத்துவ அந்தஸ்து மறுக்கப் பட்டவர்களாகவும் நடத்தப்பட்டு வருகின்றனர். இதுவரை இவர்களுக்கான நீதி வழங்கப்படவில்லை. இதுகாலும் தமிழ்த் தரப்பினரால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர்கூட வட, கிழக்கு வாழ் மக்களுக்கான நியாயமான தீர்வுகள் கிடைப்பதில் உத்தரவாதப்படுத்தும் நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படுவதாக இல்லை.

வடக்கு, கிழக்கு சார்ந்த மக்களுக்கான இருப்பும் வாழ்விடமும் அரசியல் பரிமாணத்தின் மூலவிசையாக அமைகின்றது. தமிழ் மக்கள்மற்றும்முஸ்லிம்மக்கள்யாவரினதும்எதிர்காலத்திற்கான அரசியல் கோரிக்கைகளை வடிவமைப்பதிலும் அவற்றை நியாயப்படுத்துவதிலும் இந்தப் பாரம்பரிய பிரதேசம், பிரதேசத் தொடர்ச்சி, பிரதேச ஒன்றிணைப்பு முக்கியம் பெறுகின்றது. இதனால் தான் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் எழுச்சி பெற முடிந்தது. முஸ்லிம் காங்கிரஸை அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாகவும் உருவாக்க முடிந்தது.



தேவநேசன் நேசையா

கொழும்பைத்தவிர, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்ந்த 3 மாவட்டங்களில் அரசாங்க அதிபராக கடமையாற்றும் அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருந்தது. அம்மாவட்டங்களில் ஒன்றாக மட்டக்களப்பு இருந்தது. மட்டக்களப்பு உட்பட யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய 3 மாவட்டங்களிலும் தலா 3 வருடங்கள் அரசாங்க அதிபராகப் பணியாற்றினேன்.

இதில் மன்னார் மாவட்டத்தில் 1965-1968 காலப் பகுதியிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1968-1970 காலப்பகுதியிலும் யாழ்.மாவட்டத்தில் 1981-1984 காலப்பகுதியிலும் நான் பணிபுரிந்தேன். இந்த 3 மாவட்டங்களையும் சேர்ந்த தமிழ்,முஸ்லிம் மக்களிடையே கணிசமான வித்தியாசங்கள் காணப்பட்டன.

குறிப்பாக வேலைவாய்ப்புகள்,சமூக மற்றும் கலாசார ரீதியில் இந்த வித்தியாசங்கள் காணப்பட்டன. அது மட்டுமல்லாது மேற்படி 3 மாவட்டங்களிலும் சிங்கள மற்றும் பறங்கி இன மக்கள் உட்பட ஏனைய இனங்களைச் சேர்ந்த மக்களும் இருந்தனர். 3 மாவட்டங்களும் வித்தியாசமான தன்மைகளைக் கொண்டவை.

விஷேடமாகமன்னார்மற்றும்மட்டக்களப்புமாவட்டங்களில் இயற்கை அழகுகளை நான் இரசிக்கக் கூடியதாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது நிலைமைகள் கஷ்டமாக இருந்தன. ஏனெனில் அங்கு எப்போதுமே பதற்ற நிலைமையொன்று காணப்பட்டது. அந்த வகையில் அதுவொரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. இராணுவம் மக்களிடையேயான முரண்பாடுகள் காரணமாக தினந்தோறும் உயிரிழப்புகளை காணக்கூடியதாக இருந்தது.

எவ்வாறிருப்பினும் 3 மாவட்டங்களும் எனக்கு திருப்திதரக் கூடியதாகவே இருந்தது. அதாவது,மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இயற்கை அழகுகளினால் யாழ்.மாவட்டத்தில் 60 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்களுக்கு நான் ஆறுதலாக இருக்க முடிந்ததன் மூலம் இந்த திருப்தி கிடைத்திருந்தது. 3 மாவட்டங்களும் சேர்ந்து சுமார் 15 இலட்சம் தமிழ் மக்களுடனும் சுமார் 5 இலட்சம் முஸ்லிம் மக்களுடனும் அதேபோல் கணிசமான சிங்கள மக்களுடனும் தொடர்புகளைப் பேணுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

மட்டக்களப்பில் நீளமான வாவி இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பக்கம் எழுவான்கரை (Shore of the rising sun) மறுபக்கம் படுவான்கரை (Shore of setting sun) என்று மிகவும் அழகான தேசமாக இருந்தது. அங்கு எத்தனையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்று நிலைமைகள் என்ன? வடக்கு, கிழக்குப் பிரிக்கப்பட்டு தனித்தனியான மாகாணசபை மூலம் நிருவாகம் நடைபெறுகின்றது. இந்தப் பின்புலத்தில் தான் தற்போது கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறுகின்றது.

கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதன் பின்னர் மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றபோது இந்த மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவில்லை. தேர்தலில் இருந்து ஒதுங்கி யிருந்தது. இதனால் அப்போது வித்தியாசமான தேர்தல் வியூகங் கள் உருவாகின. அத்தருணத்தில் கிழக்கை மையப்படுத் திய தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அதிகம் பயன்பெற்றார்கள். சந்திரகாந்தன் முதலமைச்சரானார். விநாயகமூர்த்தி முரளிதரன் சுதந்திரக்கட்சி அரசியலில் சரணாகதியடைந்தார்.

அப்போது ஐக்கிய தேசியக்கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து ஓரணியாகப் போட்டியிட்டது. இதன் மூலம் முஸ்லிம் சிங்கள வாக்குகளை பெருமளவு பெற்றுக்கொள்ளலாமென்பது முஸ்லிம் காங்கிரஸின் வியூகமாகவிருந்தது. இதை விட தமிழ்த்தேசியக் கூட்டமைப்புகளின் வாக்குகளையும் குறிவைத்திருந்தது.

இறுதியில் ஆளும் அரச தரப்பே வெற்றி பெற்றது. கிழக்கில் தனியான அரசியல் சமிக்ஞைகள், வியூகங்கள் சுழல்வட்டமாக உருப்பெற்றன. குறிப்பாக முஸ்லிம் முதலமைச்சர் என்ற கோஷம் அரங்குக்கு வந்தது. அது வந்த வேகத்துடனேயே மறைந்தது. 2012 தேர்தலிலும் முஸ்லிம் முதலமைச்சர் என்ற கோஷம் அரங்குக்கு வந்தது. ஆனால் அதற்கான வியூகங்கள் வெளிப்படையாக அமையவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் அரச தரப்புடன் பலமட்டப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பின்னர் தனியாக தேர்தலை சந்திக்கத் தயாரானது.

மாகாணசபைத் தேர்தல் நெருங்கும் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் முஸ்லிம் காங்கிரஸ் தம்முடன் இணைந்து போட்டியிடுமாறு நட்புக்கரம் நீட்டினார். சில மட்டங்களில் மறைமுக பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன. ஆனால் இரண்டு கட்சிகளுக்குமிடையில் இணக்கம் வரவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் அரச கூட்டணிக்கு எதிராக இயங்கத் தயாராகவில்லை. அரசிலிருந்தும் வெளியேறி தேர்தலை தனித்து எதிர்கொள்வதற்கான துணிச்சலும் இருக்கவில்லை. அதைவிட தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைவது தமது அரசியல் இருப்புக்கு ஆபத்தாக முடியும் என்று மு.கா.கணக்குப்போட்டது. தேர்தல் முடிவுகளைப் பொறுத்து அத்தருணத்தில் தனக்குச் சாதகமான முடிவுகளை எடுக்க முஸ்லிம் காங்கிரஸ் தயாராகவுள்ளது.

ஆளும் அரசு தரப்பில் முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை வகித்துக் கொள்ளும் முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் முடிவுக்குப் பின்னர் அதிகமாக ஆளும் தரப்புக் கூட்டணிக்கு ஆதரவாகவே முடிவெடுக்கும் சந்தர்ப்பங்கள் தெளிவாகவுள்ளன. அமைச்சுப் பதவிகளைத் துறந்து வேறு முடிவுகள் எடுக்கும் அளவிற்கு முஸ் லிம் காங்கிரஸுக்கு துணிச்சலும் அரசியல் தெளிவும் இல்லை.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தேர்தல் காலங்களில் மட்டும் முஸ்லிம் மக்களுக்காக குரல் கொடுக்க முற்படுவதும், அத் தருணத்தில் இன ஐக்கியம் பற்றிப் பேசுவதும் அரசியல் படுமோச மான சந்தர்ப்பவாதமாகும். புலிகள் இயக்கம் அழிக்கப்பட்ட பின்னர் வடகிழக்கு வாழ் மக்களின் அரசியல் எதிர்காலத்திற்கான உருப்படியான சிந்தனையும் திட்டமும் நடைமுறையும் இல்லா திருப்பது கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் அவர்களது தலை மைத்துவத்தின் அரசியல் வெறுமையை முதிர்ச்சியின்மையைத் தான் வெளிப்படுத்துகிறது.

தமிழ்ச் சமூகம் வடக்கு, கிழக்கில் வாழும் இன்னோர் அழகான கடற்கரைகளும் குடாக்களும் இருந்தன. அந்தக் காலத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களம், பறங்கியர் என அனைத்து இன மக்களிடையேயும் அழுத்தமான ஐக்கியம் காணப்பட்டது.

எனினும், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங் களில் பணியாற்ற எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கவில்லை. அந்த மாவட்டங்களிலும் அழகிய கடற்கரைகள் உட்பட அழகான இடங்கள் இருந்தன. மேற்படி மாவட்டங்களில் ஒன்றான மட்டக்களப்பு அங்கம் வகிக்கும் கிழக்கு மாகாணத் தில் தான் அரசாங்கம் தற்போது தேர்தல் நடத்தப்போகிறது.

ஆனால்,என்னுடைய காலத்தில் அமைதியாகவும், அழ காகவும் இருந்த மாவட்டங்களில் தற்போது மோதல்கள், அர சியல் விவகாரங்கள் என பல பிரச்சினைகள் ஏற்பட்டுவிட்டன. ஒரு வித்தியாசம் என்னவெனில் மட்டக்களப்பில் சிங்கள ச னத்தொகை மிகக் குறைவாக இருக்கும் அதேநேரம், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சிங்கள மக்களின் சனத்தொகை அதிகமாகக் காணப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் 3 மாவட்டங்களையும் எடுத்துப்பார்க்கும் போது தமிழ்,முஸ்லிம் மக்களின் சனத்தொகையே அதிகமாக இருக்கிறது. இங்கு சிங்கள மக்களின் சனத்தொகையை எடுத்துக் கொண்டால் அதில் குடியேற்றம் செய்யப்பட்டவர்களே அதிகமாக காணப்படுகின்றனர். ஆனால் சில சிங்களக் கிராமங்கள் தமிழ்,முஸ்லிம் கிராமங்களைப் போன்று பல நூற்றாண்டு காலமாக அங்கு இருந்துள்ளன.

இதேநேரம்,வட மாகாண சபைத் தேர்தல் இன்னும் நடத்தப்படாமல் இருப்பது எனக்கு மனவேதனை அளிக்கிறது. வட மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு எந்த வொரு நியாயமான காரணமும் கிடையாது. ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக் கான தேர்தல்கள் ஏற்கனவே வட மாகாணத்தில் நடத்தப்பட்டி ருக்கும் நிலையில் அங்கு மாகாண சபைத் தேர்தலை மட்டும் ஏன் நடத்த முடியாது.

வட மாகாணத்தில் இடம்பெயர்ந்த சகல மக்களும் மீள் குடியேற்றப்பட்டு விட்டனர் என்று அரசாங்கம் கூறும் நிலையில் வடமாகாண சபைத்தேர்தலை மட்டும் ஏன் நடத்த முடியாது?

கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே 4 வருடங்களுக்கு முன்னர் மாகாண சபைத்தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால்,கிழக்கு மாகாண சபையானது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிர காரமும் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அமை வாகவும் செயற்பட முடியாமல் இருக்கிறது. கிழக்கு மாகாண அலுவல்களை அம்மாகாண ஆளுநராக இருக்கும் ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரியே மேற்கொண்டு வருகிறார். மாகாண முதலமைச்சரும் மாகாணசபை உறுப்பினர்களும் இதற்கு இடமளித்து வருகின்றனர். ஆகவே, நடைபெறப் போகும் தேர்தலில் தெரிவு செய்யப்படும் முதலமைச்சரும், உறுப்பினர்களும் இதிலிருந்து வித்தியாசப்பட்டு மாகாண அலு வல்களை அவர்கள் கையாள வேண்டும். எனவே,கிழக்கு மாகாண மக்கள் அதற்கேற்ற பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும்.

இவ்வாறானதொரு விடயமும் நடைபெறும் பட்சத்தில் தமிழ்,முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் இதிலிருந்து பயனடைவர். இந்திய-இலங்கை ஒப்பந்தம் மற்றும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஆகியவற்றின் பிரகாரம் அவ்வாறே செய்யப்பட வேண்டும். கிழக்கு மாகாண முதலமைச்சரும் மாகாண சபை உறுப்பினர்களும் அவ்வாறு செயற்பட்டால் ஏனைய மாகாண சபைகளுக்கும் அதுவொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவமான சமூகமாகிய முஸ்லிம் மக்களை உதாசீனப் படுத்திவிட்டு தமது விடுதலையை அடைந்துவிட முடியாது. அதுபோல் தமிழ் மக்களுடன் உறவுகளைத் துண்டித்துவிட்டு ஆளும் அரசதரப்பினர்கள் மட்டும் கூடிக்குலாவுவதன் மூலம் முஸ்லிம் மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுத்து விட முடியாது. இந்த இரு சமூகங்களும் பரஸ்பரம், ஜனநாயகப் பண்புகளுடன் நெருக்கமாக வாழும் நெறிமுறைகளை, அறங்களை வெளிப்படுத்துவதிலேயே தான் தத்தமக்கான இருப்பையும் அடையாளத்தையும் பாதுகாக்க முடியும்.

முஸ்லிம் காங்கிரஸும் சரி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் சரி தமக்கான அரசியல் வழிமுறைகள் பற்றிய மீள் சிந்தனைக்கும் சுயசிந்தனைக்கும் தயாராகவேண்டும். தமிழ், முஸ்லிம் இரு சமூ கங்களினதும் தனித்தன்மைகளையும் வித்தியாசங்களையும் மதிப்பதும் அங்கீகரிப்பதும் முக்கியம். மாற்று அரசியல் பண்பாட்டை மக்கள் மயப்படுத்துவது இன்றைய காலத்தில் கட்டாயமாகிறது.

இன்றைய தேர்தல் களத்தில் தமிழ், முஸ்லிம் அரசியல் சக்தி கள் யாவரும் ஒட்டுமொத்த தமிழ், முஸ்லிம் மக்களிடையே நட் புறவையும் பரஸ்பர நம்பிக்கையையும் கட்டியெழுப்பு வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். மாறாக வாக்கு அரசியலுக்காக சுயநலமாக சமூகங்களிடையே குரோதங்களை யும் விரோதங்களையும் வளர்க்கும் கயமைத் தனங்களையும் துரோகத்தனங்களையும் தவிர்த்துச் செயற்படுவது முக்கியம். எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கு இணைப்புக்கான ஆரோக்கிய மான பொருத்தமான அரசியலை முன்னெடுப்பதற்கு இத்தேர் தலைப் பயன்படுத்துவது தான் சிறப்பானது. ■

சிறந்த முன்மாதிரியாக இருக்கும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சம அளவில் வாழ்கின்றனர். சிங்கள மக்களும் கணிசமான அளவில் இருக்கின்றனர். ஆகவே, கிழக்கு மாகாண சபையைப் பொறுத்த வரையில் முதலமைச்ச ராக தமிழ் அல்லது முஸ்லிம் ஒருவரும், அமைச்சர்களாக 2 தமிழர்களும்,2 முஸ்லிம்களும்,சிங்களவர் ஒருவரும் வருவதே நாம் எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கும். எனினும் இதுவல்ல அங்கு முக்கியம்.

மாகாணசபை சுதந்திரமானதும் சுயாதீனமானதாகவும் இருப்பதுவே முக்கியம். முதலமைச்சர் என்பவர் எந்த இனத்தவராகவும் இருக்கலாம். சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் முதலமைச்சராக வருவதில் எந்தத் தவறும் கிடையாது. அப்படி வருபவர்கள் சுயாதீனமாக இருக்க வேண்டுமே தவிர, மத்திய அரசாங்கத்துக்கோ அல்லது ஆளுநருக்கோ அடிமை யாக இருக்கக்கூடாது.

தேர்தலில்போட்டியிடும்கட்சிகள்தேர்தலுக்குமுன்னதாகவே கூடி அந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டும். கிழக்கு மாகாண த்தில் மூவின மக்களும் வாழ்வதால் ஏனைய மாகாணங் களுக்கும் அதேபோல் முழு இலங்கைக்கும் முன்மாதிரியாக இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த மாகாணத்திலுள்ள அனைத்து மக்களும் அதை தங்களுடைய மாகாணமாக சிந்திப்பதற்கான சூழலும் வசதிகளும் இருக்க வேண்டும்.

இந்த வகையில் கிழக்கு மாகாணம் இலங்கையில் முன்மாதிரியான மாகாணமாக இருக்கக்கூடிய அதேநேரம், அவ்வாறு இருக்கவும் வேண்டும். ■

சமகாலம் சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்களும் இடம்பெற அழையுங்கள்





7767702
7767703
7322736

7767704
2327827

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுயதணிக்கையின் ஆபத்துக்கள்



பிரான்ஸிலுள்ள "எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள்" என்ற ஊடகச் சுதந் திரத்திற்கான அமைப்பின் 2011 - 2012 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான ஊடகச் சுதந்திரச் சுட்டெண்ணின் படி இலங்கை 163ஆவது இடத்திலும், ஆப் கானிஸ்தான் 150 ஆவது இடத்திலும் இந்தியா131ஆவது இடத்திலும், பங்களா தேஷ் 129ஆவது இடத்திலும், நேபாளம் 106ஆவது இடத்திலும், மாலைதீவுகள் 73ஆவது இடத்திலும், பூட்டான் 70 ஆவது இடத்திலும் உள்ளன. 170 நாடுகளில் ஊடகச் சுதந்திரம் எவ்வாறு உள்ளது என்பது பற்றி "எல்லைகளற்ற ஊடகவி யலாளர்கள்" நடத்திய ஆய்வானது 2012 ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதியான சர்வதேச ஊடகச் சுதந்திர தின த்தன்று வெளியிடப்பட்டது.

"தெற்காசியாவில் ஊடகச்சுதந்திரமும், சுய தணிக்கையும்" என்னும் தலைப்பில் நேபாளத்தின் காத்மண்டுவிலிருந்து வெளிவரும் "ஹிமால் சௌத்ஏஷியன்" என்னும் சஞ்சிகையின் ஆசிரியரான கானாக் மணி தீக்ஷித் அண்மையில் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தில் உரையாற்றினார். அவர் நிகழ்த்திய உரை "சமகாலம்" வாசகர்களுக்காக இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது.

"இலங்கையில் உள்ள ஊடகவிய லாளர்கள் அனுபவித்த மற்றும் அனு பவித்துக் கொண்டிருக்கும் துன்பங் களுடன் ஒப்பிடுகையில் நேபாளத்தில் உள்ள ஊடகவியலாளர்களின் துன்பங் களை ஒப்பிட முடியாது. ஏனெனில் இலங் கையில் உள்ள ஊடகவியலாளர்கள் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அமைப்பினால் உண்டான ஸ்திரமற்ற நிலைமை, அரசாங்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட கலகங்கள், அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் திற்குமிடையே இடம்பெற்ற யுத்தம் ஆகி யனவற்றின் காரணமாகச் சொல்லொ ணாத் துன்பங்களை அனுபவித்தனர். இலங்கையில் 1990ஆம் ஆண்டு றிச்ச ர்ட் டி ஸொய்சா, 2009 ஆம் ஆண்டு லசந்த விக்ரமதுங்க ஆகிய ஊடகவிய லாளர்கள் கொல்லப்பட்டனர். ஊடகவி யலாளர்களுக்கெதிரான ஒடுக்குமுறை கள் இலங்கையில் தொடர்ந்தன. இலங் கையில் ஊடகச் சுதந்திரமானது அடக் கப்பட்டுள்ள நிலையிலும் ஊடகவிய லாளர்களும், ஊடகச் சுதந்திரத்திற்காகப் போராடுகின்ற செயற்பாட்டாளர்களும் தொடர்ந்தும் துணிச்சலுடன் போராடி வருவது பாராட்டுக்குரிய விடயமாகும். இலங்கையில் உள்ள ஊடகவியலாளர் கள் ஊடக அடக்குமுறைச் சட்டங்களுக் கெதிராகவும், ஊடகச் சுதந்திரத்திற் காகவும் தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

"சுயதணிக்கை"யானது மிகவும் வேத னையானது. ஊடகவியலாளர்களாகிய நாம் பல சந்தர்ப்பங்களில் "சுயதணி க்கை"யைக் கடைப்பிடிப்பதற்கு உந்தப் படுகின்றோம். சில சந்தர்ப்பங்களில் "கடுமையான சுயதணிக்கை" யைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. பல் வேறுபட்ட விடயங்களை அறியும் ஆவல் எமக்கு இருப்பதனால் நாம் ஊடகவிய லாளர்களாகப் பணியாற்றுகின்றோம். "சுயதணிக்கை"யை நாம் ஏன் கடைப் பிடிக்கின்றோம் என்பதைப் பற்றி நாம் பரவலாகக் கலந்துரையாட வேண்டியது அவசியம். "சுயதணிக்கை"யின் காரண மாக பொதுமக்களுக்குச் சென்றடைய வேண்டிய பல தகவல்கள் அவர்களைச் சென்றடைவதில்லை என்பதனைத் தூண்டுவதற்கான அச்சுறுத்தல்,கவர்ச்சி அரசியல்,ஊடக நிறுவனங்களில் நிலவும் பிரச்சினைகள் ஆகிய மூன்று காரணி களின் விளைவாக ஊடகவியலாளர் அல் லது ஊடக நிறுவனம் "சுயதணிக்கை" யைக் கடைப்பிடிப்பதற்குத் தள்ளப்பட லாம். மேலும் ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்களுக்கு எதிராக பல்வேறுபட்ட தரப்பினரால் அச்சுறுத்தல்கள் விடுக்கப் படுகின்ற போது "சுயதணிக்கை"யைக் கடைப்பிடிக்கவேண்டியகட்டாயசூழ்நிலை உருவாகின்றது. இருப்பினும், ஆட்சி அதி காரங்களுக்கு எதிராக சவால் விடுக்கக் கூடிய சுய நம்பிக்கை ஊடகவியலாளர் களுக்கு அவசியம். சிலவேளைகளில் இச்சுயநம்பிக்கையானது ஊடகவியலா ளர்களாகிய எம்மிடம் இல்லாமல் இருப் பதையும் அவதானிக்கலாம். ஆனால் தமது உயிரைப் பாதுகாக்க வேண்டியது ஊடகவியலாளரின் முதலாவது கடமை யாகும்.!

தெற்காசியாவில் ஊடகவியலாளர்கள் பயமுறுத்திக் கட்டாயப்படுத்தப்படுகின்ற னர்; கொலை செய்யப்படுகின்றனர். நேபாளத்தில் மாவோ இயக்கப் போராளி கள் ஊடகவியலாளர்களை பயமுறுத்தி கட்டாயப்படுத்தினர்; இந்த யுக்தி சரியாக அமையவில்லையெனின், ஊடகவியலா ளர்களை அவமானப்படுத்தினர்; இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுக்தியும் சரியாக அமையாதவிடத்து ஊடகவியலாளர்களை படுகொலை செய்தனர். இவ்வாறான செயற்பாடுகளின் மூலமாக மாவோ இயக்கப் போராளிகள் தமது பலத்தை ஊடகவியலாளர்களுக்கு எதிராக உபயோகித்தனர். இவர்கள் இன அடையாளத்தைப் பயன் படுத்தவும் முயற்சி செய்தனர். நேபாளத்தில் நிகழ்ந்த கிளர்ச்சியின் போது பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

நேபாளத்தின் பெண் ஊடகவியலாளரான உமா சிங் 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மிக மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்டார். இவர் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் இவரது தந்தையும், சகோதரரும் காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. உமா சிங் மிகச் சிறந்த வானொலி மற்றும் அச்சு ஊடகவியலாளராகத் திகழ்ந்தார். இவர் தனித்து நின்று ஊடகவியலாளராகக் கடமையாற்றினார். இவரது படுகொலையைத் தொடர்ந்து,நேபாளப் பெண் ஊடகவியலாளர்கள் பலரின் குடும்பங்கள் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் கவலையடைய ஆரம்பித்தனர். இவரின் படுகொலைக்கான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. இந்தத் துரதிர்ஷ்டவசமான சம்பவத்தைத் தொடர்ந்து நேபாளத்தில் பல ஊடகவியலாளர்கள் "சுயதணிக்கை"யைக் கடைப்பிடிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

தெற்காசிய நாடுகளில் தேசிய மட்டத்தில் கடமையாற்றும் ஊடகவியலாளர்களை விட மாகாண, மாவட்ட, பிராந்திய மட்டங்களில் கடமையாற்றும் உள்ளூர் ஊடகவியலாளர்களுக்கான ஆபத்துகள் அதிகமாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான உள்ளூர் ஊடகவியலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லையென்றே கூறலாம்.

ஆப்கானிஸ்தானில் தலிபான், சர்வதேசப் பாதுகாப்புப் படைகள், அரசாங்கம் ஆகியனவற்றுக்கு மத்தியில் ஊடகச் சுதந்திரமானது மழுங்கடிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் மதம் பற்றியோ அல்லது பெண்களின் உரிமைகள் பற்றியோ ஊடகங்களில் பிரசுரிக்கவோ அல்லது ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்புச் செய்யவோ முடியாது. அவ்வாறு செய்தால் "இரவுக் கடிதங்கள்" எனவழைக்கப்படும் அச்சுறுத்தல் அறிவித்தல் குறிப்பிட்ட ஊடகவியலாளர்களின் வீட்டுக்கதவிற்குக் கீழால் போடப்படும் நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறான பணிகளில் ஈடுபட வேண்டாமென அக்குறிப்பிட்ட ஊடகவியலாளரை அச்சுறுத்தும் நடவடிக்கையே இதுவாகும். மதம் மற்றும் மதம் சார்ந்த நம்பிக்கைகள், அரசியல், தேசியவாதம் மற்றும் நாட்டுப்பற்றுக்கெதிரான ஊடகவியல் மூலமாக ஏற்படும் அச்சுறுத்தல் "ஆபத்தை விளைவிக்கக் கூடிய காதல்!" எனலாம்.

பாகிஸ்தான் ஊடகவியலாளரான சலீம் ஷஷாட் அண்மையில் படுகொலை செய்யப்பட்டார். இராணுவம் மற்றும் புலனாய்வுத்துறை சம்பந்தப்பட்ட செய்திகளைப் பாகிஸ்தானில் பிரசுரிக்கவோ அல்லது ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்புச் செய்யவோ முடியாது. இவ்வாறான செய்திகளை எழுதும் அல்லது ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்புச் செய்யும் ஊடகவியலாளர்களுக்கெதிராக அச்சுறுத்தல் விடுக்கப்படுவதைக் காணலாம்.

இந்தியாவில் அண்ணா ஹஸாரேயினால் முன்னெடுக்கப்பட்ட ஊழலுக்கெதிரான செயல்வாதத்திற்குக் கிடைத்த பிரசித்தம், 2000ஆம் ஆண்டு முதலாகச் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மணிப்பூரைச் சேர்ந்த பெண் செயற்பாட்டாளரான இறோம் ஷர்மிளாவிற்குக் கிடைக்கவில்லை. "மணிப்பூரின் இரும்புப்பெண்" எனவழைக்கப்படும் இறோம் ஷர்மிளா, இந்திய அரசாங்கத்தினால் 1958 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட ஆயுதப் படையினருக்கான விசேட அதிகார சட்டத்தை நீக்குமாறு கூறி 2000 ஆம் ஆண்டு முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார். இவர் கைதுசெய்யப்பட்டு, இந்திய அரசாங்கம் கட்டாயப்படுத்தி,இவருக்கு மூக்கின் மூலமாக உணவூட்டி வருகின்றது. இருப்பினும், இவர் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாகத் தனது போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நேபாள மாவோ இயக்கத் தலைவரான புஷ்பகமல் தஹல், நேபாளத்தின் "புதையல் வீடு" எனக் கருதப்படும் லும்பினிக்கு விஜயம் செய்யுமாறு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகமான



துஷியந்தினி
கனகசபாபதிப்பிள்ளை

பான் கீ மூனுக்கு அழைப்பு விடுத்தார். கிளர்ச்சிக் காலகட்டத்தில் (1996-2006) புஷ்ப கமல் தஹலும் அவரது மாவோ இயக்கக் கிளர்ச்சியாளர்களும் ஏறக்குறைய 13,000-14,000 வரையான மக்களைப் படுகொலை செய்தனர். ஊடகவியலாளர்கள் இதுபற்றி செய்திகளைத் தொடர்ந்து எழுதியதால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் புத்தபகவான் பிறந்த இடமான லும்பினிக்கு விஜயம் செய்வது ரத்துச் செய்யப்பட்டது. ஊடகவியலாளர்கள் சிறந்த முறையில் ஆய்வுகளைச் செய்து செய்தி மற்றும் கட்டுரைகளை பிரசுரிக்கவோ அல்லது ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்புச் செய்யவோ வேண்டியது அவசியம். "துணிச்சலான சுவர்" ஊடகவியலாளர்களாகிய எம்மிடம் இருக்க வேண்டியது இன்றியமையாதது.

நேபாளத்தில் தற்பொழுது "வானொலிப் புரட்சி" நடைபெற்று வருகின்றது. 300 வானொலி நிலையங்கள் பண்பலை (எப்.எம்.) அலைவரிசை ஊடாகச் செய்தி மற்றும் நிகழ்கால விடயங்கள் பற்றிய தகவல்களைப் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன. எழுத,வாசிக்கத் தெரியாத மக்கள் கூட இவ்வாறான வானொலி நிகழ்ச்சிகளைச் செவிமடுத்து வருவது, நேபாளத்தில் நடைபெற்றுவரும் முக்கிய மாற்றங்களில் ஒன்றெனக் கருதலாம். அத்துடன் வானொலி மிகவும் துரித கதியில் செய்திகளை வழங்கும் ஓர் சக்திவாய்ந்த ஊடகமாக மாறிவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. ■

**ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்களுக்கு எதிராக பல்வேறுபட்ட தரப்பினரால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்ற போது "சுயதணிக்கை"யைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகின்றது. இருப்பினும், ஆட்சி அதிகாரங்களுக்கு எதிராக சவால் விடுக்கக்கூடிய சுய நம்பிக்கை ஊடகவியலாளர்களுக்கு அவசியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாயக அடிகளாரின் வாழ்க்கையும் வரலாறும்

**நான் குருவாக்கப்படவில்லை, நானாகவே குருவாகினேன் என்று அடிகளார் வேடிக்கையாகக் கூறுவார். பெற்றோராலேயோ அல்லது சமயப் பெரியாராலேயோ அவர் சின்னஞ் சிறு வயதில் குரு மடத்திற்கு அனுப்பப்படவில்லை. வளர்ந்து இளைஞராகிய பின்னரே தானாகவே குரு வழியை நாடியவர். இது போலவே அவரது தமிழ் அறிவும் தமிழ் அன்பும் பொதுவாக கல்வி கற்கும் முறையில் ஏற்கப்படவில்லை**



*ராஜன் பிலிப்ஸ்*

உலகம் பரக்க தமிழ்த்தூது சென்ற தனிநாயகம் அடிகளார் பிறந்தது 1913 ஆம் ஆண்டில் ஆவணித் திங்கள் இரண்டாம் நாளாகும். அவர் பிறந்த நூற்றாண்டு காலவரை வருகின்ற 2013 ஆம் ஆண்டில் நிறைவு பெறுகின்றது. அதனையொட்டி, இலங்கையிலும், தமிழகத்திலும், தமிழர் புலம் பெயர்ந்து வாழும் ஏனைய நாடுகளிலும், தமிழ் அன்பர்கள் தனிநாயகம் அடிகளின் வாழ்க்கையையும் பங்களிப்புகளையும் நினைவு கூருவதற்கான முயற்சிகளை ஆரம்பித்து வருகின்றனர்.

இந்த ஆரம்ப முயற்சிகளின் பின்னணியாக, தனிநாயகம் அடிகளைப் பற்றிய சில குறிப்புகளடங்கிய கட்டுரையொன்றை இங்கு எழுத விழைகின்றேன். இம்மாதம் (ஆவணி) 2ஆம் திகதி அடிகளது 99ஆவது பிறந்த தினம் என்பதும் இதற்கு பொருத்தமானதே. மேலும், "சமகாலம்" சஞ்சிகையின் வெளியீட்டாளரான எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் சிலோன் லிமிட்டட் நிர்வாகத்தோடு தனிநாயகம் அடிகள் கொண்டிருந்த நீண்ட தொடர்பும் இச்சஞ்சிகையில் அவரது நூற்றாண்டு நினைவு கூரலைப்பற்றிய ஆரம்பக்கட்டுரை ஒன்று வெளிவருவதைப் பொருத்தமாக்கி விடுகின்றது. என்னைப் பொறுத்தவரையில் "சமகாலம்" சஞ்சிகையை மிகத் திறமையாக ஆரம்பித்துள்ள ஆசிரியரினதும், துணையாளரினதும், வெளியீட்டாளரினதும் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டுகின்றேன். இந்த சஞ்சிகை ஓயாது வளர்ந்து,மங்காது ஒளி வழங்க வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

தனிநாயகம் அடிகள் இலங்கைத் தமிழரது வாழ்க்கையைப் பல முனைகளில் உயர்ந்த முறையிற் தொட்டவர். அவர் ரோம் நகரில் முதுமாணிப்பட்டம் பெற்ற கத்தோலிக்கக் குருவாவார். திருவாசகத்தையும், சேக்கிழாரையும் உருகப் படித்துத் தமிழை பக்தியின் மொழி என்று வர்ணித்தவர். "என்னை நன்றாக இறைவன் படைத்தனன்,தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்றும் அறைகூவியவர். இத்தாலிய மறுமலர்ச்சியினதும், சங்கத் தமிழ் இலக்கியத்தினதும் சிறப்பியல்புகளை நன்காய்ந்ததோடு அவற்றைத் தமது ஆளுமையில் நன்கு சங்கமித்துக் கொண்டவர். நாற்றிசையுமுள்ள நாடெல்லாம் சென்று தமிழ் இலக்கியப் பெருமை சாற்றியவர்.

பேராசிரியராகப் பணிபுரிந்து, இந்தியாவிலும், இலங்கையிலும், மலேசியாவிலும், ஆயிரக்கணக்கான மாணவருக்கு எழுத்தறிவித்தவர். இலங்கைத் தமிழ் மக்களின் மொழியுரிமைக்காகக் குரலெழுப்பியவர். அதிகாரப் பரவலாக்கத்தை நன்காய்ந்து ஆதரித்தவர்.சத்தியாக்கிரகப் போராட்டங்களில் தயங்காது ஈடுபட்டவர். எனினும், குறுகிய மனப்பான்மையும், இனத்துவேஷமும் அவரது அரசியலின் அடிப்படைகளாக இருக்கவில்லை. மாறாக, பரந்த உலக நோக்கோடும், ஆழ்ந்த மனிதத்துவக் கண்ணோட்டத்தோடும் அவர் அரசியலை அணுகினார். இறுதியாக அவரால், நிறுவப்பட்ட உலகத் தமிழ் ஆராய்ச்சி இயக்கமும், அதனூடாக கோலாலம்பூரிலும், சென்னையிலும், பாரிஸிலும், யாழ்ப்பாணத்திலும் நடத்தப்பட்ட தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளும், தனிநாயகம் அடிகளை தமிழ் கூறும் நல்லுலகத்தின் அபிமானப் பீடத்தில் நிரந்தரமாக இருத்திவிட்டன.

தனிநாயகம்அடிகள்பிறந்து நூறாண்டுகள் ஆகிவிட்டதோடு, அவர் இறந்து முப்பது ஆண்டுகளும் ஆகிவிட்டன. அவர் இறந்த பின்னர் இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை அவர் வாழ்ந்த காலத்தின் நிகழ்ச்சிகளோடு இலகுவில் ஒப்பிடமுடியாது. எதுவிதத்திலும் ஒப்பிட முடியாது என்றுங் கூறலாம். முப்பது ஆண்டுகளாக, இலங்கைத் தமிழரின் வாழ்க்கை விபரீதமான முறையில் சிதறடிக்கப்பட்டு விட்டது. பெருமளவில் மக்கள் புலம்பெயர்ந்துவிட்டனர். பிறந்த பூமியில் இருப்பவர் சமூக உருவாக்க நேரத்தில் காணப்படுகின்ற இயற்கை நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். இரு குழுவினரும் – பாரதி வேறொரு சந்தர்ப்பத்தில் கூறியது போன்று – " நீண்ட வழியில் நின்ற பொருள் கண்ட நினைவிலில்லை," என்ற மயக்க நிலைக்கு ஆளாகி விட்டனர். அத்தோடு கடந்த முப்பது ஆண்டுகளிற் பிறந்த புதிய தலைமுறையினர்,சமூகப் பாரம்பரியத்தோடு எதுவித தொடர்புமற்ற புதிய சவால்களை எதிர்கொண்டு நிற்கின்றனர். பொதுவாக, நாளை என்ன செய்யலாம் என்று தவிப்போர்க்கு, வரலாறு பொய்யாகவும் வருங்காலம் கனவாகவும் தோன்றுவதில் வியப்பேதுமில்லை. இத்தகைய சூழமைப்பில், இலக்கியப் படைப்பும் இரசனையும், முத்தமிழ்க் கலை முயற்சிகளும் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன. இந்ததுன்மையானவட்டத்திலிருந்து விடுபெறும் முயற்சியை "நாம்எங்கிருந்து தொடங்குவது" என்ற பெரிய கேள்வியை ஆதிசேனன் அவர்கள் "சமகாலம்" முதல் இதழில் விசனத்தோடு எழுப்பியுள்ளார்.

தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்புகள் சில விதத்திலேனும் இத்தகைய கேள்விகளைப் பற்றிய கருத்துப் பரிமாறல்களுக்கு அரங்கம் அளிக்க வேண்டும். அத்தோடு புதியனவும், ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டவையுமான சூழலமைப்புகளில் வாழுகின்ற இளந்தலைமுறையினர் தமது பண்பாட்டு வேர்களை இழக்காமல் இருப்பதற்கும், தமிழரின் இலக்கிய, பண்பாட்டு வரலாற்றுச் சாதனைகளை உற்சாகத்தோடு அறிந்து கொள்வதற்குமான வழி வகைகளுக்கு அத்திவாரம் இடுவதற்குமான ஒரு சந்தர்ப்பமாக வருகின்ற நூற்றாண்டு நடப்புகள் விளங்க வேண்டும். எங்கிருந்தாலும் தமிழ் அன்பர்கள், தனிநாயகம் அடிகளின் வாழ்க்கையையும், அவரது இலக்கிய, ஆராய்ச்சிப் படைப்புகளையும், தமிழ்த்தூது, தமிழ் நிறுவன ரீதியான பங்களிப்புகளையும் உற்சாகத்தோடு நினைவு கூருவார்கள் என்பதில் ஐயமில்லை.

மாநாடுகளும், கருத்தரங்குகளும், மேடைப்பேச்சுகளும், கட்டுரை, கவிதைப் படைப்புகளும் நூற்றுக்கணக்கான நூற்றாண்டு வேளையில் உலகம் பரக்க இடம் பெறும் என்பதிலும் ஐயமில்லை. அரசாங்க ரீதியில் நூற்றாண்டு முத்திரைகள் வெளியிடப்படலாம். அடிகளாரது பெயரில் நினைவுச் சின்னங்கள் நிறுவிக்கப்படலாம். ஆனால், மறைவாக நமக்குள்ளே பெருமை பேசாமல், எமது திறமையான புலமையை வெளிநாட்டார் போற்றுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும் பணியில் அசாதாரணமான முறையில்ஈடுபட்டதனிநாயகம்அடிகளை முறையாக நினைவுகூருவது என்றால், இன்றைய காலகட்டத்தில் நாம் எதிர்நோக்கும் வரலாற்று, சமூக, பண்பாட்டு, இலக்கிய, அரசியற் சவால்கள் என்ன என்பதை அடையாளங்கண்டு, அவற்றை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதற்கான வழி வகைகளை நன்கு பரிசீலனை செய்துகொள்ள வேண்டும். இது எந்த வகையினிலும் நிறைவேற்றப்படாவிட்டால், வருகின்ற நூற்றாண்டு ஒரு இழந்த வாய்ப்பாகப் போய்விடும். இதனைத் தவிர்க்க தமிழ் அன்பர்கள் முயற்சிக்க வேண்டும். இதுவே இக்கட்டுரையின் கருப்பொருளும் குறிக்கோளுமாகும்.

### அடிகளாரின் பங்களிப்புகளின் பின்னணி

தனிநாயகம் அடிகளின் பன்முகப்பட்ட பங்களிப்புகளின் பின்னணியும் பன்முகத்தன்மை படைத்ததாகும். அவரது தனிப்பட்ட அல்லது குடும்பப் பின்னணியைப் பார்த்தால், அடிகளது தாய் கரம்பனைச் சேர்ந்தவர். பல தலைமுறையாக கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த குடும்பத்தில் பிறந்தவர். தாயின் தந்தை காவலூர் கடற்கோட்டையின் பொறுப்பாளராக பல ஆண்டுகளாகக் கடமையாற்றியவர். தாயின்சகோதரரும், குடும்பங்களும் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் குடியேறி மேலைத்தேயப் பண்பாட்டு முறைகளைத் தழுவி வாழ்ந்தவர்கள்.



தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட மேலைத்தேய அறிஞர்கள் மொழியியல் ரீதியில் மேலும் ஈடுபட்டிருந்தனர். தமிழக, இலங்கை அறிஞர்களோ தமிழின் இலக்கியச் சிறப்பிலேயே நீந்திக் களித்தனர். இரண்டாகச் சென்று கொண்டிருந்த ஆராய்ச்சி அசைவுகளை ஒருமைப்படுத்திய சாதனை தனிநாயகம் அடிகளுக்கே உரித்தானது என்பது கைலாசபதியின் கருத்து

அடிகளாரின் மைத்துநர் ஒருவர் 1950களில் கொட்டன் கால் (Cotton Hall) என்ற பிரபல ஒட்டக குதிரையின் உரிமையாளராகப் பிரசித்தி பெற்றவர். அடிகளாரின் தந்தை நெடுந்தீவைச் சேர்ந்தவர். இரு மரபுத்துய்ய தனிநாயகம் முதலி என்று யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிடப்பட்டுள்ள மரபிற் தோன்றியவர். அந்த மரபில் முதன் முதலாக இந்து மதத்திலிருந்து கத்தோலிக்க மதத்திற்கு சமயம் மாறியவர். தாய் வழியிலும், தந்தை வழியிலும், தான் எதிர்கொண்ட இரு வேறான உந்துதல்களை ஒன்றோடொன்று முரண்படாமல், அவையிரண்டிலும் உயர்வான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றைத் தேர்ந்து தனது ஆளுமையில் அவற்றை நன்கு இணைத்துவிட்டது தனிநாயக அடிகளின் சிறப்பான குணாதிசயம்எனலாம். இந்தத்திறமையே பரந்த மனப்பான்மையைக் கொண்ட அவரது பொதுவாழ்க்கைக்கும் அடிப்படை ஆகியது.

அவரது குருத்துவத்திற்கும் தமிழ் அன்புக்குமான தொடர்புகளையும் இங்கு குறிப்பிடலாம். "நான் குருவாக்கப்பட வில்லை, நானாகவே குருவாகினேன்," என்று வேடிக்கையாகக் அடிகளார் கூறு வார். பெற்றோராலேயோ அல்லது சம யப் பெரியோராலேயோ அவர் சின்னஞ் சிறு வயதில் குரு மடத்திற்கு அனுப்பப் படவில்லை. வளர்ந்து இளைஞராகிய பின்னர் தானாகவே குரு வழியை நாடி யவர். இது போலவே அவரது தமிழ் அறிவும் தமிழ் அன்பும் பொதுவாக கல்வி கற்கும் முறையில் ஏற்படவில்லை. ஏறக் குறைய முப்பதாண்டுகள் வரையிலும், அவர் ஆங்கில மற்றும் ஐரோப்பிய மொழிப் பயிற்சிகளிலேயே ஈடுபட்டவர். யாழ்ப்பாணத்திலும் ஆங்கில மொழியிற் கற்று, கொழும்பில் இலத்தின் மொழியில் குருத்துவ ஆரம்பக் கல்வி பெற்று, பின்னர் உரோம் நகரில் ஐந்தாண்டுகளாக மேற்படிப்பு பெற்றார். ஆராய்ச்சித் துறை யில், கி.பி. 3ஆம் நூற்றாண்டுக் கால வரையில் முன்னைய கார்த்தே ஜி மாநிலத்தில் கிறிஸ்தவக் குருக்களின் திருமறை பரப்பும் வழி வகைகளை ஆராய்ந்தவர். ஐரோப்பிய மொழிகளில் பெரும்புலமை பெற்றார். இதன் பின்னரே இந்தியாவில் தமிழ் சரிவரக் கற்கத் தொடங்கி, அண்ணாமலை பல்கலைக் கழகம் சென்று "தமிழ் இலக்கியத்தில் இயற்கை பெற்ற இடம்" என்ற தலைப் பினில் ஆராய்ச்சி செய்து, தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தனது வருகையை மிக இனிமையாகத் தெரிவித்தார். தனிநாயக அடிகள் உரோமிலிருந்து தமிழகத்திற்குச் சென்றதை, 250 ஆண்டுகளுக்கு முன் னர் இத்தாலிய குருக்களான டி நொபிலி யும், வீரமாமுனிவர் எனப் பெயர் பெற்ற பெஸ்கியும் தாம் பிறந்த நாட்டைவிட்டு கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காகத் தென்னிந்தியாவுக்குச் சென்றதையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். டி நொபிலியும், பெஸ்கியும் தமிழ் இலக்கியப் பண்பாட்டு துறைகளில் ஈடுபட்டு நன்கு தேர்ச்சியும் பெற்றனர். தம் பின்னால் வந்த நூற்றுக் கணக்கானமேல்நாட்டுத்துறவிகளுக்கும் வழிகாட்டிகளாக அமைந்தனர். ஆனால், இவர்கள் வாழ்ந்த பணி, புரிந்த காலம் காலனித்துவ சகாப்தத்தில் உலகமய மாக்கல் ஆரம்பித்த காலமெனலாம். தனிநாயகம் அடிகள் உரோமிலிருந்து இந்தியா சென்ற காலம், காலனித்துவத் திற்கு எதிராக அடக்கப்பட்ட நாடுகள் விடுதலைக் குரலெழுப்பிய இருபதாம் நூற்றாண்டு காலமாகும். 1940-1950 தசாப்தத்தில் திருவனந்தபுரத்திலும், தூத்துக்குடியிலும், வடக்கன் குளத்திலும், கன்னியாகுமரியிலும், அண்ணாமலை யிலுமாகத் தமிழகத்தில் பற்பல இடங் களில் தனிநாயகம் அடிகள் வாழ்ந்து, குருப்பணியாற்றி, தமிழையும் கற்றுக் கொண்ட அக்காலகட்டம் இந்திய விடு தலை இயக்கத்தின் உச்சக்கட்டமாகும். வந்தே மாதரமும், பாரதியின் தேசியக் கீதங்களும் தமிழ்த் தாய் வாழ்த்துகளும் சென்றவிடமெல்லாம் எதிரொலித்த காலம். இந்த விடுதலை எதிரொலிப்பு களின் தாக்கம் தனிநாயக அடிகளில் ஆக்கபூர்வமான விளைவுகளை ஏற் படுத்தியது. மேலைத்தேய நாகரிகத்தின் மேலாதிக்கம் என்று பலஸ்தீனியப் பேரறிஞரான எட்வட் சாயிடினால் பிற்காலத்தில் விபரிக்கப்பட்ட அறிவாளர் பிரக்ஞை தன்னுடைய காலத்தில் இருக்காவிட்டாலும், மேலைத்தேய நாக ரிகத்திற்குமப்பால் சிறப்பான மனித நாகரிகங்கள் பலவுண்டென்றும், அவற்றில் கீழைத்தேய நாகரிகங் களுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்ப்பண்பாட்டிற்கும் தன்நேரற்ற தனியிடம் இருக்க வேண்டும் என்ற சிந்தனைப் போக்கிற்கு தனிநாயகம் அடிகள் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார் என்று எவ்வித மிகைப்படுத்தலுமின்றிக் கூறிவிடலாம்.

இந்த முன்னோடித் தன்மைக்கு அடிப் படையான பல சிறப்பியல்புகளைத் தனி நாயகம் அடிகளின் தனிப்பட்ட வாழ்க்கை விருத்தியில் அடையாளங்கண்டு கொள் ளலாம். யாழ்ப்பாணத்திலிருந்து குருத் துவக் கல்வி பெற உரோமுக்குச் சென்ற முதல் மனிதர் தனிநாயகம் அடிகள். அவர் முழுதாகக் குருத்துவப் பணியில் தன்னை ஈடுபடுத்தியிருந்தால் ஒரு பிஷப்பாக, கருதினாலாக உயர்வுபெற்றிருக்கலாம் எனப் பலருங் கூறுவர். வின்சன்ற் குரோ னின் என்ற ஆங்கில வரலாற்றறிஞர் தனிநாயகம் அடிகள் கத்தோலிக்க மதத்தின் சர்வதேசத் தன்மைக்கு மிகச் சிறப்பான உதாரணம் எனவும், இவரைப் போன்ற குருமார் தான் பாப்பரசராக உயரவேண்டுமென்றும் கூறியுள்ளார். தனிநாயக அடிகள் எடுத்த பாதையோ வேறு. தூத்துக்குடி ஆயரான ரோச் ஆண்டகையின் அனுமதி பெற்று தமிழ் இலக்கியத் துறையிலும், கல்வி,சமூகத் துறைகளிலும், மதச்சார்பற்ற முறையில் பணியாற்றும் பாதையையே தனி நாயகம் அடிகள் தெரிந்து கொண்டார். ஒரு கணத்தையும் அவமாய்க் கழித்த தில்லை என்று பிற்காலத்தில் தினகரன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தனது வாழ்வுக் கட்டுப்பாட்டை தனி நாயகம் அடிகள் விபரித்தது நினைவுக்கு வருகின்றது. அவ்வாறு,எடுத்த எக்காரி யத்தையும் மிகச் சிறந்த முறையிலேயே முடிக்க வேண்டும் என்ற தணியாத தாகமும் அவரிடம் இருந்தது. இக்குணாதி சயங்கள் தனிநாயகம் அடிகளின் சாத னைகளுக்கும் உயர்வான பங்களிப்பு களுக்கும் அடிப்படையாக அமைந்தன. வேறொரு வகையில் பார்த்தால்,முப்பது வயதுக் குருவாக மதச்சார்பற்ற துறை களிலும் பணிகளிலும்,அரசியல் இயக் கங்களிலும் ஈடுபட ஆரம்பித்தமை யினால் இருபது ஆண்டுகளுக்குப் பின்னால் இரண்டாம் வத்திக்கான் சபை யால்கத்தோலிக்கதிருச்சபையில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களுக்கு ஒரு சிறு முன்னோடியாக தனிநாயகம் அடிகள் விளங்கினார்.

"கட்டு மரத்திலிருந்து ஜெட் வரை" என்று தனிநாயகம் எழுதிய "ஒன்றே உலகம்" என்ற பிரயாணத் தொகுப்பைக் "குமுதம்" வாரவிதழ் வரவேற்றது. சிறு வயதிலே தந்தையோடும், தம்பியோடும், நெடுந்தீவிலிருந்து இந்தியக் கரைக்குச் சென்றமையை "ஒன்றே உலகம்" முன்னுரையில் அடிகள் குறிப்பிட்டிருந் தார். சிறு வயதில் இடப்பட்ட பிரயாண வித்தானது நன்கு வளர்ந்து கடைசி வரைக்கும் தனிநாயகம் அடிகளை ஆட்படுத்தியது. தனது தலைமுறையைச் சேர்ந்த தென்னாசியப் பிரமுகர்களில் உலகம் பரக்கப் பிரயாணம் செய்தவரில் தனிநாயகம் அடிகள் முதன்மையானவர் என்றுங் கூறலாம். ஏட்டுப் படிப்போடு நிற்காது நாட்டுச் சூழலை அநுபவிக்க வேண்டும் என்ற ஆராய்ச்சி வேட்கை அவரிடம் என்றும் இருந்தது. உரோம் நகரில் அகழ்வாராய்ச்சித் துறையில் பயிற்சி பெற்றதும் இந்த வேட்கைக்கு நல்ல அத்திவாரமாகி விட்டது. அண்ணா மலையில் படித்த பொழுது பல்லாண்டு களுக்கொருமுறை மலருகின்ற சங்கத் தமிழ் பாடிய குறிஞ்சிப் பூவினைப் பார்ப் பதற்காக சக மாணவரையும் உற்சாகப் படுத்தித் திரட்டி மலையேறித் திரிந்ததை அடிகள் கூறக் கேட்டிருக்கின்றேன். அதனி லும் மேலாக, எதுவிதத்திலும் வாய்ப்பு களை ஏற்படுத்தி உலகில் ஒரு மூலையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து மறுமூலைக்கு அடிக்கடி பயணம் செய்து உலக நாகரிகத்தின் புராதனச் சின்னங்களை ஆராய்ந்தும் அநுபவித்தும் வந்தவர். அதன் விளைவாக, சிறுபருவத்தில் இரவு ரயில் வண்டியிலிருந்து ரூவான்வெலிசாயா நிலவொளியில் அமிழ்ந்து பிரகாசிப்பதைப் பார்த்து பரவசமடைந்ததையும், சோழ ஆதிக்கத்தின் சின்னமாக வானோ க்கி உயர்ந்து நிற்கும் தஞ்சை பெரிய உடையார் கோபுரத்தை விபரித்தும், கம்போடியாவில் குவிந்து கிடக்கும் பிரமாண்டமான புராதன மண்டபங்களைப் பற்றியும், தென் அமெரிக்காவில் மாய,இன்கா என்னும் நாகரிகங்களின் சாதனைகள் பற்றியும் பலமட்டத்திலும் ஒப்பிட்டு எழுதியும் பேசியும் இந்நாகரிகச் சாதனைகளைக் காணாதவரும் கண்டவர் போற் களிப்புறச் செய்தார்.

தமிழ் ஆராய்ச்சித் துறைக்கு தனிநாயகம் அடிகளின் பங்களிப்பைப் பற்றிப் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட மேலைத்தேய அறிஞர்கள் மொழியியல் ரீதியில் மேலும் ஈடுபட்டிருந்தனர். தமிழக, இலங்கை அறிஞர்களோ தமிழின் இலக்கியச் சிறப்பிலேயே நீந்திக் களித்தனர். இரண்டாகச் சென்று கொண்டிருந்த ஆராய்ச்சி அசைவுகளை ஒருமைப்படுத்திய சாதனை தனிநாயகம் அடிகளுக்கே உரித்தானது என்பது கைலாசபதியின் கருத்து. அத்தோடுசமூகவியல்,அரசியல்,வரலாற்றுத் துறைகளையும் தமிழாராய்ச்சியில் உட்படுத்த ஊக்குவித்தவர் தனிநாயகம் அடிகள்.

நூற்றுக்கணக்கான மேலைத்தேய அறிஞர்கள் தமிழ்த்துறையில் ஈடுபடுவதற்கு வழிகோலியவர். "அவர் தனிநாயகம், அவருக்கு சபாநாயகர் தேவையில்லை" என்று சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளையினால் அன்புடன் அறிமுப்படுத்தப்பட்ட தனிநாயகம் அடிகள் வாழ்ந்த காலம் முப்பெரும் தமிழ் அறிஞர்களான தெ.போ.மீனாட்சி சுந்தரம், ரா.சேதுப்பிள்ளை, மு.வரதராசன் வாழ்ந்த காலமே ஆகும். அவர் மூவரையும் பற்றி அடிகளார் விமர்சனக் கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழ் இலக்கிய, தமிழ் பண்பாட்டுத்துறைகளில் தலைசிறந்து விளங்கிய மகாபுருஷர்கள் அனைவருமே இன்று மறைந்துவிட்டனர். அவர்களது பணிகளை நினைவுகூரும் வேளையில் சமகாலத்திலும் எதிர்காலத்திலும் என்ன செய்யலாம் என்ற கேள்வியைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

தனிநாயகம் அடிகளின் பங்களிப்புகளின் பின்னணியாக விளங்கிய அவரது ஆளுமையைப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். அடிகளார் பெரிய பண்பாளர். 'இங்கிதம் தெரிந்தவர் தாராள மனங்கொண்டவர்' என்று கைலாசபதி அவரைப்பற்றிக் கூறுவார்.

பிறரைத் தன்வயத்தப்படும் தெய்வ சக்தி கொண்டவர் என்று அண்ணாமலை

> "அவர் தனிநாயகம், அவருக்கு சபாநாயகர் தேவையில்லை" என்று சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளையினால் அன்புடன் அறிமுப்படுத்தப்பட்ட தனிநாயகம் அடிகள் வாழ்ந்த காலம் முப்பெரும் தமிழ் அறிஞர்களான தொ.போ. மீனாட்சி சுந்தரம், ரா.சேதுப்பிள்ளை, மு.வரதராசன் வாழ்ந்த காலமே ஆகும்.

நாட்களிலிருந்து அடிகளின் நண்பனாக விளங்கியவரும் மொழியியற்துறை வல்லுநருமான பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம் மதுரை தமிழ்மாநாட்டில் கூறினார். இந்தப் பண்பே பல்வேறு கருத்துகளைக் கொண்டவரும் பல்வேறு பின்னணிகளிலும் இருந்து வந்தவர்களுமான அறிஞர்களை அணிபடுத்தி தமிழ் ஆராய்ச்சி இயக்கத்தை ஆரம்பித்து நடத்துவதற்கு அடிகளுக்கு உதவியது. அடிகளது மாநாட்டுச் சாதனைகளை விபரிக்கையில் "பல திசைகளிலும் இழுத்துச் செல்லுகின்ற குதிரைகளை நன்கு கடிவாளம் இட்டு ஒரே திசையில் சாதுரியமாக திருப்பக் கூடியவர் என்று அமெரிக்கப் பேராசிரியரான எம்.பி.எமனோ ஒரு முறை கூறினார். அடிகளின் பழக்க வழக்கங்களும் நன்றாகவே அமைந்திருந்தன. அடிகளது தோற்றமும் உடுக்கும் உடுப்பும் உண்ணும் விதமும் கம்பீர நடையும் தெளிந்த பேச்சும் வெண்கலச் சிரிப்பும் எவரையும் கவர்ந்துவிடும். சிங்கள நாடக வல்லுனரான பேராசிரியர் சரத்சந்திர அடிகளோடு பேராதனையில் பணியாற்றியவர். சரச்சந்திர தனிநாயகம் அடிகளை நினைவு கூர்ந்து வர்ணித்தது அசாதாரணமானது. ஆழ்ந்த அறிவு, தூய உணர்வு,நல்லடக்கம் இவை மூன்றும் கலந்த பூரணமான வெளிப்பாடே தனிநாயகம் அடிகள். எனக்குத் தெரிந்தவர்களை அவர்கள் அறியாதவாறு சோதனை செய்வது எனது வழக்கம். அவர்களது நடைமுறைகளும் பழக்கவழக்கங்களும், பிறர் பார்க்கும் போதும் தனியாக இருக்கும்போதும், ஒரே வகையில் அமைந்தனவா அல்லது வேறுபட்டவையா என்பதை அவதானிப்பதே அந்தச் சோதனை. அச்சோதனையில் முழுமையாகத் தேறியவர் ஒருவர் என்றால் அது தனிநாயகம் அடிகளேயாகும்.

## நூற்றாண்டை நோக்கி

"ஆயிரம் ஆண்டுகளில் உங்களைப் போன்று தமிழுக்குத் தொண்டாற்றியவர் எவருமில்லை" என்று தனிநாயகம் அடிகளுக்குத் தான் அடிக்கடி கூறியதாக, யாழ்ப்பாணத் தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் தலைவரும், தனிநாயகம் அடிகளுக்குத் தாய் வழியில் ஒரு விதத்தில் உறவினருமான, அருட்திரு குலேந்திரன் எழுதியுள்ளார். அத்தகைய ஒரு மனிதரின் பிறந்த நூற்றாண்டு காலம் அடுத்த வருடம் நிறைவு பெறும். அடிகளது வாழ்க்கையையும், பணிகளையும் நினைவுகூர்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் தமிழ் அன்பர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு, அடிகளின் மருமகன் என்ற முறையில், அவர்களுக்கு நன்றியும் கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

ஆனால் அடிகளின் வரலாற்றுச் சாதனைகளை நன்றியோடு நினைவு கூரும் அதேவேளையில், அவர் தொட்டு நின்ற பன்முறைத் துறைகளிற் தோன்றுகின்ற புதிய சவால்கள் என்ன என்பதிலும் அவற்றை எவ்வாறு நாம் சமாளிக்கலாம் என்பதிலும் நாம் அக்கறை கொள்ளுதல் வேண்டும். அந்த அக்கறையின் அடிப்படையிற் திட்டமிட்டு செயற்பட வேண்டும். அதற்கான உற்சாகத்தையும், உலக ரீதியான தொடர்புகளையும் வருகின்ற நூற்றாண்டு நடப்புகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதுமே எனது விண்ணப்பமும் விருப்பமு மாகும்.

*(rajanphilips@rogers.com)*

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப்பிரச்சினையும் திராவிடக்கட்சிகளும்



முத்தையா காசிநாதன்

ஆகஸ்ட் 12 இல் நடைபெறவிருக்கும் ஈழத்தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு மகாநாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் முன்வைக்கக்கூடிய கருத்துக்கள் இந்திய காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளுக்கு எதிரானது போலத் தெரியும். ஆனால்,காங்கிரஸ் கட்சியுடன் அவர்களின் உறவு தொடரும். இதற்குக் காரணம் தி.மு.க. பழைய திராவிட இயக்கம் என்ற மரபை மீறி தென்னாசியாவில் மிகப்பெரிய ஊடகக் குடும்பமாக இருக்கக்கூடிய கலைஞர் கருணாநிதியின் குடும்பத்தைச் சார்ந்திருப்பதே.

"இலங்கை போன்ற சிறிய நாடுகளில் இந்தியா நடத்துகின்ற பெரும் வணிகத்துக்கு இந்தக் குடும்பம் எதிராக இருக்க முடியாது. அந்த வணிகத்தில் பங்கேற்கக் கூடிய ஒரு பகுதியினராகத் தான் கருணாநிதியும் அவரைச் சார்ந்தவர்களும் இருக்க முடியும். ஆகவே அவர்கள் மூலம் ஈழத்தமிழர்களுக்கு நல்லது நடக்கும், அவர்களது துன்பம் நீங்கும் என்பது எல்லாம் நம்பத் தகுந்ததாக எனக்குத் தெரியவில்லை" இவ்வாறு கூறுகிறார் சென்னை பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் வீ.அரசு.

திராவிட இயக்கக் கட்சிகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தற்போது கடைப்பிடித்து வருகின்ற அணுகுமுறைகள் தொடர்பில் "சமகாலம்" சார்பில் அவரிடம் கருத்துக் கேட்டேன்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் தமிழகத்தில் உள்ள திராவிடர் கட்சிகளின் செயற்பாடுகள் இப்பிரச்சினை துவங்கியதிலிருந்து எப்படியிருந்து வந்திருக்கிறது என்ற விளக்கத்தை அரசு தந்தார்.

**கே: இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகளின் அணுகுமுறை ஆரம்பம் முதல் எப்படியிருக்கிறது?**

பதில்: தமிழகத்தில் திராவிடக்கட்சிகள் என்று சொல்லக்கூடிய பெரும் கட்சிகளாக இருப்பது - ஒன்று திராவிட முன்னேற்றக் கழகம் இன்னொன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். மூன்றாவது வைகோ தலைமையில் உள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம். இந்த மூன்று அமைப்புகளையும் பெரிய அமைப்புகளாகச் சொல்லலாம். 1983 கறுப்பு ஜுலையில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற மிகப்பெரிய கலவரத்திற்குப் பிறகு இங்குள்ள கட்சிகள் தங்களின் முக்கிய செயல்திட்டங்களில் ஒன்றாகவே இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையிலெடுத்தார்கள். இதில் இந்திய அரசியல் என்று ஒன்றும், தமிழக அரசியல் என்று ஒன்றும் இருக்கிறது. இந்திய அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்ற கட்சிக்கும், தமிழக அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் கட்சிக்குமான உறவுகள் இதிலெல்லாம் முக்கிய சூழலாக 1970 களில் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்து 1980களில் அது மிக முக்கியமானதாகவே மாறி விட்டது. ஈழத்தமிழர்கள் பற்றி நடுவன் அரசில் உள்ள காங்கிரஸ் கட்சியின் கோட்பாடுகள், இங்குள்ள திராவிடக்கட்சிகளின் கோட்பாடுகளுக்கு எந்தக் காலத்திலும் உடன்பாடாக இருந்ததில்லை. ஈழத்தமிழர் பிரச்சினையை ஒரு வெளிநாடான நோர்வே எப்படிப் பார்க்கிறதோ அப்படித்தான் காங்கிரஸ் கட்சி சார்ந்த இந்தியா அந்தப் பிரச்சினையைப் பார்க்கிறது. ஆனால்,தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகள் அப்படி இந்தப் பிரச்சினையைப் பார்ப்பதில்லை. தங்கள் மொழி பேசக்கூடிய, தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒரு குழுவின் பிரச்சினையாக அதைப் பார்க்கிறார்கள். ஆரம்பத்திலிருந்து இன்றுவரை அதுதான் நிலை. இதில் சிக்கல் என்னவென்றால், தமிழகத்தில் உள்ள காங்கிரஸ்காரர்கள் ஈழப் பிரச்சினைக்கு ஆதரவாளர்கள் அல்ல. டெல்லியில் உள்ள காங்கிரஸாரோ இதை வெளிநாட்டுப் பிரச்சினை போல் கருதுகிறார்கள். ஆகவே காங்கிரஸை நோக்கி ஈழப்பிரச்சினையைக் கொண்டு செல்வதில் மிகப்பெரிய சிக்கல் திராவிடக் கட்சிகளுக்கு வருகிறது. அது கலைஞர் கருணாநிதிக்கு மிகப்பெரிய சிக்கலாக இருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி அப்படியொரு சிக்கலில் மாட்டியிருக்கிறது என்று கூறுகிறீர்கள்?

பதில்: காங்கிரஸோடு உறவும் கொள்ள வேண்டும். ஈழப்பிரச்சினையையும் பேச வேண்டும் என்று கலைஞர் கருணாநிதி விரும்புகிறார். காங்கிரஸுடன் உறவு வைத்துக் கொண்டே ஈழத்தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாட்டை நடத்துகிறேன் என்று சொல்லுகிறார். இது காங்கிரஸ் கட்சியின் அடிப்படையான கொள்கைகளுக்கு எதிரானது. எப்படி கலைஞரால் இப்படி இரட்டைச் சூழலுடன் செயல்பட முடிகிறது என்பது அனைவர் மனதிலும் எழும் கேள்வியாக இருக்கிறது. மிக முக்கியமான திராவிடக் கட்சியான தி.மு.க.வின் இந்த நிலைப்பாட்டை, இங்குள்ள சிறுசிறு அமைப்புகள், குழுக்கள், குறிப்பாக வைகோ போன்றவர்கள் கடுமையாக விமர்சனம் செய்கிறார்கள். ஈழத்தமிழர் சிக்கல்களுக்கு எந்தக் காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகள் அடிப்படையானது என்று கருதுகிறார்களோ அந்தக் காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து எப்படி இவரால் ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று எமக்கு விளங்கவில்லை. இது மிகவும் குழப்பமான விடயமாக இருக்கிறது. காங்கிரஸ்-தி.மு.க. உறவு என்பதை அடிப்படையாகவும், அதனைச் சார்ந்தும்தான் ஈழத்தமிழர் பிரச்சினையில் தி.மு.க. தன் கருத்தை வெளிப்படுத்துகிறது. ஈழத்தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாட்டில் தி.மு.க. முன்வைக்கும் கருத்துக்கள் காங்கிரஸின் கொள்கைகளுக்கு எதிரானது போலத்தெரியும். ஆனால்காங்கிரஸ் கட்சியுடன் அவர்களது உறவு தொடரும்.



வி.அரசு

இதற்குக் காரணம் தி.மு.க. பழைய திராவிட இயக்கம் என்ற மரபை மீறி, தென்னாசியாவில் மிகப்பெரிய ஊடக குடும்பமாக இருக்கக்கூடிய கலைஞர் குடும்பத்தைச்சார்ந்திருப்பதே! இலங்கை போன்ற சிறிய நாடுகளில் இந்தியா நடத்தும் பெரும் வணிகத்திற்கு இந்தக் குடும்பம் எதிராக இருக்க முடியாது. அந்த வணிகத்தில் பங்கேற்கக்கூடிய ஒரு பகுதியினராகத்தான் கருணாநிதியும், அவரைச் சார்ந்தவர்களும் இருக்க முடியும். ஆகவே இவர்கள் மூலம் ஈழத்தமிழர்களுக்கு நல்லது நடக்கும், அவர்களது துன்பம் நீங்கும் என்பது எல்லாம் எனக்கு நம்பத்தகுந்ததாகத் தோன்றவில்லை.

கே: சரி. ஈழத்தமிழர் பிரச்சினையில் தமிழகத்தை ஆளுங்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் செயல்பாடு குறித்து என்ன கருதுகிறீர்கள்?

பதில்: தமிழக முதல்வர் ஜெயலலிதா ஈழப்பிரச்சினை பற்றி நிறையப் பேசுகிறார். கலைஞர் பேசுகிறார். அதற்கு மாற்றாக நாம் ஒரு அரசியலை முன் வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அவர் பேசுவது போல் எனக்குத் தோன்றுகிறது. அவர்கள் நினைத்திருந்தால் ஈழப்புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கியிருக்கலாம். அதைச் செய்யவில்லை. ராஜீவ்கொலைவழக்கில் பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று பேரின் தூக்குத்தண்டனையை ரத்துச் செய்வதற்காகதீர்மானம் போட்டார்களேதவிர,



இந்தியா நடத்துகின்ற பெரும் வணிகத்திற்கு
...ம் எதிராக இருக்க முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதை நடைமுறைப்படுத்துவதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அதேபோல் மீனவர் பிரச்சினையில் பல விடயங்களைப் பேசுகிறார். மத்திய அரசிடம் கேட்கிறார். இதெல்லாம் செய்கிறார். இந்த முதலமைச்சர் ஈழப்பிரச்சினையில் அக்கறையோடு செயல்படுவது போன்ற பார்வை வெளியில் இருப்பவர்களாகிய நமக்கு இருக்கிறது. அங்கு நடந்த நிகழ்ச்சிகள் பற்றி நேரடியாக கருத்து வெளியிடுதல், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக உலகம் தழுவிய கருத்தை உருவாக்குதல், போரினால் பாதிக்கப்பட்டு துன்பப்படும் தமிழர்களுக்கு நல்வாழ்வு அமைத்துக் கொடுக்கும் செயல்பாடுகளில் இந்திய அரசோடு மோதுகிறார். அந்த சிக்கல் பற்றி உலகம் தெரியும் அளவிற்கு கருத்துகளைஎடுத்துப்போடுவது போன்ற ரீதியில் முதல்வர் செயல்படுகிறார் என்று என்னால் சொல்ல முடியவில்லை. ஆகவே தி.மு.க.வாக இருந்தாலும் சரி, அ.தி.மு.க.வாக இருந்தாலும் சரி ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசுவது என்பது தேர்தலை மனதில் வைத்துத்தான் பேசுகிறார்கள்.

ஏனென்றால் தேர்தலில் ஓட்டு சேகரிப்பில் ஈழத்தமிழர் பிரச்சினை ஒரு விதத்தில் பங்களிக்கிறது என்று இந்தக் கட்சிகள் கருதுகின்றன. இதற்காகத்தான் இப்பிரச்சினையைப் பேசுகிறார்கள் என்று சொல்ல வேண்டுமேயொழிய உண்மையாகவே ஈழத்தமிழர்கள் மிகப் பெரிய போரில் பட்ட கஷ்டங்களைப் போக்கும் செயல்திட்டங்களுடன் செயல்படுகிறார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை.

**கே: ம.தி.மு.க.வின் செயல்பாடு பற்றி உங்கள் பார்வை எப்படி?**

பதில்: சிறிய திராவிடக்கட்சியாக வைகோவின் ம.தி.மு.க. இருக்கிறது. பிரபாகரன் ஆதரவுக் கட்சியாக ஏற்றுக் கொள்கிறார்கள். அதுபற்றிப் பேசுகிறார்கள். ஆனால் இந்திய அரசிடம் அவர்களால் கோரிக்கை வைக்க முடியாது. ஏனென்றால் காங்கிரஸ் கட்சியுடனோ, வேறு அமைப்புகளுடனோ நேரடியாகத் தொடர்பு இல்லை. 1983இல் இருந்து ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்ட

> முதலமைச்சர் ஜெயலலிதா ஈழப்பிரச்சினை பற்றி நிறையவே பேசுகிறார். கலைஞர் பேசுவதற்கு மாற்றாக ஒரு அரசியலை முன்வைக்கவேண்டும் என்ற நோக்கத்தில்தான் ஜெயலலிதாவின் பேச்சுக்கள் அமைந்திருக்கின்றன. தனித்தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை தொடர்ச்சியாக கருத்துப் பிரசாரமாக்கும் இயக்கமாக வைகோ தலைமையிலான மறுமலர்ச்சி தி.மு.க. மட்டுமே செயற்பட்டு வருகின்றது

இன்னல்கள் பற்றி தொடர்ச்சியாக பிரசாரம் செய்யும் பணியை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களும் கூட அ.தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டணி வைக்க வேண்டிய சூழல் உருவானது. அந்த நேரங்களில் இந்தப் பிரச்சினைகளில் எப்படிப் பேசினார்கள், என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது பற்றியெல்லாம் நமக்கும் சில நேரங்களில் குழப்பம் விளைவிக்கக் கூடியதாகத்தான் இருக்கிறது. தனித் தமிழ் ஈழம் வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ச்சியாக கருத்துப் பிரசாரமாக்கும் இயக்கமாக வைகோ தலைமையிலான ம.தி.மு.க. செயல்பட்டு வருகிறது.

**கே: ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிப் பேச திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக எந்த அமைப்பு இருப்பதாகக் கருதுகிறீர்கள்?**

பதில்: தோழர் நல்லகண்ணு அய்யா தலைமையில் இருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சில தெளிவான திட்டங்களை எல்லாம் சொல்கிறார்கள். அதனடிப்படையில் ஈழத்தமிழர் விடயத்தை அகில உலக அளவில் பிரச்சினையாக்க வேண்டும் என்றும் பேசுகிறார்கள். இந்திய நாடாளுமன்றத்தில் அது சம்பந்தமான பிரச்சினைகளை எழுப்ப வேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள். ஆனால் உண்மை என்ன? இலங்கை என்ற நாட்டில் சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் இருப்பது உண்மை. இருவருக்கும் முரண்பாடு இருக்கிறது என்பதும் உண்மை. அந்த முரண்பாடுகளைத் தீர்ப்பது குறித்த வெவ்வேறு கருத்துக்கள் இருக்கலாம். அது பற்றி நாம் கருத்துச் சொல்ல முடியாது. ஏனென்றால் அந்த அளவிற்கு இப்பிரச்சினையில் நமக்கு பயிற்சியோ அல்லது அந்த அரசியல் தளம் சார்ந்த ஒரு தொடர்ச்சியான புரிதலோ இல்லை. ஆனால் அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்வாழ்வு என்பது மிக முக்கியம். அதற்குத் தேவையான திட்டங்களை இந்தக் கட்சிகளும், இந்த கட்சித் தலைவர்களும் தொடர்ச்சியாகப் பேசி அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபட்டால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு நல்வாழ்வு கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். வேறு ஒரு வகையில் இந்தக் கட்சிகள் வேறு எதுவும் செய்ய முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால் அதற்கு இந்திய அரசியல் சிக்கலாக இருக்கிறது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவிரமடையப் போகும் பொருளாதார நெருக்கடி



துஷியந்தினி
கனகசபாபதிப்பிள்ளை

உலக நாடுகள் பல்வேறுபட்ட காரணங்களால் தற்பொழுது பொரு ளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றன. யுத்தம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்ட தன் பின்னர் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் பல்வேறு பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் துரித கதியில் மேற் கொள்ளப் பட்டு வரு கின் றன. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிக் கொழும்புப் பல்கலைக் கழகப் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் "சமகாலம்" சஞ்சிகைக் காக வழங்கிய பேட்டி.

இவருடைய ஆய்வுத் தலைப்புகளாக வரி விதித்தல், உள்நாட்டில் இடம்பெயர்வு, புலம்பெயர் மற்றும் வர்த்தகத் தாராளமயமாக்கல் அமைந்துள்ளன.

கேள்வி – இலங்கை யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில், இலங்கையின் பொருளாதார நிலைமை எவ்வாறு உள்ளது?

பதில் – இலங்கை 1948ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரமடைந்த போது ஆசியாவிலேயே மூன்றாவது செல்வந்த நாடாகக் காணப்பட்டது. அக்காலத்தில் ஆசியாவில் ஜப்பான் முதலாவது செல்வந்த நாடாகவும், மலேஷியாஇரண்டாவது செல்வந்த நாடாகவும் காணப்பட்டன. ஆனால், அதன் பின்னர் பல பொருளாதாரக்காரணிகள்இலங்கையின் பொருளாதார நிலைமையை அவ்வப்போது பாதித்தன. குறிப்பாக நாட்டில் ஏற்பட்ட ஒவ்வொரு ஆட்சி மாற்றங்களின் போதுபொருளாதாரக்கொள்கைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டதை அவதானிக்கலாம். இலங்கையில் இரண்டு முக்கியமான அரசியல் கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன முரண்பாடான பொருளாதாரக் கொள்கைகளை கடைப்பிடித்தமையினால் நாட்டில் ஒரு சீரான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாமல் போனது.

இதைத் தவிர, இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம் காணப்படாதது மிக முக்கியமான காரணமாகக் காணப்படுகின்றது. அதாவது, இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த போது சிங்கள மற்றும் தமிழ் இனங்களுக்கிடையிலான இனப்பகை காணப்பட்டது. ஆனால் அது இன வன்முறையாக வெடிக்கவில்லை. இருப்பினும், இலங்கையில் இடம்பெற்ற சில சம்பவங்கள் மற்றும் சட்ட திட்டங்களால் நாட்டின் பொருளாதாரச் செயலாற்றும் மிகவும் பாதிப்பிற்குள்ளாகியது.

1977ஆம் ஆண்டு இலங்கை தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தது. அக்காலகட்டத்தில் தெற்காசியாவில் தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் முதலாவது நாடாக இலங்கை காணப்பட்டது. இந்தப் பெருமை இலங்கைக்கே உரித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானது. தாராளமயமாக்கப்பட்ட அடுத்த ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8.2% சதவீதமாக உயர்ந்தது.

1977ஆம் ஆண்டில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. இதனால் இலங்கைக்குச் சாதகமான நிலை காணப்பட்டது. விமானத்துறை, கப்பல் துறை, வங்கித்துறை, அறிவுசார் துறை, வர்த்தகத்துறை போன்ற விடயங்களுக்கு இலங்கை ஓர் மைய மாகக் காணப்படக்கூடிய ஏதுநிலை காணப்பட்டது. பல பல் தேசியக் கம்பனிகள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்வந்தன.

ஆனால் 1983ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரம் காரணமாக இவையாவும் கனவாகும் நிலைமை ஏற்பட்டது. இந்த இனக்கலவரத்தின் விளைவாக இலங்கையானது விமான வழிப்போக்குவரத்திற்கான மையத்தை டுபாயிடமும், பொருளாதார மையத்தை மும்பையிடமும், கடல்வழிப் போக்குவரத்திற்கான மையத்தை ஹொங்ஹொங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிடமும் பறிகொடுத்தது. இலங்கை பொருளாதார ரீதியாகப் பயனடையக் கூடிய பல சந்தர்ப்பங்களை இழந்தது. ஒரு நாட்டின் செலவுக் கட்டமைப்பை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன:-

01. பொதுச்சேவைகள்
02. சமூக சேவைகள்
03. பொருளாதாரச் சேவைகள்
04. ஏனையவை

யுத்தம் ஏற்படுவதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட நான்கு துறைகளுக்கும் ஏறத்தாழ சமமான செலவு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், யுத்தம் ஆரம்பித்த பின்னர் யுத்தச் செலவுகளுக்காக மிகப் பாரிய தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது. யுத்த, இராணுவப் பாதுகாப்புச் செலவுகள் பொதுச் சேவைகளுக்குள் உள்ளடக்கப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டளவில் யுத்த, இராணுவப் பாதுகாப்புச் செலவினங்களுக்காக 11% சதவீதமான நிதி ஒதுக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி, போக்குவரத்து ஆகியன பொருளாதாரச் சேவைகளுக்குள்ளும், கல்வி, சுகாதாரம் ஆகியன சமூகச் சேவைகளுக்குள்ளும் உள்ளடக்கப்படும். பொருளாதாரச் சேவைகளுக்கும் (25% சதவீதம்), சமூகச்சேவைகளுக்கும் (25% சதவீதம்) நிதி ஒதுக்கப்பட்டால், பொதுச் சேவைகளுக்கும், ஏனைய சேவைகளுக்குமாக 50% சதவீதமான நிதி ஒதுக்கப்பட்டது. ஏனைய சேவைகளில் 99.3% சதவீதமானது அரச கடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகளாகும். மொத்தச் செலவில் 37% சதவீதமானது பாதுகாப்புச் செலவினங்களுக்கும் வட்டிக் கொடுப்பனவுகளுக்கும் செலவிடப்படுகின்றது. இந்த நிலைமை இன்றுவரை தொடர்வதைக் காணலம்.

இலங்கையில் யுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும், இனப்பகை தொடரும் சூழ்நிலை காணப்படுகின்றது. இருப்பினும் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்தி நாட்டின் பொருளாதார நிலைமையை ஸ்திரப்படுத்துவதற்கும், பொருளாதாரச் சுபீட்சத்தை அடைவதற்கும் இது தக்கதருணம் எனலாம். ஆனால், நாடு அவ்வாறானதொரு பாதையில் பயணிக்கின்றதா என்பது கேள்விக் குறியே! ஏனெனில் யுத்தம் காரணமாக வீதிகள், நெடுஞ்சாலைகள் ஆகியன வற்றைப் புதிதாக அமைப்பதற்கோ அல்லது புனரமைப்பதற்கோ வாய்ப்புகள் இருக்கவில்லை. இலங்கை அரசாங்க மானது கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய ஐந்து மாவட்டங்களையும் இணைக்கும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. ஆனால், அதிக பயணிகள் பிரயாணம் செய்யும் கொழும்பு-ஹபரண நெடுஞ்சாலையைப் புனரமைப்பதில் எது வித கவனமும் செலுத்தப்படவில்லை. இந்நெடுஞ்சாலை பெரும்பாலான மாவட்டங்களை இணைக்கின்றது. இலங்கை அரசியல் ரீதியான திட்டங்களிலா அல்லது நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அவசியமான திட்டங்களிலா கவனம் செலுத்துகின்றது என்பதில் ஐயங்கள் நிலவுகின்றன. யுத்தம் முடிவடைந்த நிலையிலும் பாதுகாப்புச் செலவினங்களில் எந்த விதத் தளர்வுப் போக்கையும் காண முடியவில்லை. இலங்கையின் கடன் பெறுகையானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 88% சதவீதமாகக் காணப்படுகின்றது. இது மிகப்பாரிய தொகையாகும். கடன் சுமை அதிகரித்துச் செல்கின்றது. கடன் கொடுப்பதற்குக் கடன் வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. வர்த்தகப் பற்றாக்குறை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இலங்கை அத்தியாவசியப் பொருட்களை ஏற்றுமதி செய்யவில்லை. ஆனால் அத்தியாவசியப் பொருட்கள், மூலப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்கின்றது. இலங்கையின் இறக்குமதி அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. நாட்டின் ஏற்றுமதித்துறையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்படவில்லை. விவசாயப்பொருட்கள் மற்றும் கடலுணவுப் பொருட்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டாலும், இவ்வாறான உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதை அவதானிக்கலாம்.

**கேள்வி - நாட்டின் பணவீக்க நிலைமை தற்பொழுது எவ்வாறு காணப்படுகின்றது?**

**பதில்** - பணவீக்கமானது கூடையொன்றில் உள்ளடக்கப்படும் சில பொருட்களின் விலைகளில் ஏற்படும் மாற்றத்தினை மட்டும் கவனத்தில் கொண்டு கணிப்பிடப்படுகின்றது. இக்கூடையில் உணவுப் பொருட்களுக்கு கூடுதலான நிறையளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. எரிபொருளுக்கான விலை அதிகரிப்பானது எல்லாத்துறைகளையும் பாதிக்கும். ஆனால், அதற்கான நிறையளிப்பு குறைவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். எனவே பணவீக்கம் என்பது எல்லாப் பொருட்களினதும் விலை அதிகரிப்பினைக் காட்டுகின்றது என்று கூற முடியாது.

இலங்கை ஒரு விவசாய நாடு. நாட்டின் விவசாயத்துறையானது பலமாக உள்ளது. வறட்சி,மழை போன்ற காரணிகளால் நாட்டின் விவசாயத்துறையானது அவ்வப்போது பாதிக்கப்பட்டாலும், இத்துறையில் நெகிழ்வுத் தன்மை காணப்படுகின்றது. அரிசி உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு காணாவிட்டாலும் கூட ஓரளவு தேவையையேனும் உள்நாட்டு விவசாய உற்பத்திப் பொருட்களின் மூலமாகப் பூர்த்தி செய்யக்கூடியதாகவுள்ளது. 8.3% சதவீதமாக இருந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5% - 6% சத வீதத்திற்கிடையில் வீழ்ச்சியடையுமெனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது. வறட்சி, மழை போன்ற இயற்கைக் காரணிகளாலும், யுத்தம், மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) கிளர்ச்சிக் காலப் பகுதிகளிலும், சர்வதேச எரிபொருள் விலை அதிகரிப்புக் காரணமாகவும் இலங்கையின் பொருளாதாரமானது பல சந்தர்ப்பங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கியதன் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் முதற் தடவையாக எதிர்க் கணியப் பெறுமதியை அடைந்தது.

எனவே உள்நாட்டு, வெளிநாட்டு அதிர்ச்சிகளால் குறிப்பாகப் பெற்றோலிய விலையில் ஏற்படும் அதிகரிப்புகளால் பணவீக்கம் அதிகரிக்க வாய்ப்பு உண்டு.

**கேள்வி - வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளின் பொருளாதார வளர்ச்சி எவ்வாறு உள்ளது?**

**பதில் -** இலங்கையில் வாழும் தமிழ் மற்றும் சிங்களச் சமூகங்களுக்கிடையே இருந்த வன்முறை சாராத பகைமையானது வன்முறை கலந்த பகைமையாக மாறியதற்கு மிகப்பிரதான காரணி நிலமாகும். வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரண்டு பிரதேசங்களிலும் சேவைகள் துறையோ அல்லது கைத்தொழில் துறையோ பெருமளவு வளர்ச்சியடைந்த துறைகளாகக் காணப்படவில்லை. மக்கள் விவசாயம், மீன்பிடி ஆகிய இரண்டு துறைகளையும் வடக்கு, கிழக்கு ஆகிய இரண்டு துறைகளிலேயே கூடுதலாகத் தங்கி இருந்தனர். இவை பெரும்பாலும் பாரம்பரியத் துறைகளாகவே காணப்படுகின்றன. யுத்தம் காரணமாக நவீன முறைகளை பின்பற்ற முடியவில்லை.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் கூட வடக்கு, கிழக்கு விவசாயிகளும், மீனவர்களும் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு உணவு வழங்கிய வர்களாக இருந்திருக்கின்றனர். ஆனால், யுத்தம் முடிவடைந்த நிலையில் இப்பகுதிகளில் உள்ள விவசாயிகளும், மீனவர்களும் தத்தமது தொழில்களைச் சிறந்த முறையில் செய்வதற்குப் பல காரணிகள் தடையாகவுள்ளன. உயர் பாதுகாப்பு வலயம், இராணுவ மயமாக்கல், இடம் பெயர்ந்த மக்களில் பலர் தத்தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்ப முடி யாத நிலை, மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் வளப் பற்றாக்குறை காரணமாகத் தொழிலை ஆரம்பிக்க முடியாத நிலை, பெருமளவான நிலப்பரப்பில் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ள நிலைமை, "அபிவிருத்தி" என்ற ரீதியில் நடைபெற்றுவரும் நில அபகரிப்பு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு,கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு உளவளத்துணை சிறந்த முறையில் வழங்கப்படாமை போன்ற காரணிகள் தடையாகக் காணப்படுகின்றன.

**கேள்வி - "அபிவிருத்தி" என்ற ரீதியில் சம்பூர்ப் பிரதேசத்தில் தற்பொழுது நடைபெறும் திட்டங்கள் பற்றி விளக்க முடியுமா?**

**பதில் -** பல கிராமங்களை உள்ளடக்கிய ஏறத்தாழ 10,000 சதுர ஏக்கர்களைச் சம்பூர்ப் பிரதேசம் கொண்டுள்ளது. இப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் உண்டு. சம்பூர் ஒரு செழிப்பான பிரதேசம்.

போர் நிறுத்த காலப்பகுதியில் (2002-2006) தமிழீழ விடுதலைப் புலிகள் சம்பூர்ப் பிரதேசத்தில் தமது நடவடிக்கைகளை விஸ்தரித்துப் பலத்தை உறுதி செய்தனர். நான்காம் கட்ட ஈழப் போர் சம்பூரில் ஆரம்பித்தது என்று கூறினால் அது மிகையாகாது. இயற்கை அனர்த்தங்கள், முரண்பாடுகள், அபிவிருத்தித் திட்டங்கள் ஆகிய மூன்று காரணிகளால் ஒரு நாட்டில் வாழுகின்ற மக்கள் இடம் பெயர்விற்கு உட்படலாம். ஆழிப் பேரலை (சுனாமி), யுத்தம், உத்தேசிக்கப்பட்டுள்ள அனல் மின்நிலைய நிர்மாணம் ஆகிய வற்றின் காரணமாகச் சம்பூர் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இம் மூன்று காரணிகளாலும் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த மக்களாகச் சம்பூர்ப் பிரதேச மக்கள் காணப்படுகின்றனர்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அனல் மின் நிலைய நிர்மாணத்தை ஒர் பொருளாதார ரீதியான நடவடிக்கையாக நோக்க முடியாதுள்ளது. ஏனெனில், பொருளாதாரத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது செலவு நலன் ஆய்வு, சமூகப் பாதிப்பு ஆய்வு, சூழல் பாதிப்பு ஆய்வு ஆகியன ஆய்வு செய்யப்பட வேண்டும். இத்திட்டம் பற்றி மக்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக 10,000 சதுர ஏக்கர் கொண்ட நிலம் சுவீகரம் செய்யப்படுகின்றது. மக்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது. அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டால் சம்பூர் மட்டுமல்லாது மூதூர்ப் பிரதேசமும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்.


**கேள்வி - உலகப் பொருளாதார நெருக்கடி நிலை இலங்கையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?**

**பதில் -** உலகப் பொருளாதாரத்தில் இலங்கை 1977 ஆம் ஆண்டு இணைந்து கொண்டது. மேற்குலக நாடுகளுடன் இலங்கைப் பொருளாதாரமானது மிக நெருங்கியதாகவே இதுவரை காணப்பட்டுள்ளது. இலங்கைப் பொருளாதாரமானது பெற்றோலியப் பொருட்களுக்காக மத்திய கிழக்கு நாடுகளிலும், தைத்த ஆடைகளுக்காக ஐக்கிய அமெரிக்க நாடுகள், கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றில் தங்கியுள்ளது.

உலகப் பொருளாதார நெருக்கடிகள் இலங்கையைப் படிப்படியாகத் தாக்கத் தொடங்கியுள்ளன. "அமுக்கி வைக்கப்பட்ட கேள்வி" காரணமாக யுத்தத்தின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் உற்பத்திகள் அதிகரித்தன. அதன் காரணமாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சி திடீரென உயர்ந்தது. இந்த வளர்ச்சியானது குறிப்பாக விவசாயத் துறையிலேயே ஏற்பட்டது. இலங்கை கைத்தொழில்துறையை நோக்கி நகர வேண்டிய தேவை இருக்கின்றது. விவசாயத்துறையிலிருந்து பெறப்படும் வளர்ச்சியை நாம் நீண்டகாலத்திற்கு எதிர்பார்க்க முடியாது.

இலங்கை தனது ஏற்றுமதிக்காக மேற்குலகைச் சார்ந்திருக்கின்றது. மேற்குலகப் பொருளாதார நெருக்கடிகள் தொடரும் நிலையிலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களில் அதிகளவு தங்கியிருக்கும் நிலையிலும் இலங்கையின் பொருளாதாரமானது நீண்ட காலத்தில் படிப்படியாக பாதிப்பிற்கு உள்ளா கும் நிலை ஏற்படலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னைய சமூக அமைப்புகளிலிருந்த அடக்குமுறை உறவுகளை மாற்ற மூலதனம் உதவலாம் என்பது பற்றியும் மாக்ஸ் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, மூலதனத்தின் முரண்பாடுகளின் பல பரிமாணங்களையும் அதன் ஆக்கிரமிப்புத் தன்மைகளையும் விளக்கினார். வரலாற்றில் முதலாளித்துவம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியே அன்றி அது அந்தமற்ற நிரந்தரமானதல்ல, வரலாற்றின் நிறைவு பெற்ற இறுதியுமல்ல என்பதே மாக்சின் நிலைப்பாடாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாராள ஜனநாயக முதலாளித்துவம்தான் வரலாற்றின் இறுதி நிலையமா?



பேராசிரியர்
என்.சண்முகரத்தினம்

நாம் காண்பது வெறுமனே பனிப்போரின் முடிவோ அல்லது யுத்தத்திற்குப் பின்னரான வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் மறைவோ அல்ல. அது வரலாறெனப்படுவதன் முடிவாக இருக்கலாம். அதாவது, மனித இனத்தின் கருத்தியல் ரீதியான பரிணாமத்தின் கடைசிப்புள்ளியும் மற்றும் மனித ஆட்சி முறையின் இறுதி வடிவமாக மேற்கத்தய தாராள ஜனநாயகத்தின் சர்வவியாபகமாக்கலும் ஆகும்

***Francis Fukuyama 1989 The End of History***

இந்தக் கருத்தினை 1989இல் அமெரிக்க அரசியல் விஞ்ஞானி யான Francis Fukuyama பெருமளவில் பிரபல்யமற்ற ஒரு அமெரிக்க சஞ்சி கையில் The End of History என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் முன் வைத்து வாதிட்டார். அக்கட்டுரை யாருமே எதிர்பார்க்காத அளவிற்கு உலக ரீதியில் பிரபல்யமாகியது. மேற்கின் பிரபல அறிஞர்கள் பங்குபற்றிய ஒரு விவாதம் தொடர்ந்தது. இதன் விளைவாக அந்தக் கட்டுரையைத் தாங்கி வந்த சஞ்சிகையும் பிரபல்யமடைந்தது.


அந்தக் கட்டுரை எழுதப்பட்ட சந்தர்ப்பம் முக்கியத்துவம் வாய்ந்தது. 1989இல் சோவியத் முகாமின் வீழ்ச்சி நிதர்ச னமாகியது. அந்த ஆண்டின் பிற்பகுதியில் பேர்லின் சுவர் சாய்ந்த காட்சி இரு மாவல் லரசுகளுக்கிடையிலான நீண்ட பனிப் போரின் இறுதிக் காட்சியாய் அமெரிக்க வல்லரசின் தலைமையிலான மேற்கத் திய முகாமின் வெற்றியின் குறியீடாக அமைந்தது. முதலாளித்துவத்திற்கும் சோஷலிசம்/கம்யூனிசம் ஆகியவற்றிற் குமிடையிலான போட்டியில் முதலாளித் துவம் இறுதி வெற்றியைப் பெற்றுவிட்ட தெனப் பேரிகைகள் முழங்கக் கொண் டாட்டங்கள் தொடர்ந்தன. கிழக்கு ஐரோப்பிய மக்கள் சோஷலிசத்தை நிரா கரித்து மேற்கின் ஜனநாயகத்தையும் முதலாளித்துவத்தையும் கட்டித் தழுவிக் கொண்டனர் என ஊடகங்கள் பறை சாற்றின.

அந்தக் கட்டத்தின் நிகழ்ச்சிகளை அவ தானித்த Fukuyama ஏற்கனவே தான் கொண்டிருந்தகருத்துகளுக்குநிரூபணம் கிடைத்துவிட்டதாக நம்பினார். அவரு டைய கட்டுரைக்கு கிடைத்த வரவேற்பும் அது ஏற்படுத்திய விவாத அலைகளும் பல வெளியீட்டுப் பதிப்பகங்களின் கவ னத்தையும் ஈர்க்கத் தவறவில்லை. 1992இல் அந்தக் கட்டுரையை மிகவும் விரிவாக்கி எழுதப்பட்ட நூல் The End of History and the Last Man என்ற தலைப்பில் வெளியாகி New York Times & Best seller ஆகியது. 2006இல் அதே நூல் ஆசிரியரின் பின்னுரையுடன் மீள் பதிப்பாக வெளியிடப்பட்டது.

வரலாற்றின் பொதுவான போக்கு முதலாளித்துவ அமைப்புக்கு அப்பால் ஒருவர்க்கபேதமற்றசமூகத்தின்தோற்றத் துடனேயே இறுதிநிலையை அடையும் எனவும் முதலாளித்துவ அமைப்பினை மாற்றும் சக்திகளை அந்த அமைப்பின் அடிப்படை முரண்பாடான மூலதனம், உழைப்பு இரண்டிற்குமிடையிலான வர்க்க ரீதியில் ஒருமைப்பட முடியாத முரண்பாட்டிற்கூடாகவே பிறக்கின்றன எனவும் கூறும் மாக்சின் பார்வை தவறா னது எனக் கூறும் Fukuyama முதலா ளித்துவமே வரலாற்றின் இறுதிக் கட்டம், அதன் தாராள ஜனநாயக அமைப்பே மனிதச் சுதந்திரம், சமத்துவம், பரஸ்பர அங்கீகாரம் ஆகிய முக்கிய விழுமியங் களை நடைமுறையில் நிஜமாக்கவல்லது எனவும் சொல்கிறார். இந்த இறுதி நிலை யின் யதார்த்த மாதிரி போல் அமைந் துள்ளன அமெரிக்க மற்றும் மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ ஜனநாயக அமைப்புகள். இத்தகைய ஒரு இறுதி நிலையைத்தை நோக்கியே மற்றைய சமூகங்களும் பல்வேறு வழிகளுக்கூடாக நகர்கின்றன. இதுவே Fukuyamaவின் நிலைப்பாடு. இந்த வகையில் மாக்ஸ் அல்ல ஆனால் அவரால் 19 ஆம் நூற்றாண்டில் விமர்சிக்கப்பட்ட Hegel தான் சரி என்பதையே வரலாறு காட்டியுள் ளது என்பது Fukuyamaவின் முடிவாகும்.

Fukuyama வாதம் பற்றி இப்போது தமிழில் ஒரு கட்டுரையை ஏன் எழுத நினைத்தேன்? முதலாளித்துவத்தைத் தவிர அதுவும் நவதாராள முதலாளித் துவத்தைத் தவிர வேறு மாற்று அமைப் புக்கு இடமில்லை என்னும் நிலைப்பாடு இன்றும் மேலாட்சி செலுத்துகிறது. இன்னொரு மட்டத்தில் இந்த அமைப்பை உலக ரீதியில் பாதுகாக்க அரசின் பலாத்கார நிறுவனங்கள் தயார் நிலை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் உள்ளன. மறுபுறம் இந்த அமைப்பு தொடர்ச்சியான நெருக்கடிகளைச் சந்தித்தவண்ணமிருக்கிறது. இதன் பிரசாரகர்கள் பெருமையுடன் பேசிக் கொள்ளும் ஜனநாயக உரிமைகள் மேற்கத்தய நாடுகளில் கட்டுப்படுத்துகின்றன. ஜனநாயகத்திற்கும் தாராள முதலாளித்துவத்துக்கும் இடையிலான உறவு முரண்பாடுகள் மிக்கதென்பதையே யதார்த்தத்தில் காண்கிறோம். இது பற்றி நான் "சமகாலம்" முதலாவது இதழில் எழுதிய கட்டுரையிலும் குறிப்பிட்டிருந்தேன். பனிப்போர் முடிவுற்ற காலகட்டத்தில் முதலாளித்துவம் கொண்டாடப்பட்டது


ஹெகல்

போன்ற நிகழ்வுகள் இப்போது இல்லை. அதற்கு மாறாக சமீப காலங்களில் அங்கும் இங்கும் பல எதிர்ப்பு இயக்கங்களின் செயற்பாடுகளையே காண்கிறோம். ஆனால் Fukuyamaவின் வாதத்தின் தாக்கம் பல மட்டங்களில் தொடர்கிறது. 2006இல் அவர் எழுதிய பின்னுரையில் தனது நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் சில மேலதிக விளக்கங்களைச் சற்று மிருதுவான மொழியில் கூறியுள்ளார்.

முதலாளித்துவத்தின் முற்போக்கு அம்சங்கள் பற்றி குறிப்பாக அது மனித உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு எப்படி வழிசமைத்து உதவுகிறது என்பது பற்றி மற்றும் முன்னைய சமூக அமைப்புகளிலிருந்த அடக்குமுறை உறவுகளை மாற்ற மூலதனம் உதவலாம் என்பது பற்றியும் மாக்ஸ் குறிப்பிட்டுள்ளார். அதே வேளை, மூலதனத்தின் முரண்பாடுகளின் பல பரிமாணங்களையும் அதன் ஆக்கிரமிப்புத் தன்மைகளையும் விளக்கினார். வரலாற்றில் முதலாளித்துவம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியே அன்றி அது அந்த மற்ற நிரந்தரமானதல்ல, வரலாற்றின் நிறைவு பெற்ற இறுதியுமல்ல என்பதே மாக்சின் நிலைப்பாடாகும்.

இன்றைய காலகட்டத்தில் நாம் காணும் பொருளாதார தொடர் நெருக்கடிகளுக்கும் சமூக ரீதியான, சூழல் ரீதியான பல பாரதூரமான பிரச்சினைகளுக்கும் மத்தியில் முதலாளித்துவம் அழியாவரம் பெற்றஅமைப்பெனக்கருதப்படமுடியுமா என்ற கேள்வியே இந்தக் கட்டுரையை எழுதத் தூண்டியது.

## வரலாற்றின் முடிவு என்பதுதான் என்ன?

மனித வரலாற்றுக்கு ஒரு பொதுவான திசைப்போக்கு உண்டு. அது நிறைவு பெறும் இறுதி நிலையை நோக்கியே பல சமூக மாற்றங்களுக்கூடாக நகர்கிறது எனும் கருத்துக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. நவீன மேற்கத்தய தத்துவார்த்த மரபில் வரலாற்றின் பொதுவான திசைப்போக்குப் பற்றிய சிந்தனைகளை 17- 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய அறிவொளி (Enlightenment) காலத்தின் தத்துவஞானிகளிடம் காணலாம். 19ஆம் நூற்றாண்டின் பிரபல தத்துவஞானியான Hegel வரலாற்றின் சர்வலோக தன்மை பற்றியும் அதன் பொதுவான திசைப்போக்கின் இறுதி பற்றியும் விரிவாக விளக்க முற்பட்டார்.

Hegel பார்வையில் வரலாறென்பது சிந்தனையின் அதாவது மனித அறிநிலையின் பரிணாமத்தின் வரலாறே. சமூகம் முரண்பாட்டுக்கூடாகவே இயங்குகிறது. இந்த முரண்பாட்டை அவர் கருத்துகளின் முரண்பாடாகக் கண்டார். கருத்துக்கு எதிர் கருத்துப் பிறக்கிறது. இந்த இரண்டிற்குமிடையிலான முரண்பாட்டிற்கூடாககூட்டிணைப்புப்பிறக்கிறது. அதற்கு எதிராக மீண்டும் எதிர்க்கருத்துப் பிறக்கிறது. இத்தகைய இயங்கியலுக்கூடாகவே வரலாறு நகர்கிறது. இந்த நோக்கில் வரலாறு சுதந்திரம், சமத்துவம், பரஸ்பர அங்கீகாரம் போன்ற விழுமியங்களை அடைதலையே இலக்காகக் கொண்டுள்ளது. வரலாற்றின் உள்ளுரு (Spirit) வின் நிதர்சனமாக்கலை Hegel நவீன அரசில் கண்டார். அவரைப் பொறுத்தவரை மனித அறிநிலையின் பரிணாமத்தின் நிறைவு பிரஞ்சுப் புரட்சியின் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் விழுமியங்களின் எழுச்சியுடனும் 1806ஆம் ஆண்டு பத்தாம் மாதம் நெப்போலியன் (Napoleon) பிரஷ்ய (Prussian) முடியாட்சியை வீழ்த்திக் கைப்பற்றியதுடன், பூர்த்தியாகிறது. இதுவே வரலாற்றின் இறுதி. Hegel இன் பார்வையில் மற்றோரின் அங்கீகாரத்தைப் பெறுவது ஒவ்வொரு நபரின் விருப்பின் அடிப்படைத் தேவையாகும். இந்த விருப்பினை முன்னைய சமூகங்களில் எல்லோராலும் பெறமுடியவில்லை. அத்துடன் சுயகௌரவத்துக்கும் அங்கீகாரத்துக்குமாக உயிரையே பணயம் வைத்துப் போட்டியிடும் நிலையும் இருந்தது. இந்த நிலை மாறி சமூகமாகப் பரஸ்பரம் அங்கீகாரத்தைப் பெறக்கூடிய நிலைக்கு வரலாறு முன்னேறிவிட்டது. இதுவே பிரஞ்சுப் புரட்சி தந்த வரலாற்று மாற்றத்தின் ஒரு அம்சம் என Hegel இன் வாதம் கூறுகிறது. சுருங்கக் கூறின் Hegel வரலாற்றின் நிறைவாக்கலை அவர் வாழ்ந்த காலத்தின் பூர்ஷ்வா தாராளவாத அமைப்பின் வருகையில் கண்டாரென லாம். அவரைப் பொறுத்தவரையில் முதலாளித்துவம் மனித சிந்தனையின் அதி உயர்நிலை விழுமியங்களை அனுபவிக்கும் இறுதி அமைப்பாகும்.

இளம் வயதிலிருந்தே Hegel தத்துவத்தினால் மாக்ஸ் கவரப்பட்டார். மாக்சின் தத்துவார்த்தப்பயணம் Hegel உடனான அதாவது அவரின் தத்துவத்துடனான ஒரு தொடர்ச்சியான விவாதம் என்றால் மிகையாகாது. மாக்ஸ் Hegel மீது மதிப்பு வைத்திருந்த அதேவேளை, அவரின் அணுகுமுறை முற்றிலும் கருத்து முதல்வாதப் போக்கிலானது என விமர்சித்து Hegel இயங்கியல் தலைகீழாக நிற்பதால் அதைச் சரியாக கால்களில் நிலைகொள்ளும் வகையில் சீராக்குவதே தனது திட்டம் என்றார். ஜேர்மனிய தத்துவம் வானகத்திலிருந்து வையகத்திற்கு இறங்குகிறது - அதற்குமாறாக நாம் வையகத்திலிருந்து வானகத்தைநோக்கிஏறுவோம் எனக் கூறினார் மாக்ஸ்.

Hegel வரலாறு பற்றிய கருத்தினை மாக்ஸ் விமர்சித்தார். வரலாற்றைச் சிந்தனை மட்டத்தில் பார்த்துப் புற உலகம் சிந்தனையால் சிருஷ்டிக்கப்படுகிறது எனும் Hegelஇன் நிலைப்பாட்டை நிராகரித்த மாக்ஸ், நடைமுறைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். முதலாளித்துவ சமூகத்தின் யதார்த்தங்களான அசமத்துவ வர்க்கப்போராட்டம், தனியுடைமை, அந்நியமயமாதல், உரிமைகள் மறுப்பு போன்றவற்றின் தாக்கங்களை Hegel காணத் தவறியதைச் சுட்டிக்காட்டினார். முதலாளித்துவ சமூகத்தின் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எல்லாம் வர்க்கம் சார்ந்தவை. இவற்றின் தோற்றங்களுக்கும் உள்ளடக்கங்களுக்கும் இடையே பெரும் முரண்பாடுகள் உண்டென விளக்கிய மாக்ஸ், வரலாற்றின் சமகாலப் போக்கினை முதலாளித்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி அமைப்பின் இயக்கவிதிகளின் போக்குகளை அறிதல் மூலமே விளங்கிக் கொள்ள முடியும் என்பதை அவருடைய பிரபல்யம் வாய்ந்த "மூலதனம்" எனும் நூலில் தெளிவாக்கினார்.

இதுவரையிலான வரலாறு வர்க்க சமூகங்களின் வரலாறே. முதலாளித்துவம் ஒரு வர்க்கசமூகம்.அது வரலாற்றின் இறுதிச் சமூகமாகாது. ஒரு வர்க்கமற்ற சமூகத்தின் தோற்றமே வரலாற்றின் நிறைவை அறிவிக்கும் என்பதே மாக்சிய வாதம். இந்த சமூகம் தோன்றுவதற்கான பொருள் ரீதியான முன்நிபந்தனைகளை வளர்ச்சி பெற்ற முதலாளித்துவம் உருவாக்குகிறது. அதாவது மனிதரின் பொருள் ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்யவல்ல உற்பத்திச் சக்திகளுக்கு முதலாளித்துவம் வழிகோலுகிறது. ஆனால் மனித விடுதலை அந்த அமைப்பின் நிராகரணத்திலேயே தங்கியுள்ளது. அந்த மாற்றம் இடம்பெறும் போதே வர்க்க சமூகத்தின் மறைவும் நிதர்சனமாகிறது. அதுவே வரலாறு நிறைவு பெறும் இறுதி நிலை.

போல்ஷவிக்புரட்சியையும் சீனப்புரட்சியையும் மற்றைய 20ஆம் நூற்றாண்டின் புரட்சிகளையும் மாக்ஸ் நிச்சயம் வரவேற்றிருப்பார். அதேவேளை, புரட்சிக்குப் பின்னர் அங்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் நிர்மாணித்த சமூக அமைப்பினை சோஷலிசம் என்றோ அல்லது கம்யூனிசத்தின் ஆரம்பக் கட்டம் என்றோ அவர் ஏற்றிருக்கமாட்டார். இது இன்று நாம் சுயவிமர்சன ரீதியில் பின்னோக்கிப் பார்க்கும் போது தெளிவாகிறது. மா ஓ மக்கள் ஜனநாயகம் பற்றி எழுதினார். ஆனால் அதை நடைமுறைப்படுத்த சீன கம்யூனிஸ்ட் கட்சியால் முடியவில்லை. பூர்ஷ்வா ஜனநாயகத்தையும் விடச் சிறந்த ஜனநாயகத்தை சோவியத்யூனியனிலோ, சீனாவிலோ மக்கள் அனுபவிக்கவில்லை.

ஆகவே முதலாளித்துவத்துக்கு அப்பாலானசமூகம்பற்றியதேடலுக்குசோவியத் சீனா பற்றிய அனுபவங்கள் தவிர்க்கப்பட வேண்டிய உதாரணங்களாகவே பயன்படவல்லன. இவற்றை மாக்சின் வரலாறு பற்றிய கோட்பாட்டினைத் தவறென நிரூபிக்கும் ஆதாரங்களாகக் கொள்ள முடியாது என்பதை மாக்சின் மனித விடுதலை பற்றிய கருத்துகளை அறிந்தோர் ஏற்றுக் கொள்வர். மூலதனத்தின் ஆதிக்கத்தால் துண்டாடப்பட்ட மனித ஆளுமையின் பூரணமான மீட்சியின்றி மனிதவிடுதலையில்லை. 1875இல் மாக்ஸ் எழுதியதை இங்கு சுருக்கிக் கூறுதல் பயன்தரும். கம்யூனிச சமூகத்தின் உயர் கட்டத்தில் மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான முரண்பாடு மறைந்துவிடும். அங்கு உழைப்பு உயிர் வாழ்வதற்கான ஒரு வழிமுறை மட்டுமல்ல அது வாழ்வின் ஒரு பிரதான தேவையும்கூட. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி தனிநபரின் முழுமையான அபிவிருத்தியை அதிகரிக்க உதவுவதுடன், கூட்டுறவுக்கூடாக உருவாக்கப்பட்ட செல்வமும் பெருகிய நிலையை அடையும் போதே பூர்ஷ்வா உரிமையின் குறுகிய எல்லையை முற்றுமுழுதாகத் தாண்ட முடியும். அப்போதுதான் சமூகம் தனது பதாகையில் ஒவ்வொருவரின் ஆற்றலுக்கேற்ப என்ற நிலையிலிருந்து ஒவ்வொருவரின் தேவைகளுக்கேற்ப எனும் வாசகத்தைப் பொறிக்க முடியும்.

> நீண்ட காலமாக பொதுமக்களின் சம்மதத்துடன் தொடரும் மேலாட்சிக்கு எதிரான ஜனநாயகப் போக்குகள் தொடரும் அதேவேளை, முதலாளித்துவத்தின் தொடர் நெருக்கடிகளையும் புரிந்து கொள்ளும் அறிவு ரீதியான தேடலை இளம் சந்ததி மாணவர்களிடமும் செயற்பாட்டாளர்களிடமும் காண்கிறோம். ஐரோப்பாவில் மாக்சின் மூலதனம் நூலையும் மற்றைய ஆக்கங்களையும் இவர்கள் தேடிப் படிக்கிறார்கள். பல்கலைக்கழகங்களின் பொருளியல் பாட நூல்கள் இதற்கு உதவவில்லை.

இந்தச் சுருக்கமான தத்துவார்த்தப் பின்னணியில் பார்க்கும் போது Fukuyama எவ்வளவு தூரம் Hegel சார்ந்தும் மாக்சிற்கு எதிராகவும் உள்ளார் என்பதும் தெளிவாகிறது. இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒரு முக்கிய தகவல் என்னவெனில் Fukuyama தனது ஆய்விற்குப் பெருமளவில் தங்கியிருந்தது. 20ஆம் நூற்றாண்டின் பிரபல பிரெஞ்சு Hegel தத்துவஞானியான Kojeve இன் கோட்பாடுகளில் ஆகும். Kojeve ஒருவித Hegel வாதி. அவர் மாக்சின் கருத்துக்கள் பலவற்றை உள்வாங்கிய அதேவேளை, வரலாற்றின் இறுதி பற்றி Hegel முடிவையே ஏற்றுக் கொண்டார். சுதந்திரம், சமத்துவம், பரஸ்பர அங்கீகாரம் ஆகிய விழுமியங்களை தாராள ஜனநாயக முதலாளித்துவமே தரவல்லது என வாதிட்ட அவர் இது பற்றிய மாக்சின் விமர்சனங்களை ஏற்கவில்லை. வேறு வார்த்தைகளில் சொன்னால் மாக்ஸ் காணவிரும்பிய வர்க்க முரண்பாடற்ற சமூகத்தை தாராளஜனநாயகம் உலகிற்கு தரவல்லது என்பதே அவரின் வாதம். இதையே Fukuyama தனது ஆய்வு முறைக்குப் பயன்படுத்தினார். 19ஆம் நூற்றாண்டில் பூர்ஷ்வா ஜனநாயக விழுமியங்களின் எழுச்சியில் Hegel கண்டதன் உறுதியாக்கலை 20ஆம் நூற்றாண்டில் 1989இல் Fukuyama சோவியத் அமைப்பின் வீழ்ச்சியில் கண்டார் எனலாம். அவரைப் பொறுத்தவரையில் கம்யூனிசம் தாராள ஜனநாயக முதலாளித்துவத்திடம் தோல்வி அடைந்தமை Hegel & Kojeve இன் முடிவை உறுதிப்படுத்தியதோடு, மாக்சியத்தின் மரணத்தையும் அறிவித்தது. கடந்த 125 வருடங்களில் மாக்சியத்தின் மரணம் பற்றிய அறிவிப்புகள் எண்ணிலடங்கா.

ஆனால் இன்றைய உலகின் யதார்த்தம் என்ன, மனித சிந்தனையாற்றல் மனித அறிநிலை ஸ்தம்பித்து நிற்கிறதா? சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், பரஸ்பர அங்கீகாரம் எல்லாமே எல்லோரும் அனுபவிக்கும் அமைப்பென மேற்கின் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவத்தைக் கூறமுடியுமா? அங்கு மனித அந்நியமாக்கல் அற்றுப் போய்விட்டதா அல்லது அற்றுப் போகும் நிலை வருமா ? இன்று மேற்கத்தைய நாடுகளிலும் உலக ரீதியிலும் காணும் அசமத்துவங்களெல்லாம் முதலாளித்துவத்துக்கும் ஜனநாயகத்துக்குமிடையிலான முரண்பாடுகளைக் காட்டவில்லையா?

**இன்றைய முதலாளித்துவமும் மாக்சின் விமர்சனத்தின் பயன்பாடும்**

முதலாளித்துவத்தின் வரலாறு நீண்டது. குறைந்தது மூன்று நூற்றாண்டுகள் எனலாம். இந்தக் காலவெளியில் மூலதனத்தின் ஆதிக்கம் தொடர்ச்சியாக உலக ரீதியில் பரவி உலக வரலாற்றை மாற்றியுள்ளது. ஏகாதிபத்தியம் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க கண்டங்களுக்கு முதலாளித்துவத்தைக் காவிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றது. ஆயினும் வரலாறு நிறைவு பெறும் நிலையை முதலாளித்துவம் மேற்கு நாடுகளிலேயே இதுவரை கண்டுள்ளது என்பதே Fukuyama போன்றோரின் வாதம். இந்த நாடுகளில் உள்ள நிலைமைகளைப் பார்க்கும் போது பொதுவாக மனித அறிநிலை பூர்ஷ்வா ஜனநாயக விழுமியங்களின் மட்டத்திலேயே இருப்பது உண்மை. அதேவேளை போராட்டங்களுக்கூடாகப் பெற்ற ஜனநாயக உரிமைகளும் சமூகப் பாதுகாப்பும் படிப்படியாக இழக்கப்படுவதை மக்கள் உணர்வதை பல நடைமுறைச் செயற்பாடுகள் காட்டுகின்றன. சீர்திருத்தங்களுக்கூடாகப் பெற்ற சமூக ஜனநாயகமே முதலாளித்துவத்தைப் பொது மக்களுக்கு ஏற்புடைய அமைப்பாக்கியது. ஆனால் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக மூலதனம் அனுபவிக்கும் தொடர்ச்சியான நெருக்கடிகளினால் மேற்கத்தையப் பொருளாதாரங்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதன் விளைவாக அங்கு பல சமூகப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. நீண்ட வரலாற்றைக் கொண்ட முதலாளித்துவத்தால் அதன் அமைப்பு ரீதியான தன்மைகளை அடிப்படையாக மாற்ற முடியவில்லை. நெருக்கடிகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்கள் மீது சுமைகளைப் போடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளது. பூர்ஷ்வா ஜனநாயகம் வளர்ச்சி பெற்ற மேற்கத்தைய நாடுகளில் இந்த நடைமுறையின் தாக்கங்களை வெளிப்படையாக காண முடிகிறது. இது பற்றிய ஆதார பூர்வமான தகவல்களை "சமகாலம்' முதலாவது இதழில் நான் எழுதிய கட்டுரையில் கொடுத்துள்ளேன்.

முதலாளித்துவம் பிறந்து வளர்ந்து ஏகாதிபத்தியமாக எழுந்த புலத்திலேயே இன்று 21ஆம் நூற்றாண்டில் அந்த அமைப்பின் ஈடாட்டங்களைக் காண்கிறோம். நீண்டகாலமாக பொதுமக்களின் சம்மதத்துடன் தொடரும் மேலாட்சிக்கு எதிரான ஜனநாயகப் போக்குகள் தொடரும் அதேவேளை, முதலாளித்துவத்தின் தொடர் நெருக்கடிகளையும் புரிந்து கொள்ளும் அறிவு ரீதியான தேடலை இளம் சந்ததி மாணவர்களிடமும் செயற்பாட்டாளர்களிடமும் காண்கிறோம். ஐரோப்பாவில் மாக்சின் மூலதனம் நூலையும் மற்றைய ஆக்கங்களையும் இவர்கள் தேடிப் படிக்கிறார்கள். பல்கலைக்கழகங்களின் பொருளியல் பாட நூல்கள் இதற்கு உதவவில்லை.

ஏன் நூற்றாண்டுகளுக்குப் பின்பும் முதலாளித்துவத்தினால் வேலையில்லாப் பிரச்சினையையோ, அமெரிக்கா போன்ற நாடுகளில் பொதுமக்களின் கணிசமான தொகையினரின் கல்வி, சுகாதாரத் தேவைகளையோ தீர்த்து வைக்க முடியவில்லை? ஏன் முன்பை விடக் கடந்த முப்பது வருட காலத்தில் சமூகப் பொருளாதார அசமத்துவம் அதிகரித்துள்ளது? ஏன் விளையாட்டுத்துறைகளும் சகல கலாசார உற்பத்திகளும் பொழுது போக்குச் சாதனங்களும் பெருமூலதனத்தினால் ஆட்கொள்ளப்பட்டுள்ளன? இந்தப் போக்கு மனித சுதந்திரங்களை தனியாரின் இலாப நோக்குக்கு கீழ்படுத்துவதுதான் ஜனநாயகமா? இயற்கையின் மனித வாழ்வுக்கு அடிப்படையான சூழலின் அழிவைப் பொருட்படுத்தாது மூலதனம் உலக ரீதியில் இயங்குவதை எப்படிக் கட்டுப்படுத்துவது? இயற்கையின் மூலதனமயமாக்கலுக்கும் பண்டமயமாக்கலுக்கும் முடிவே இல்லையா? முதலாளித்துவம் ஜனநாயக ரீதியில் இயங்கவல்லது என்றால் ஏன் தொடர்ந்தும் இராணுவங்களும் ஆயுத உற்பத்திச்சாலைகளும் பெருக வேண்டும்? நெருக்கடி ஏற்படும் போது ஏன் அதிகார உறவுகள் அரசையும் மக்களின் வரிப்பணத்தையும் மூலதனத்தின் உரிமையாளர்களின் வர்க்க நலன்களைப் பாதுகாக்க பயன்படுத்துகின்றன? தனியுடைமையின் சுதந்திரத்தை முதன்மைப்படுத்தி புனிதப்படுத்தும் பொருளாதார தாராளவாதத்திற்கும் சமத்துவம், மனிதச் சுதந்திரம், கூட்டுச் செயற்பாட்டுச் சுதந்திரம் போன்றவற்றின் உறைவிடமான ஜனநாயகத்திற்கும் இடையிலான முரண்பாட்டை முதலாளித்துவ அமைப்பிற்குள் மாற்றவே முடியுமா? இத்தகைய கேள்விகள் இளம் சந்ததியினரை மாக்சின் நூல்களையும் மாக்சிய ஆய்வுகளையும் தேடவைப்பதில் ஆச்சரியமில்லை. மாக்சின் மூலதனம் மீள் பிரசுரிக்கப்படுவதிலும் ஆச்சரியமில்லை. முதலாளித்துவம் காலாவதியாகாதவரை மாக்ஸின் மூலதனம் காலாவதியாகும் வாய்ப்பே இல்லை.

திட்டமிட்ட கல்வி ரீதியான, கலாசார ரீதியான மேலாட்சிக்கு ஊடாகவே ஜனநாயகம் பூர்ஷ்வா ஜனநாயகமாக்கப்பட்டது. அந்த விழுமியங்களே மனித அறிநிலையின் எல்லையை நிர்ணயிக்கப் பயன்படுகின்றன. ஆனால் அந்த எல்லையை மீறி மனிதரால் சிந்திக்க முடியும். ஒரு மாற்று சமூக அமைப்பினைக் கற்பிதம் செய்து அதற்காகப் போராட முடியும் என்பதை இன்று காண்கிறோம். இப்படிக் கூறும் போது முதலாளித்துவத்தை மாற்றும் சமூக அரசியல் புரட்சி ஆரம்பித்து விட்டது என்பதல்ல அர்த்தம். பூர்ஷ்வா ஜனநாயகத்தில் வாழும் மக்களால் அந்த ஜனநாயகத்தின் எல்லைகளை அனுபவ ரீதியாகக் காணமுடிகிறது. அவற்றையும் தாண்டிய சுதந்திரங்கள் நிறைந்த அமைப்பினைக் கற்பிதம் செய்யும் ஆற்றல் மக்களுக்கு உண்டு. இது நடைமுறை அனுபவம் சார்ந்தது. மக்கள் பெற்ற உரிமைகள் முதலாளித்துவ வர்க்கத்தினால் வெள்ளித்தட்டத்தில் வைத்து வழங்கப்பட்டவையல்ல. அவை அனைத்துமே போராட்டங்களுக்கூடாக கிடைத்தவை. இந்த அம்சத்தை மறந்து பூர்ஷ்வா மேலாட்சித்திட்டத்தையும் அதற்கெதிரான இன்றைய போக்குகளையும் புரிந்து கொள்ள முடியாது.

இறுதி ஆய்வில் மூலதனத்தின் பொருளாதார நலனே முதலாளித்துவ சமூகத்தில் மக்கள் அனுபவிக்கக் கூடிய உரிமைகளின் எல்லைகளை நிர்ணயிக்கிறது. இது வரலாறு தரும் பாடம். அதிகார உறவுகளின் பலமே அமைப்பின் தொடர்ச்சியை உத்தரவாதப்படுத்துகின் றது. இது வரலாற்றின் இறுதிநிலை எனும் மாயையை ஏற்படுத்த உதவலாம். ஆனால் இன்றைய உலகை மாற்ற உதவும் விளக்கத்திற்கான தேடலை யதார்த்தத்தில் காணும் போது அந்த மாயையின் மேலாட்சி நிரந்தரமானதல்ல எனும் நம்பிக்கை பிறக்கிறது. ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனுவல் பார்வை

## வன்னி மாவட்டங்கள்: ஒரு கையேடு

ஆதி

ஈழத்தின் சமகாலத் தமிழ்நூல் உருவாக்கப் பதிப்பு முயற்சியில் புதுவரவாக ஜே.பி.லூயிஸ் எழுதிய "இலங்கையின் வன்னி மாவட்டங்கள்: ஒரு கையேடு" எனும் நூல் தற்போது வெளிவந்துள்ளது. இந்நூலின் முதற் பதிப்பு ஆங்கில மொழி மூலம் 1895இல் வெளிவந்தது. இதன் தமிழ் பதிப்பு 2012இல் வெளிவந்துள்ளது.


இந்நூலின் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் பரிபாலன சபை தமிழ் மொழியாக்கம் செய்து வெளியிட்டுள்ளது. இப்பணியில் வன்னி மைந்தர்கள் பலர் கூட்டாக இணைந்து பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நூலை சேமமடு பதிப்பகம் வெகு சிறப்பாக, அழகாக அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

ஜே.பி.லூயிஸ் அவர்கள் 1889 ஜுலை 15 தொடக்கம் டிசம்பர் 14 வரை உதவி அரசாங்க அதிகாரியாக வன்னியில் பணிபுரிந்தார். இவர் Manual of Vanni Districts (1895) List of Inscriptions of tomstones and Monuments in Ceylon with an Obituary of Persons Un Commemorated (1913) என்னும் நூல்களை வெளியிட்டார்.

இவைஇரண்டும்வன்னியின்அரசியல், பொருளியல், சமூக வரலாற்றுக்கான விலை மதிக்க முடியாத கருவூலங்களாகும். 1846-47 காலப்பகுதியில் பொலிஸ் நீதிவானாகவும், உதவி அரசாங்க அதிபராகவும் ஹென்றி போல் என்பவரும் 1892இல் அரசாங்க அதிபராக இருந்த ஷோட்டும் 1819இல் பதவி வகித்த டைக் என்ற அரசாங்க அதிபரும் வன்னிப் பிரதேச வரலாற்றுக்குத் தேவையான பல தகவல்களை தமது நாட்குறிப்பில் வழங்கியுள்ளனர்.

19ஆம் நூற்றாண்டின் வன்னிப் பிரதேச நிர்வாகத்துக்கும், நீதி பரிபாலனத்துக்கும் பொறுப்பாக இருந்த ஆங்கிலேயர் தமது நாட்குறிப்புகளில் வன்னியைப் பற்றி பல்வேறு தகவல்களை, குறிப்புகளை குறித்து வைத்திருந்தனர். இதில் இப்பிரதேச மக்களின் வாழ்க்கை முறைகள், தொழில்கள், பழக்க வழக்கங்கள், சமூக நடைமுறைகள், சாதி சமய வேறுபாடுகள், தொல்பொருட்கள், நிலம் சார் அம்பங்கள், அரசியல் முதலியவற்றை அவதானித்து நாட்குறிப்புகளில் பதிந்து வைத்திருந்தனர். லூயிஸ் வன்னி மாவட்டக் கைநூலை எழுதுவதற்கு இவை பெரிதும் பயன்பட்டன எனலாம்.




லூயிஸ் தனக்குக் கிடைக்கக்கூடிய நூல்கள், ஆவணங்கள், தொல்பொருட் சின்னங்கள், ஐதீகங்கள் எல்லாவற்றையும் தேடிப் பெற்று ஒரு விரிவான விவரமான நூலை ஆக்கித் தந்துள்ளார். ஊர்கள், குடித்தொகை, சமூகப் பிரிவுகள், காலப்பருவ நிலைகள், கல்வி நிறுவனங்கள், உற்பத்தி முறைகள் முதலானவற்றைப் பற்றி புள்ளிவிபரங்களோடும் ஆவணக்குறிப்புகளின் அடிப்படையிலும் விடயங்களைப் பற்றி மேலும் பிறர் மூலம் கேட்டு அறிந்தனவற்றையும் தான் நேரிலே கண்டு பெற்ற அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு லூயிஸ் இந்நூலை ஆழமாக எழுதியுள்ளார்.

வன்னி பற்றி வெளிவந்த நூல்களில் இந்நூலே முதன்மையானது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள வேறெந்த மாவட்டங்களைப் பற்றியும் இதனைப் போன்ற நூல் வேறெதுவும் வெளிவரவில்லை. சாதாரணவாசகர்களும் மற்றும் ஆய்வாளர்களும் கூட இந்நூலை முழுமையாக வாசித்து புரிந்துகொள்ளக் கூடிய சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்நூலினை நுணுக்கமாக வாசிப்பதன் மூலம் வன்னிப் பிரதேசத்தின் தொன்மைப் பண்பாடுகள், சிறப்புகள், பிரதேச வளங்கள், குடிப்பரம்பல், நீர்ப்பாசனம், நிர்வாகக் கட்டமைப்புகள், சமூக வழக்காறுகள் முதலியவற்றை ஆழமாகவும், தெளிவாகவும் அறிந்து கொள்வதன் ஊடாகவே வன்னிப் பிரதேசத்தின் தனித்தன்மைகளைப் புரிந்து கொள்ளவும் முடியும். மேலும் எதிர்கால வன்னிப் பிரதேச மேம்பாட்டுக்கு திட்டமிடலையும் மேற்கொள்ள உதவும்.

இப்பனுவல் 19ஆம் நூற்றாண்டிற்கு முன்னைய வன்னிப் பிரதேச வரலாற்றினை ஆய்வு செய்யவும் ஓர் உந்து சக்தியை வரலாற்று மாணவர்களுக்கு வழங்குகின்றது. இவ்வாறான அரிய வரலாற்றுத் திரட்டினை நமக்கு வழங்கிச் சென்ற பெரியார் ஜே.பி.லூயிஸ் அவர்களுக்கு வன்னிப் பிரதேசத்தவர்கள் மட்டுமல்ல தமிழ் பேசும் மக்கள் யாவரும் நன்றிக்கடன்பட்டவர்கள்.

இந்நூலுக்கு வரலாற்றுப் பேராசிரியர் சி.பத்மநாதன் விரிவான முன்னுரை எழுதியுள்ளார். இந்நூலில் பொதிந்துள்ள வரலாற்று அம்சங்களைத் தெளிவாகவும் விளக்கமாகவும் அடையாளப்படுத்துகின்றார். இதுபோல் ஏனையவர்களின் குறிப்புகளும் இந்நூலுக்கு சிறப்புச் செய்வனவாக உள்ளன. வரலாற்றுப் பெறுமதிமிக்க இந்நூல் நமது வரலாற்று உணர்வை மீட்டுருவாக்கம் செய்யும் விசையாகவும் அமைந்துள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர்
சி.சிவசேகரம்

# உயர் கல்வியின் நெருக்கடிகள் 2

## பல்கலைக்கழக ஆசிரியர்களின் தகுதியும் தகைமையும்

பல்கலைக்கழக ஆசிரிய நியமனங்களுக்கான அடிப்படைத்தகுதி கள் அண்மைக் காலங்களில் மிகவும் தாழ்த்தப்பட்டுள்ளன. அதற்கு ஆட்பற்றாக்குறை ஒரு காரணமாக இருந்தாலும் தகுதியுள்ளோர் பலர் பல்கலைக் கழகங்களை நாட விரும்பாமையும் ஒரு காரணமாகும். இன அடிப்படையை விடப் பிரதேசவாதம், சாதி என்பனவும் செயற்படுகிற ஒரு நிலையையும் நாம் இன்று காணுகிறோம்.

எனினும் பல்கலைக்கழகக் கல்வியில் 1980களில் இடம்பெறத் தொடங்கிய ''குப்பி'' வகுப்புகள் என்பன பல்கலைக் கழகக்கல்வியின் தரத்தின் சரிவுக்கு ஒரு முக்கியமாகப் பங்களித்துள்ளன. சொந்த முயற்சியால் அறிவைப் பெற வேண்டிய களமான பல்கலைக் கழகத்தில் கடந்த முப்பதாண்டுகளில் விரிவுரையாளர்களின் விரிவுரைக் குறிப்புகளைப் பாடமாக்குவது முதலாக வகுப்பிற் செய்து காட்டப்பட்ட கணக்குகளைப் பாடமாக்கிப் பரீட்சையிலும் எழுதுவது வரையான கல்விமுறை பரவியுள்ளது. இக் கல்வி முறையின் தோற்றுவாய் நம் டியுட்டரிகளாகும். எனினும் டியுட்டரிகள் மூலம் உருவான இளங் கல்விமான்களே தம்மைச் சீர்திருத்த முயலாத விரிவுரையாளர்களாகப் பணியாற்றி வருகிற போது மாணவர்களின் கல்வியறிவு எவ்வளவு விருத்தியடையும் என்பது நாம் ஊகிக்கக் கடினமானதல்ல.

பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் தரத்தின் வீழ்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிற ஒரு விடயம் ஏதெனில், பதவி உயர்வுக்கும் நியமனத்திற்கும் புள்ளிகள் வழங்குகிற முறையாகும். புள்ளிகளைப் பெறுவதற்காகவே புத்தகங்களை எழுதுவதும் பயனற்ற ஆய்வுக் கட்டுரைகளை எழுதித் தரமற்ற ஆய்வுச் சஞ்சிகைகளில் வெளியிடுவதும் பல்கலைக் கழகத்திற்கான சேவை என்று காட்டுவதற்காக மட்டுமே சில பொறுப்புகளை ஏற்பதும் அவற்றிற்கான புள்ளிகளைப் பெற்றவுடன் அப்பொறுப்புகளிலிருந்து ஒதுங்குவதுமான கேவலமான நடைமுறைகள் இன்று மலிந்து விட்டன. நமது பேராசிரியர்களின் மிகச் சிறு எண்ணிக்கையானோரே ஒரு தரமான ஆய்வுப் பாரம்பரியத்தை நிறுவவும் நிலைப்படுத்தவும் செயற்படுகின்றனர். ஆராய்ச்சி என்கிற பேரில் வெளிவரும் பல கட்டுரைகளால் துறைசார்ந்த அறிவும் விருத்தி பெறுவதில்லை சமூகமும் பயனடைவதில்லை.

சில தொழில்சார் கல்வித் துறைகளிலுள்ள விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் சில வகையான நிபுணத்துவங்களையுடையோரும் அவற்றைக் கொண்டு கலந்தாலோசனைகள் மூலமும் அரசாங்க நிறுவனங்களில் மேலதிகப் பொறுப்புகளை ஏற்பதன் மூலமும் காசு சம்பாதிப்பதில் காட்டுகிற அக்கறையைத் தமது முதற் கடமையான கற்பித்தலிலும் பொறுப்பான முறையாகப் பரீட்சித்துப் பரீட்சை முடிவுகளை வேளைக்கு வெளியிடுவதிலும் காட்டுவார்கள் எனின் அவர்களை மெச்சலாம், மெச்சுமாறு பலரது நடத்தை அமைய வில்லை.

நமது பேராசிரியர்களின் மிகச் சிறு எண்ணிக்கையானோரே ஒரு தரமான ஆய்வுப் பாரம்பரியத்தை நிறுவவும் நிலைப்படுத்தவும் செயற்படுகின்றனர். ஆராய்ச்சி என்கிற பேரில் வெளிவரும் பல கட்டுரைகளால் துறை சார்ந்த அறிவும் விருத்தி பெறுவதில்லை, சமூகமும் பயனடைவதில்லை

### உயர் கல்வியின் சீரழிவின் அடிப்படைக் காரணி யாது?

1977வரை உயர் கல்வியின் சீர்குலைவிற்கு முக்கிய காரணமாக இருந்தது உயர் கல்விக்கு வேண்டிய முதலீட்டின்மை என்றால் 1978க்குப் பின்பாகக் கல்வித் துறையைத் தனியார் மயமாக்கும் நோக்கில் அதைச் சீரழிக்கும் ஒரு கொள்கை தொடர்ந்துங் கடைப்பிடிக்கப்படுகின்றமையே முக்கிய காரணமாக உள்ளது.

அரசாங்கம் பல்கலைக்கழகங்களுக்கு அதிக மாணவர்களை அனுமதிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கிறது. புதிய பல்கலைக்கழகங்களின் உருவாக்கமும் ஏலவே உள்ள பீடங்களில் அனுமதியை அதிகரித்தலும் உயர் கல்வி வாய்ப்புகள் பெருகுவதாகக் காட்டினாலும் ஒரு மாணவனுக்கான சராசரிச் செலவினம் தொடர்ச்சியாகவே குறைந்து வந்துள்ளது என்பது பிரத்தியட்சமான உண்மை. பல புதிய பல்கலைக்கழகங்களில் மட்டுமன்றிப் பழையவற்றிலும் முக்கியமான சில துறைகளிலும் ஆசிரியர்கள் இல்லாமை ஒரு பாரிய பிரச்சினையாயுள்ளது. அதை விடவும் தங்கள் தனிப்பட்ட வருமானம் வேண்டி, வேறு வேலைகள் பார்க்கிற சில விரிவுரையாளர்கள் இளம் விரிவுரையாளர்களிடம் தமக்குரிய பொறுப்புகளை ஒப்படைப்பதையும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இவற்றைநோக்கும்போது தெளிவாகத் தெரிவது ஏதெனில், உயர்கல்வியின் தரம் பற்றி அரசாங்கத்திற்கு அக்கறையில்லை. அதேவேளை சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் நெருக்குவாரங்களின் கீழும் வேறு அயல் நெருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாரங்களின் பயனாகவும் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவவும் இலவசக் கல்விக்கு முடிவு கட்டவும் தீவிர முனைப்புடன் அரசாங்கம் இருந்து வந்துள்ளது. இப்போது இந்த நாட்டில் பல அந்நியப் பல்கலைக்கழகங்கள் கடை விரித்துள்ளன. குறைந்த மூலதனத்துடனும் கற்பித்தலுக்கான வளங்களுடனும் ஆகக்கூடிய இலாபம் பெறக்கூடிய துறைகளில் அவை செயற்படுகின்றன. அவற்றின் கல்வித்தரம் பெரும்பாலும் கேள்விக் குரியது என்றாலும் அவற்றை அங்கீகரிப்பதற்கான அழுத்தம் வலுப்பட்டு வருகிறது.

அதுபோக முக்கியமாக மருத்துவத் துறை யிலும் அடுத்தபடியாகப் பொறியியல் போன்ற துறைகளிலும் இலங்கையில் உயர் கல்வி வாய்ப்பற்ற பிள்ளைகளை வசதி படைத்த பெற்றோர் அயல் நாடுகளுக்கு அனுப்புகின்றனர். இலங்கையில் கடை விரித்துள்ள பல்கலைக்கழகங்களாற் செய்ய முடியாதவற்றைச் செய்வதற்காக மலேசியா போன்ற நாடுகளில் கல்வி வணிகம் நடத்தும் உயர் கல்வி நிறுவனங்களும் முன்னாள் சோவியத் நாடுகளின் பல்கலைக்கழகங்களும் சில அண்டைநாடுகளின் பல்கலைக்கழகங்களும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கின்றன. இப்போது இலங்கையில் மருத்துவத்துக்கும் பொறியியலுக்குமான ஒரு தனியார் பல்கலைக்கழகம் மாலபேயில் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. அதன் மருத்துவக் கல்வித் தரம் பற்றிய பலத்த ஐயங்களும் விவாதங்களும் தொடருகின்றன. எனினும் கல்வியை வணிகமாக்கும் முயற்சிகளுக்கு அரசாங்க ஊக்குவிப்பும் வசதிபடைத்த பெற்றோரது ஆதரவும் உள்ளது.

இவற்றை எல்லாம் நோக்கும் போது அரசாங்கம் தனியார் பல்கலைக் கழகங்களை ஊக்குவிக்கும் நோக்குடனேயே தேசியப் பல்கலைக்கழகங்களைச் சீரழிவுக்குள் தள்ளுகிறதா என்ற ஐயம் நியாயமாகவே எழுகிறது.

இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்பு 1988 இல் நடந்த ஜே.வி.பி. கிளர்ச்சியின் பயனாக இரண்டு ஆண்டுகளாக யாழ். பல்கலைக்கழகம் தவிர்ந்த பல்கலைக்கழகங்களால் செயற்பட இயலவில்லை. அதன் பயனாகப் பல்கலைக்கழகஅனுமதியைத்தவறவிட்ட தகுதிவாய்ந்தமாணவர்களையும்சேர்த்து வகுப்புகளை இணைத்தோ சமாந்தரமாக வகுப்புகளை நடத்தியோ பல்கலைக்கழக ஆண்டின் நீளத்தைக் குறைத்தோ அந்த இழப்புஈடுசெய்யப்பட்டுவந்தது. எனினும் இன்று எந்த இரண்டு பல்கலைக்கழகங்களுடைய அரையாண்டுத் தொடக்கங்களும் ஒரே விதமாக அமையாமையை நாம் காணலாம். அதை விடவும் ஒரே பல்கலைக்கழகத்தினுள்ளேயே வெவ்வேறு பீடங்களின் கல்வியாண்டுகள் வெவ்வேறு காலங்களில் தொடங்குவதையும் காணுகிறோம். இவ்வாறான நெருக்கடிகள் பல நாடுகளிலும் போர், இயற்கை அனர்த்தங்கள் போன்ற காரணங்களால் ஏற்பட்டுள்ள போதிலும் அங்கெல்லாம் நிலைமைகளைச் சீர்செய்ய அதிககாலம் எடுத்ததில்லை.

அண்மைக் காலங்களில் பல்கலைக் கழக வேலை நிறுத்தங்களால் திட்டமிட்ட முறையில் கல்வியாண்டைத் தொடக்கி முடிக்க இயலாமலுள்ளது. அதற்கு ஊழியர்களின் மீது பழிசுமத்துவதில் காட்டுகிற அக்கறையைப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசாங்கம் காட்டுவதாகத் தெரியவில்லை.

அண்மைய ஸற் ஸ்கோர் தகராற்றின் காரணமாகப் பல்கலைக்கழக அனுமதியில் ஏற்பட்ட நிச்சயமின்மையும் அதன் விளைவான தாமதமும் தவிர்த்திருக்கக் கூடியன.

மேற்கூறியனவெல்லாம்தம்மளவிலே அடிப்படைப் பிரச்சினைகளல்ல. அவை நமது உயர் கல்வியைப் பிடித்திருக்கும் ஒரு பெரு நோயின் அறிகுறிகள் என்றே கருதுகிறேன். அந்த நோயின் முக்கிய காரணம் நமது கல்விமுறைக்குத் தேசிய நலனும் விருத்தியும் சார்ந்த ஒரு தெளிவான இலக்கின்மை எனலாம். தேசியப் பொருளாதாரமும் தேசிய அபிவிருத்தியும் பற்றிய குறைபாடான பார்வைகள் 1956 முதல் 1970 வரை காணப்பட்டாலும் 1978இல் அவை முற்றாகக் கைகழுவப்பட்டுவிட்டன. திறந்த பொருளாதாரம், தனியார் மயம், தாராளமயம் எனும் கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்தன. அந்தத் தவறான பாதையில் நாட்டை வழி நடத்தி நாட்டின் மறு கொலனியாக்கத்திற்கு வழி செய்யும் நோக்கில் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்குத் தடைக் கற்களாயிருந்த தொழிற் சங்கங்களின் போராட்ட உரிமைகளுக்கு ஆப்பு வைக்கப்பட்டது. நாட்டின் பொருளாதாரம் நேரடியான புலம்பெயர் உழைப்பின் மீதும் சுதந்திர வர்த்தக வலயங்களினூடான உழைப்பின் மீதும் விற்பனை தங்கியுள்ளதனால் நமது உழைப்பாற்றல் நாட்டின் தொழில் வளர்ச்சிக்குக் கிட்டாதவாறு மடைமாற்றப்பட்டது. இப் பின்புலத்திலேயே கல்வித்துறையின் பார்வையும் தேசிய விருத்தியாலன்றிச் சர்வதேசச் சந்தையால் வழிநடத்தப்படத் தொடங்கியது. இங்கெங்கோதான் பிரச்சினையின் வேர்கள் உள்ளன.

### கல்விமான்களின் கையறு நிலை

இலங்கையின் பொறியியலாளர்கள் முடியுமானவரை நாட்டின் நிர்மாண வேலைகள் அனைத்தையும் தாமே செய்து முடிப்பது என்ற ஆர்வம் 1960 களிலும் 1970களிலும் உச்சத்தைத் தொட்டிருந்தது. 1978க்குப் பின்பு அனைத்துப் பெரிய பணிகளும் அந்நியக் கம்பனிகளுக்குக் கையளிக்கப்பட்டு உள்நாட்டு நிறுவனங்கள் கீழ் மட்டத்திலேயே செயற்பட வேண்டி வந்தது. 1970 கள் வரை சில பொருட்களுக்குத் தட்டுப்பாடு இருந்தது. ஆனால் அவசியமான பொருட்களை உள்ளூரில் உற்பத்தி செய்யும் ஆர்வமிருந்தது. 1978க்குப் பின்பு அனைத்தையும் இறக்குமதி செய்யும் போக்கு வளர்ந்துள்ளது. 1980கள் தொட்டு நம்மிடம் உயர் தொழில்நுட்பங் கொண்ட உபகரணங்கள் பலவும் வந்து குவிகின்றன. எனினும் அவற்றின் ஒரு உதிரிப்பாகமேனும் நம் நாட்டில் உற்பத்தியானதல்ல என்பது பெருமைக்குரிய விடயமல்ல.

நமது கல்வியாளர்கள் அந்நியக் கம்பனிகளின் விற்பனை முகவர்களாகவும் அந்நியக் கம்பனிகளின் கீழ் மட்டத்தரகர்களாகவும் மாற்றப்பட்டு வருகின்றனர். இது உலகமயமாக்கலின் பெயரில் துரிதமடைகிறது.

இந்த நாட்டின் மாணவர்களின் எதிர்காலம் ஆங்கிலக் கல்வியறிவின் மீதும் தகவல் தொழில்நுட்பத்தின் மீதும் தங்கியுள்ளது என்று கல்வித்துறை சார்ந்த அறிஞர்கள் பலரின் பரப்புரைகளை வாசித்திருக்கிறேன். அவர்களில் எவரேனும் அந்த ஆற்றல்கள் எந்த வகையில் இந்த நாட்டின் பொருளாதார வளத்தை உயர்த்த இயலும் என்று சொல்லவில்லை. வெளிநாட்டு வேலை வாய்ப்பும் அந்நியக் கம்பனிகளின் முகவர்களின் தொழில் வாய்ப்பும் என்பதற்கு அப்பால் நமது இளைஞர்கட்கான ஒரு எதிர்காலத்தை அவர்களால் கற்பனை செய்ய இயலவில்லை என்றால் நமது அறிஞர் சமூகம் எந்த நிலையில் உள்ளது என்பது நமக்கு விளங்கும்.

எனவே உயர்கல்வியை இன்றைய நெருக்கடியிலிருந்து மீட்பதென்பது அடிப்படையான சில அரசியல்-பொருளாதாரப் பிரச்சினைகளின் தீர்வின் மீதும் தங்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆயினும் ஆட்சியாளர்களால் உயர் கல்வியின் நெருக்கடிக்குத் தீர்வுகளாக முன்வைக்கப்படுகின்றவை பலவும் உயர் கல்வியை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுகின்ற காரியங்களாகவே உள்ளன. எனவே நமது உயர் கல்வித் துறை அறிஞர்கள் கல்வியின் உலகமயமாதல், தனியார் முதலீடு, கல்வியில் சந்தைப் பொருளாதாரம் போன்ற வாய்ப்பாடுகளை ஒப்புவிப்பதைக் கைவிட்டுநமதுகல்வியின்உண்மையான பிரச்சினைகளைப் பற்றி நேர்மையுடன் பேசத் துணிய வேண்டும்.

### உயர் கல்வியை மீட்டெடுப்பதன் சவால்கள்

நாட்டின் பாடசாலைக் கல்வித்துறையின் சீர்கேடுகள் முதலிற் களையப்பட வேண்டும். பாடசாலைக் கல்வி என்பது சிறார்கள் மீதான கொடுஞ் சுமையாக மாறிவிட்டது. எனவே உயர்கல்வியைத்தர முயர்த்துவதற்கு பாடசாலைகளிலிருந்து வெளிவரும் மாணவர்கள் ஆரோக்கியமான, சுயாதீனமான சிந்தனையுடைய சமூக அக்கறையுடைய இளையோராக வருவது முக்கியமானது.

உயர் கல்வியின் பின்பு மாணவர்களுக்கான தொழில் வாய்ப்புகளும் அவர்களது சுய உழைப்பிற்கு உயர் கல்வியின் பயன் என்னவாயிருக்கும் என்ற அடிப்படையிலேயே வெவ்வேறு துறைகளில் உயர் கல்வி வாய்ப்புகள் தீர்மானிக்கப்படவேண்டும்.

இலவசக் கல்வி என்பது ஒரு சமுதாயம் தனது உறுப்பினர்களில் இடும் பெரிய முதலீடு. கற்றோரால் அது சமுதாயத்திற்கு முழுப் பெறுமானத்துடன் மீளத் தரப்பட வேண்டும். எனவே இந்த நாட்டில் இலவசக் கல்வியைப் பெற்றோருக்கு இந்த நாட்டில் ஆற்றலுக்கேற்ற வேலை வாய்ப்புகள்



வழங்கப்படவேண்டும். அதைத் தவிர்த்து வெளிநாடுகளில் வேலை தேடுவோர் தமக்கான கல்விச் செலவை நாட்டிற்கு வட்டியும் முதலுமாகத் திருப்பித் தர வேண்டும் என்பது என் எண்ணம். கல்வி என்பது ஒருவரது பிறப்புரிமை எனும் அதேநேரம் அந்த உரிமையுடன் சேர்த்து ஒரு சமூகப் பொறுப்புரிமை உள்ளதை நாம் மறக்கலாகாது.

எனவே நாட்டின் நலன் கருதி அனைவருக்கும் அடிப்படைக் கல்வியையும் ஒவ்வொருவரது ஆற்றலுக்கமைய நாட்டின் தேவைகட்கமைவான உயர் கல்வியையும் இலவசமாக வழங்குவது அரசின் பொறுப்பு என்பதை மக்கள் தொடர்ந்தும் வலியுறுத்த வேண்டும்.

உயர்கல்விநிறுவனங்களின்பொறுப்புகள் கல்வியை வழங்குவது மட்டுமல்ல புதிய அறிவை உருவாக்குவதும் விருத்தி செய்வதும் பரப்புவதும் அவற்றின் முக்கியமான பணிகளாகின்றன. எனவே ஆராய்ச்சி என்பது உயர் கல்வி நிறுவனங்களின்முக்கிய பணிகளுள்அடங்கும். அதேவேளை, கற்பித்தலையும்பிற கல்வி புகட்டற் கடமைகளையும் விலக்கிச் சுய முன்னேற்றத்திற்கான ஆய்வுகளிலும் சுய இலாபத்திற்கான பணிகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர்கள் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

ஆராய்வு என்பது நிபுணர்கட்கும் அறிஞர்கட்கும் மட்டுமுரிய ஒன்றல்ல. எதையும் ஆராய்ந்து விஞ்ஞான ரீதியான முடிவுக்கு வரும் ஆற்றலும் பயிற்சியும் வழங்கப்படின் எவருக்கும் தமது பணிகளைச் சிறப்புறச் செய்ய இயலுவதுடன் புதிய உண்மைகளையும் கண்டறிய இயலும். எனவே, உயர் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் சுயமான தேடலையும் சுதந்திரமான சிந்தனையையும் சமூக நலன் மீதான நாட்டத்தையும் ஊக்குவிக்கும் நோக்குடன் செயற்பட வேண்டும்.

உயர் கல்வி என்றால் பல்கலைக்கழகக் கல்வி மட்டுமே என்ற மனநிலை சமூகத்திற் பரவலாக நிலவுகிறது. உயர் கல்வி என்பது உத்தியோகத்திற்கானது எனவும் உடலுழைப்பைத் தவிர்ப்பதற்கான ஒரு வழி எனவும் பொதுவாக நாம் எண்ணுகிறோம். இவை தவறான அணுகுமுறைகள்.

தனியார் மயமாக்கலும் திறந்த பொருளாதாரமுமே நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்ற பிரசாரம், சோவியத் யூனியனின் உடைவுடன்

**நமது கல்வியாளர்கள் அந்நியக் கம்பனிகளின் விற்பனை முகவர்களாகவும் அந்நியக் கம்பனிகளின் கீழ் மட்டத்தரகர்களாகவும் மாற்றப்பட்டு வருகின்றனர். இது உலகமயமாக்கலின் பெயரில் துரிதமடைகிறது**

தீவிரமாயிற்று. இன்று அது பொய்த்து விட்டது என்பதை நாம் காணுகிறோம். கல்வி, சுகாதாரம், சமூக சேவைகள் என்பன வணிகப் பொருட்களாக்கப்பட்டதன் மூலம் எந்த நாட்டிலும் கல்வியோ சுகாதாரமோ சமூக நலன்களோ உயர்வு பெற்றதாகக் கூற இயலாது. எனவே அமெரிக்க முதலாளியக் கல்விமுறையை முன்மாதிரியாகக் கொண்டு நமக்கு அறவே பொருத்தமற்ற தனியார் பல்கலைக்கழகங்களையும் அந்நியப்பல்கலைக்கழகங்களின் வளாகங்களையும் வளர விடுவதையும் பற்றி நாம் எச்சரிக்கை யுடன் இருப்பதுடன், அவற்றை விலக்கி அரசாங்கமே நாட்டின் கல்வித் தேவையை நிறைவு செய்வதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டுமென வற்புறுத்த வேண்டும்.

பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்தில் அரசாங்கக் குறுக்கீடு இதுவரை எவ்வித மானநற்பயனையும்தரவில்லை. எனவே பல்கலைக்கழகங்களின் சுயாதிபத்தியம் பேணப்பட வேண்டும் என்பது சரியானது. அதேவேளை, பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகள் மூடுமந்திரமாகவும் பொது விசாரணைக்கும் கேள்விகளுக்கும் அப்பாற்பட்டவையாக இருப்பது தவறானது. இப்போது இலங்கைப் பல்கலைக்கழகங்களைச் சர்வதேச மாணவர்களுக்குத் திறந்து விட்டு வருமானம் ஈட்டலாம் எனவும் பேசப்படுகிறது. அதற்கு முன்னர் பல்கலைக்கழகங்கள் சீராகத் தமது பணிகளை மேற்கொள்வதும் நாட்டின் உயர்கல்வித் தேவைகளை நிறைவு செய்யுமாறு விரிவாவதும் முக்கியமானது.

என் பிரதான ஐயங்களும் கவலைகளும் அரசாங்கங்களின் இரகசிய வேலைத் திட்டங்கள் பற்றியன. கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் வழிகாட்டலிலேயே அரசாங்கங்கள் இயங்கி வந்துள்ளன. இந்த நாட்டின் பூரண நவகொலனியாக்கமே அவற்றின் இலக்கு. எனவே நமது உயர் கல்வித்துறையின் குறைபாடுகள் அனைத்தினதும் நடுவில் நமது உயர் கல்வியின் மீட்சிக்கான போராட்டம் இலவசக் கல்வியைக் காப்பாற்றுவதாக அமைய வேண்டும். ஒவ்வொரு மாணவரது கல்விக்குமான அரசாங்க முதலீட்டை நமது அயலிலுள்ள நாடுகளின் முதலீட்டின் அளவுக்கேனும் உயர்த்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். பல்கலைக்கழகக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான ஒரு பாரிய தேவை உள்ளது. அது உடனடியாகச் செயற்படுத்தக்கூடியதல்ல. எனினும் அரசியற் குறுக்கீடுகளின் இடத்தில் சமூகத்திற்குப் பொறுப்பானவையாகப் பல்கலைக்கழகங்களை மாற்றுவதற்கான அழுத்தங்கள் பல தளங்களிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






எம்.பி.வித்தியாதரன்

# இந்தியாவின் புதிய ... இலங்கையின் ந...

பாராளுமன்றத்தில் ஒரு இளம் உறுப்பினராக இருந்தவேளையிலேயே ஜனா திபதி மாளிகையில் நன்கு பராமரிக்கப்படுகின்ற குதிரையாக பிறக்க வேண்டும் என்று விரும்பியவர் அவர். இப்போது நான்கு தசாப்தங்களுக்கும் கூடுதலான காலத்திற்குப் பிறகு இந்தி யாவின் மிகவும் பழையதும் பெரியது மான கட்சியான காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவரான 76 வயதான அவரின் கனவு நனவாகியிருக்கின்றது. அவர் இந்தியாவின் 13ஆவது ஜனாதி பதியாக வந்திருக்கிறார். இதுதான் பிர ணாப்முகர்ஜியின் ஜனாதிபதிமாளிகை நோக்கிய பயணத்தின் சுவாரஸ்யமான கதை.

மேற்குவங்காள மாநிலத்தைச் சேர்ந்த மிகவும் பிரபல்யமான காங்கிரஸ் தலைவரான முகர்ஜி தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் லோக்சபா சபாநாயகரான புர்னோ சங்மாவை மிகப்பெரும் வித்தியாசத்தில் தோற்கடித்திருக்கிறார். இந்தியாவின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில சட்ட சபைகள், யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களினால் அளிக்கப்பட்ட மொத்தம் 10,47,971 பெறுமதியான வாக்குகளில் 68.12 சதவீதத்தை முகர்ஜி பெற்றார். சங்மாவினால் 30.15 சதவீதமான வாக்குகளையே பெறமுடிந்தது. 5,29,584 மொத்த வாக்குப்பெறுமதியைக் கொண்ட 748 எம்.பி.க்கள் மத்தியில் முகர்ஜி 527 வாக்குகளைப் (3,73,116) பெற்ற அதேவேளை, சங்மா 206 வாக்குகளை (1,45,848) பெற்றார். முன்னாள்மத்திய அமைச்சரும் சமாஜ்வாதிக் கட்சியின் தலைவருமான முலாயம் சிங் யாதவின் வாக்கு உட்பட 81 வாக்குகள் செல்லுபடியற்றவை.

சங்மா ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஒரு பங்காளிக் கட்சியான தேசியவாத காங்கிரஸ் கட்சியின் ஒரு தலைவராவார். எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவர் தீர்மானித்ததையடுத்து கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். சங்மாவை தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதாவும் ஒரிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக்குமே முதலில் திடீரென்று ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நியமித்தனர். அவரை பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆதரித்தது.

இந்தியாவின் வடகிழக்கு பிராந்தியத்தைச் சேர்ந்த ஒரு பிரபலமான தலைவரான சங்மா முன்னதாக காங்கிரஸ் கட்சியிலிருந்தவர். காங்கிரஸின் தலைவி சோனியா காந்தி வெளிநாட்டவர் என்பது தொடர்பில் மூண்ட சர்ச்சையை அடுத்து கட்சியைவிட்டு சரத் பவார் சகிதம் வெளியேறிய சங்மா அவருடன் சேர்ந்து தேசியவாதக் காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்தார். தேசியவாதக் காங்கிரஸின் தலைவராக சரத்பவார் இருக்கிறார். காங்கிரஸில் முன்னர் இருந்த காரணத்தினால் தனக்கு அக் கட்சியைச் சேர்ந்தவர்களின், குறிப்பாக பழங்குடி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டசபை உறுப்பினர்களின் வாக்குகள் கிடைக்குமென்று சங்மா நம்பினார். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. பதிலாக முகர்ஜியின் உயர்த்தியும் பெரும்பாலான கட்சிகளுடனான அவரின் உறவுகளும் சங்மாவின் முயற்சியை பயனற்றவையாக்கின. இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி (வலது), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகள், சிவசேனை, தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த ஐக்கிய ஜனதா தளம் போன்ற எதிர்க்கட்சிகளும் கூட முகர்ஜிக்கே வாக்களித்தன.

முகர்ஜி வசதியாக தேர்தலை இறுதியில் வென்றபோதிலும் கூட அவரது பிரசாரப் பயணம் நிச்சயமற்ற தன்மையையும் நாடகப்பாணியிலான நிகழ்வுகளையும் கொண்டதாக இருந்ததைக் காணமுடிந்தது. அவரை வேட்பாளராக அறிவித்த நிகழ்வுகூட நாடகப் பாணியில் தான் அமைந்தது. முகர்ஜியை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தும் நோக்கத்தை வெளிப்படுத்தியது காங்கிரஸ்கட்சி யல்ல- ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் பங்காளிக்கட்சிகளில் ஒன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றான திரிநாமுல் காங்கிரஸின் தலைவியும் மேற்குவங்காள முதலமைச்சருமான மமதா பானர்ஜியே ஆவார். தான்தோன்றித் தனமான செயற்பாடுகளுக்கு பெயர்போன மமதா பானர்ஜி முகர்ஜியையும் இந்திய உப ஜனாதிபதியான ஹமீட் அன்சாரியையும் வேட்பாளராக அறிவித்தார். முன்னைய பல சந்தர்ப்பங்களில் காங்கிரஸ் தலைமைத்துவம் அன்சாரியை ஜனாதிபதியாக்குவதற்கான விருப்பத்தை வெளிக்காட்டியிருந்தது. முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதாலும் உபஜனாதிபதி என்ற வகையில் சிறப்பாகச் செயல்பட்டவர் என்பதாலும் ஜனாதிபதியாக வருவதற்கான நல்ல வாய்ப்புகளைஅன்சாரிகொண்டிருந்தார்.

ஆனால் இருவேட்பாளர்களையும் ஏற்றுக்கொள்வதற்கு மமதா பானர்ஜி தயாராக இருக்கவில்லை. முன்னாள் இந்திய வெளியுறவுச் சேவையின் ஒரு அதிகாரி என்ற வகையில் அதிகாரத்துவ முறையில் செயற்படக் கூடியவர் என்று அன்சாரியைக் கருதிய மமதா அவர் ஜனாதிபதியாக்கப்படுவதை விரும்பவில்லை. அத்துடன் அவர் முகர்ஜியையும் எதிர்த்தார். தனது மாநிலத்தின் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கு மத்திய நிதியமைச்சர் என்ற வகையில் முகர்ஜி உதவவில்லை என்பதற்காகவே இந்த எதிர்ப்பு. மேற்குவங்காளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்திலிருந்தபோது அவர்களுடன் மிகவும் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்த முகர்ஜி மாநிலத்தின் தற்போதைய நிலைக்குப் பொறுப்பானவர் என்றும் மத்திய அரசிடமிருந்து கடன்களை அனுமதித்தவர் என்றும் மமதா வாதித்தார்.

காங்கிரஸ் தலைமைத்துவத்துடன் ஒரு கடுமையான விளையாட்டை ஆடுவதற்கான முயற்சியாக மமதா இந்தியாவில் சனத்தொகை கூடிய மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில் பெருவெற்றி பெற்ற சமாஜ்வாதிக் கட்சியின் முலாயம் சிங் யாதவுடன் அணிசேர்ந்து கொண்டார். அவர்களிருவரும் காங்கிரஸ் முன்வைத்த பெயர்களை நிராகரித்து முன்னாள் ஜனாதிபதி எ.பி.ஜே.அப்துல் கலாமின் பெயரை முன்மொழிந்தார்கள். ஆனால் ஒரு நாள் கழித்து காங்கிரஸ் தலைமைத்துவம் முலாயம் சிங் யாதவை எவ்வாறோ தன்பக்கம் இழுத்துவிட்டது. மமதா பானர்ஜி தனித்துப் போனார். அதிகாரத்துவ தோரணையுடனான ஒருவர் ஜனாதிபதியாக்கப்படுவதை முலாயம் சிங் யாதவும் விரும்பாததால் காங்கிரஸ் இறுதியாக முகர்ஜியின் பெயரை அறிவித்தது. வேறுமாற்று வழியில்லாததால் மமதாவும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் முடிகின்ற கட்டத்தில் முகர்ஜியை ஆதரிப்பதாக அறிவிக்க வேண்டி வந்தது. முலாயமும் மமதாவும் ஆதரிக்க தீர்மானித்ததால் முகர்ஜியின் வெற்றி முன்கூட்டியே முடிவாகப் போய் விட்டது. பாராளுமன்றத்தில் இரு சபைகளினதும் உறுப்பினர்களும் சட்டசபைகளின் உறுப்பினர்களுமே இந்திய ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்கள். மாநிலத்தின் சனத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையின் அடிப்படையிலேயே எம்.பி.க்களினதும் சட்டசபை உறுப்பினர்களினதும் வாக்குகளின் மதிப்பு கணிப்பிடப்படுகிறது. இதனடிப்படையில் உத்தரப் பிரதேசத்தைப் போன்று சனத் தொகை கூடிய மாநிலங்களின் உறுப்பினர்களின் வாக்குகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றது.

1969 இல் முதல்தடவையாக பாராளுமன்ற உறுப்பினராக வந்த முகர்ஜி மிகவும் விவேகமான ஒரு தலைவர். நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற போதிலும் கூட அவரது பலம் ஒருபோதுமே வாக்காளர் வங்கியில் தங்கியிருக்கவில்லை. கடந்த 2009 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு முதல்தடவையாக லோக்சபாவிற்கு தெரிவான முகர்ஜி அதற்கு முதல் எப்போதுமே மேற்கு வங்காள மாநில சட்டசபை உறுப்பினர்களினால் ராஜ்ய சபா உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு வந்தார். ஆனால் அவர் ஒரு பிரகாசமான மூளை கொண்டவர். காங்கிரஸையும் அதன் தலைமையிலான அரசாங்கங்களையும் பொறு த்தவரை முகர்ஜி ஆபத்தான நேரங்களில் உதவுகின்ற "தீயணைப்பு பிரிவின் தலைவராக" பல தசாப்தங்களாக செயற்பட்டு வந்திருக்கிறார்.இடதுசாரிகளோ வலதுசாரிகளோ எந்தத் தரப்புடன் என்றாலும் கட்சிகளுடனும் தலைவர்களுடனும் உன்னதமான உறவுகளைப் பேணுவதற்கு முகர்ஜியினால் எப்போதும் முடிந்திருக்கிறது. முகர்ஜியின் இந்த குணாம்சம் காரணமாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு - 1இன் போதும் தற்போது ஐக்கியமுற்போக்குக் கூட்டணி அரசு - 2இன் போதும் நெருக்கடிகளை சமாளிக்கக் கூடியதாக இருந்திருக்கிறது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு - 1 இல் இடதுசாரிகளும் அங்கம் வகித்தார்கள். ஒன்றன்பின் ஒன்றாக பல நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு முகர்ஜி உதவியிருக்கிறார்.

வெளியுறவு விவகாரம் என்றால் என்ன, உள்நாட்டுப் பாதுகாப்பு விவகாரம் என்றால் என்ன,நிதி சம்பந்தப்பட்ட விவகாரம் என்றால் என்ன,சகல வகையான பிரச்சினைகளையும் கையாள்வதற்கு பிரதமருக்கு ஒரு ஆற்றல் மிக்க துணைவராக முகர்ஜி விளங்கி வந்திருக்கிறார். காங்கிரஸ் கட்சியினாலும் நாட்டினாலும் எதிர்நோக்கப்பட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தலைவி சோனியா காந்திக்கு முகர்ஜி பெரும் உதவியாளராக விளங்கிவந்திருக்கிறார். ஒரு குறுகிய காலம் தவிர மற்றும்படி காங்கிரஸ் கட்சிக்கு மிகவும் விசுவாசமானவராகவே முகர்ஜி செயற்பட்டு வந்திருக்கிறார். 1984 அக்டோபர் இறுதியில் இந்திரா காந்தி மெய்ப்பாதுகாவலரினால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து தன்னை காபந்து பிரதமராக நியமிக்க வேண்டுமென்று யோசனை தெரிவித்ததைத் தொடர்ந்து ராஜீவ் காந்தியினால் ஓரங்கட்டப்பட்ட முகர்ஜி ஒரு குறுகிய காலத்துக்கு காங்கிரஸைவிட்டு வெளியேறியிருந்தார். பிறகு ராஜீவ் காந்தியுடனான உறவுகளை சீர்செய்துகொண்டு 1989 இல் தனது ராஷ்டிரிய சமாஜ் கட்சியை காங்கிரஸுடன் அவர் இணைத்துக் கொண்டார்.

வாக்காளர் செல்வாக்குத் தளமொன்றைக் கொண்டிருக்காவிட்டாலும் கூட (2004 மே பொதுத்தேர்தலில் மாத்திரமே முதல் தடவையாக பாராளுமன்றத்திற்கு மக்களினால் நேரடியாகத் தெரிவு) மிகவும் அரசியல் அபிலாசைகளைக்கொண்ட ஓர் பேர்வழி இந்த முகர்ஜி. 1969 இல் பாராளுமன்ற உறுப்பினராக வந்தது முதல் புதுடில்லியில் இவரின் உத்தியோகபூர்வ விடுதி ஜனாதிபதி மாளிகைக்கு மிக நெருக்கமாகவே இருந்து வருகின்றது. இவரது வீட்டிலிருந்து பார்த்தால் ஜனாதிபதி மாளிகைக் குதிரைகள் பராமரிக்கப் படுவதை காணக்கூடியதாக இருக்கும். ஒரு நாள் வராந்தாவில் இருந்து மூத்த சகோதரியுடன் தேநீர் குடித்துக் கொண்டிருந்த போது அந்தக் குதிரைகளைக் காட்டி "அக்கா இந்தக் குதிரைகளைப் பாருங்கள்

# ஒரு கிராம பையனின் கெட்டித்தனம்

இந்தியாவின் புதிய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை - காந்தி குடும்பத்தைச் சாராத மிகவும் சக்திவாய்ந்த காங்கிரஸ் தலைவர் என்று இந்தியாவின் ஊடகங்கள் வர்ணிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பிரதமர் பதவி மீது நீண்ட காலமாக கண் வைத்திருந்த அவருக்கு அந்தப் பதவி இறுதியில் கிடைக்காமலே போய்விட்டது. ஆனால் ஜனாதிபதியாவதற்கே அவருக்கு தலையெழுத்து. பிரணாப்முகர்ஜியைப் போன்று அரசியல் அறிவும் அனுபவமும் கொண்ட ஒரு தலைவர் முன்னர் ஒருபோதும் இந்தியாவில் ஜனாதிபதிப் பதவியை வகித்ததில்லை என்று கூட ஊடகங்கள் அவரை புகழ்ந்திருக்கின்றன. மிகவும் நிதானமாக முன்கூட்டியே நிலைவரங்களை மதிப்பிட்ட பிறகே சோனியா காந்தியின் பரிவாரம் முகர்ஜியை ராஷ்டிரபதிபவனுக்கு அனுப்பி வைக்கத் தீர்மானித்ததாகவும் கூறப்படுகிறது.

அடுத்த பொதுத் தேர்தலில் எந்தவொரு பிரதான அரசியல் அணிக்குமே லோக்சபாவில் அறுதிப் பெரும்பான்மைப் பலம் கிடைக்காமல் ஒரு தொங்கு பாராளுமன்றம் ஏற்படுமேயானால் முகர்ஜி எவ்வாறு நடந்துகொள்வார் என்று எவராலுமே நிச்சயமாகக் கூற முடியாதுள்ளது. தீர்மானங்களை தனது சொந்தத் துணிச்சலுடன் எடுக்கக்கூடிய ஒருவராகத் தன்னை முகர்ஜி நிரூபிப்பாரா அல்லது இன்னொரு விசுவாசமான காங்கிரஸ்காரர் என்று நிரூபிப்பாரா என்று இந்தியாவின் பிரபல ஆங்கில சஞ்சிகைகளில் ஒன்றான "அவுட்லுக்" கேள்வி எழுப்பியிருக்கின்றது.

அந்த சஞ்சிகையின் பிந்திய இதழுக்கு ஜனாதிபதி முகர்ஜி பேட்டியொன்றை அளித்திருக்கிறார். அரசியலில் சர்ச்சையை ஏற்படுத்தக்கூடியவை என்றுதான் கருதிய கேள்விகளுக்கு தனக்கே உரித்தான சாதுரியத்துடன் அவர் பதிலளித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவுட்லுக் சஞ்சிகைக்காக ஜனாதிபதியை எஸ். என்.எம். ஆப்டி பிரத்தியேகமாகக் கண்ட பேட்டியை கீழே மறுபிரசுரம் செய்கிறோம்.

- **ஜனாதிபதி அவர்களே, நீங்கள் முன்னர் ஒருபோதுமே எவருக்கும் கூறியிராத விடயம் ஒன்றை எனக்குச் சொல்வீர் களா?**

சில இரகசியங்கள் புதைகுழிக்குப் போவதற்கே விதிவசமானவை என்று வின்சன் சேர்ச்சிலோ அல்லது அந்தனி ஈடன் எழுதியிருந்தார்கள். ஆட்சித் திறமைக்கான ஒரு நிர்ப்பந்தமாக இன்னமும் கூட இரகசியம் விளங்கவே செய்கிறது.

- **வாசகர்களின் முகத்தில் சிரிப்பை வரவழைக்கக் கூடிய (இதுவரை சொல்லப்படாத) கதையொன்று உங்களிடம் நிச்சயமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.**

ஆமாம். இதுவரை சொல்லப்படாத ஜனாதிபதிக் கதையொன்று சொல்லட்டுமா? 1948 ஆம் ஆண்டு எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றிற்கு ஒரே குஷி. அவை வேலை செய்யத் தேவையில்லை வெறுமனே சாப்பிட்டு விட்டு இருக்கின்றன. பள பளக்கும் மேல் அங்கிகள் கூட அந்தக் குதிரைக்கு அணிவிக்கப்படுகின்றது. நான் இறக்கும் போது மறுபிறவியில் ராஷ்டிரபதியின் குதிரையாக வருவேன்''. என்று கூறினாராம். அதற்கு சகோதரி அன்னபூர்ணாதேவி "ஏன் நீ ராஷ்டிரபதி யின் குதிரை யாக வேண்டும், நீ இந்த வாழ்வில் ராஷ்டிரபதியாகவே வருவாய்'' என்று பதில் கூறினார்.

உயர் பதவிகளில் முகர்ஜிக்கு இருக்கும் காதல் பிரபல்யமானது. இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டதையடுத்து தன்னை காபந்து பிரதமராக்க வேண்டும் என்று ராஜீவ் காந்தியிடம் இவர் யோசனை கூறி இருந்தார். அதனால் ராஜீவ் காந்தியின் ஆத்திரத்திற்குள்ளான இவர் பெரும்பாதிப்புக்குள்ளாக வேண்டியிருந்தது. ஓரங்கட்டப்பட்டதையடுத்து இன்னொரு கட்சியைத் தொடங்கினார். ராஜீவ் காந்திக்கு இவர் கூறிய யோசனை என்னதான் இவரிடம் விவேகமும் அரசியல் சாதுரியமும் இருந்தபோதிலும் கூட காங்கிரஸ் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படும் வரை பாதிக்கவே செய்தது போல் தெரிகிறது. மமதா பெயர்களை வெளியிட்டுக் கொண்டிருந்ததால் இறுதியாக காங்கிரஸ் முகர்ஜியை தெரிவுசெய்யக்கூடிய நிர்ப்பந்தத்துக்குள்ளானது என்று சில அவதானிகள் கூறுகிறார்கள். எது எவ்வாறிருப்பினும் இப்போது முகர்ஜி இந்தியாவின் ஜனாதிபதி.

பிரணாப் முகர்ஜியில் இந்தியா ஒரு அறிவுபூர்வமான - நடைமுறைச் சாத்தியமான கொள்கைகளைப் பின்பற்றுகிற ஒரு ஜனாதிபதியைக் காணமுடியும். முகர்ஜி அரசியலமைப்பு நடைமுறைகளிலும் கோட்பாடுகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். இறுதியாக பதவி விலகிய ஜனாதிபதி பிரதீபா பட்டீலையோ அல்லது அரசியல்வாதியல்லாத ஜனாதிபதி அப்துல்கலாமையோ அல்லது கே.ஆர்.நாராயணனையோ போலன்றி தீவிர அரசியலிலிருந்து நேரடியாகவே ஜனாதிபதி மாளிகைக்கு வந்தவர் முகர்ஜி. இதற்கு முதல் இறுதியாக (ராஜீவ் காந்தியின்) அமைச்சரவையில் இருந்து நேரடியாக 1982 இல் ஜனாதிபதியாக வந்தவர் கியானி ஜெயில் சிங் ஆவார்.

ராஜீவ் காந்தியுடன் அரசியல் பதற்ற நிலையை ஜெயில் சிங் ஏற்படுத்தியதைப் போன்று பிரணாப் முகர்ஜியும் செய்வாரா? இதுவே அரசியல் அவதானிகள் கிளப்புகின்ற கேள்வி.

இந்திய அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு எந்தவொரு நிறைவேற்று அதிகாரப்பாத்திரமும் கிடையாது. ஆனால் அவரின் செயற்பாடுகள் (உதாரணத்திற்கு சட்டமூலங்களை அங்கீகரிப்பது அல்லது மீள் பரிசீலனைக்கு அவற்றை அனுப்புவது, புதிய அரசாங்கத்தை அமைப்பது, பதவியிலிருக்கும் அரசொன்றை நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர்கொள்ளுமாறு கேட்பது) அரசியல் முக்கியத்துவம் உடையவையாக இருக்கும். ஜனாதிபதி பதவி என்பது ஒரு இறப்பர் முத்திரையுமல்ல. சம்பந்தப்பட்ட சர்ச்சையைப் பொருட்படுத்தாமல் புள்ளிக்கோட்டில் கை எழுத்துட வேண்டிய ஒரு தேவையுமில்லை. அவரது தற்துணிபுக்கு கடுமையான சட்ட ரீதியான மட்டுப்பாடுகள் இருக்கின்ற அதேவேளை, ஆலோசனை வழங்குவதில் அல்லது எச்சரிக்கை செய்வதில் அவருடைய பாத்திரம் அரசியலமைப்பினால் நன்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்திற்கான ஒரு இறப்பர் முத்திரையாக முகர்ஜி இருக்கப்போவதில்லை என்றும் பலர் நம்புகிறார்கள். எந்தவொரு பக்கச் சார்புமின்றி அரசியலமைப்பை உறுதியாகப் பின்பற்றப் போவதாக அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார். முகர்ஜியின் கடந்தகாலச் செயற்பாடுகள் எதிரணிக்கட்சிகளுக்குக் கூட போதுமான நம்பிக்கையுணர்வை கொடுத்திருக்கின்றன. அவர் மத்திய இடது சிந்தனையைக் கொண்டவர். இடது



13 வயது. 7ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். மேற்குவங்காள மாநிலத்தில் பிர்பூம் மாவட்டத்தில் பின் தங்கிய கிர்நார் கிராமத்தில் எமது பாடசாலைக்கு விஜயம் செய்த மாவட்ட நீதிபதி பி.பி.ஐ.பைத நாதனை அதிர்ச்சியடையச் செய்தேன். அவர் இந்திய சிவில் சபை அதிகாரி. எனது வகுப்புக்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாக 10ஆம், 9ஆம், 8ஆம் வகுப்புகளுக்குச் சென்று மாணவர்களிடம் அந்த வருடம் நடைபெறுகின்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பெயர்களைக் கூறுமாறு நீதிபதி கேட்டிருக்கிறார். ஒருவருமே பதில் சொல்ல வில்லை. பின்னர் எனது வகுப்பு வந்த நீதிபதி அதே கேள்வியைக் கேட்டார். நான் அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஹரி எஸ்.ரூமனும் தோமஸ் டீவேயும் வேட்பாளர்கள் என்று பதிலளித்தேன். பதிலைக் கேட்டு எனது தலைமை ஆசிரியருக்கு பெரிய சந்தோசம்.

**• ஒரு கிராமப் பையனுக்கு இந்தளவு பொதுஅறிவு இருந்தது ஆச்சரியப் படத்தக்க ஒரு விடயம் அல்லவா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் மாவட்ட நீதிபதி அதிர்ச்சியடைந்து விட்டார். எனது தந்தையார் அரசியல்வாதியாக இருந்ததால் எனது வீட்டில் அமெரிக்கத் தேர்தலைப் பற்றிப் பேசப்பட்டிருக்கக் கூடும். அதனால் இந்தப் பையனுக்கு நீங்கள் கேட்ட கேள்விக்கான பதிலைச் சொல்லக்கூடியதாக இருந்திருக்கிறது என்று தலைமை ஆசிரியர் நீதிபதியிடம் விளக்கமளித்தார்.

**• என்ன இருந்தாலும் இதுவொரு செயற்கரிய செயல் அல்லவா?**

நீதிபதி எனது பெயரைக் குறிப்பிட்டாலும் கூட, தனது சுயசரிதையில் இந்த பாடசாலைச் சம்பவத்தை குறிப்பிடுகின்ற அளவுக்கு அதனால் கவரப்பட்டிருந்தார் என்பது முக்கியமான விடயம். எனது பதில் அவரை பிரமிக்கச் செய்தது என்பதே அதன் அர்த்தம். தென்னிந்திய தோட்டத் துரைமார் சங்கத்தின் நிகழ் வொன்றில் கலந்து கொள்வதற்காக 1980இல் கோயம்புத்தூர் சென்றிருந்த போது அவரது புத்தகத்தை தற்செயலாகப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. என்னை அந்த நிகழ்வுக்கு வரவழைத்தவர்கள் பைதநாதன் இருக்கும் இடத்தைக் கண்டு

சாரிகளின் ஆதரவுடன்தான் முகர்ஜி முதல்தடவையாக பாராளுமன்றத்திற்கு தெரிவானவர்என்பது கவனிக்கத்தக்கது.

முகர்ஜி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை இலங்கைக்கு ஒரு நல்ல செய்தியாகும். அவர் உண்மையில் இலங்கையின் நல்லதொரு நண்பன். நன்கு அனுபவம் கொண்ட கொள்கை வகுப்பாளர் மற்றும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் என்ற வகையில் அவர் சகல பிரஜைகளுக்கும் சமத்துவமான உரிமைகளும் சமத்துவமான வாய்ப்புகளும் வழங்கப்படுகின்ற சகல தரப்பினர்களையும் உள்வாங்குகின்ற ஒரு இலங்கையில் நம்பிக்கை கொண்டவர். கொழும்புஆட்சியாளர்களினால்பாரபட்சத்திற்குள்ளாக்கப்பட்டு வந்திருக்கின்ற இலங்கைத் தமிழர்களின் ஒரு நண்பர் அவர் என்பதும் தெளிவானது. தமிழர்கள் மீதான தனது அக்கறைகளை அவர் தெளிவாக பல தடவைகளில் வெளிக்காட்டியிருக்கிறார். ஐக்கியப்பட்ட ஒரு இலங்கையை அவர் ஆதரித்து நின்ற போதிலும் கூட தமிழ்க்குடி மக்களின் அவலங்கள் தொடர்பில் அவருக்கும் இந்தியாவுக்கும் ஆழமான அக்கறை இருந்திருக்கிறது. ■

பிடித்து என்னுடன் அவரை தொலைபேசியில் கதைக்க வைத்தார்கள். அவ்வாறு பேசும் போதுதான் டில்லியில் பைதநாதனை சந்தித்ததை புரிந்து கொண்டேன். அது 1975 ஆம் ஆண்டு. நான் அப்போது இணை நிதியமைச்சராக இருந்தேன். அப்போது அவர் ஓய்வுபெற்ற போதிலும் நிதியமைச்சின் கீழிருந்த பாதுகாப்புத்துறை கணக்குகளுக்கான கட்டுப்பாட்டாளராகப் பணியாற்றினார். அதன் காரணமாக நானும் அவரும் சந்திக்க வேண்டியிருந்தது. ஆனால் நானோ அல்லது அவரோ நாங்கள் 1948இல் கிராமத்துப் பாடசாலையில் சந்தித்ததை உணர்ந்து கொள்ளவில்லை.

- **பிரதமராக ஒருபோதும் உங்களால் வர முடியாதென்பதை இறுதியில் புரிந்துகொண்டதுடன், அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைவதற்கான உண்மையான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் தெரிந்துகொண்டதையடுத்தே ஜனாதிபதியாவதில் அக்கறை காட்டினீர்களா?**

என்னைப் பொறுத்தவரை,காங்கிரஸ் தலைவி என்னை அணுகி இந்த விடயத்தைச் சொன்னார். கட்சி அறிவுபூர்வமாகச் சிந்தித்து எந்த முடிவை எடுத்தாலும் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று அவரிடம் சொன்னேன். எனவே முதலில் கட்சி என்னை நியமிப்பதற்கு ஒரு தீர்மானத்தை எடுத்தது. அதற்குப்பிறகு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அந்தத் தீர்மானத்தை அங்கீகரித்தது. நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டகதை இதுதான். பல வட்டாரங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்டதும் எதிர்பார்க்கப்படாததுமான ஆதரவு கிடைத்ததன் காரணத்தினாலேயே கூடுதல் பெரும்பான்மை வாக்குகள் வித்தியாசத்தில் நான் வெற்றிபெறக் கூடியதாக இருந்தது.

- **அரசியலில் கூடுதல் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்கான தனது திட்டங்கள் குறித்து ராகுல் காந்தி அறிவித்திருக்கிறார். அதற்கு ஏற்றவராக அவர் மாறிவிட்டாரா?**

பெரிய பொறுப்புகளை ராகுல்காந்தி ஏற்பது மிகவும் வரவேற்கத்தக்கது. அவரது அறிவிப்பு ஒன்றும் திடீரென்று வந்ததில்லை. இளம் தலைவர்கள் கட்சியின் பொறுப்புகளை ஏற்றுக் கொண்ட உதாரணங்களையும் சந்தர்ப்பங்களையும் நிறையவே கொண்டது காங்கிரஸின் சரித்திரம். 40 வயதாக இருந்த போது நேரு 1929இல் காங்கிரஸ் தலைவரானார். அசாத் 1923 இல் தலைவராக வந்தபோது அவருக்கு வயது 35. சுபாஸ் சந்திரபோஸும் ராஜிவ்காந்தியும் முறையே 41,42 வயதில் தான் தலைவரானார்கள்.

- **என்னைப் பொறுத்தவரையில் பிரியங்கா திறமையானவர் என்கிறேன். உங்கள் அபிப்பிராயம்?**

ராகுலையும் பிரியங்காவையும் ஒப்பிடுவது நேர்மையான விடயமல்ல. ஒருவர் தீவிர அரசியலில் இருக்கிறார். மற்றவர் அவ்வாறு இல்லை. ஆனால் தனது தாயாரினதும் சகோதரியினதும் தொகுதிகளில் பிரியங்கா மிகவும் சிறப்பான பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறார் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன்.

- **இந்திரா,ராஜீவ்,சோனியா-மூவருக்குமிடையே நீங்கள் கண்ட வேறுபாடுகள் எவை? ஒற்றுமைகள் எவை?**

இந்திரா காந்தி தொடங்கி பிறகு காங்கிரஸின் தலைவராக இருந்த ஒவ்வொருவரின் கீழும் (நரசிம்மராவ், சீத்தாராம் கேசரி உட்பட) காங்கிரஸ் காரியக் கமிட்டியில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். எல்லோரும் என் மீது நம்பிக்கை வைத்து பல பொறுப்புகளைத் தந்தார்கள். 1978 தொடக்கம் ஜனாதிபதித் தேர்தல்களுக்கு முன்பதாக கட்சியிலிருந்து நான் ராஜிநாமா செய்யும் வரை (ஒரு 4 - 5வருட இடைவெளி தவிர) நான் காரியக்கமிட்டியில் பணியாற்றி இருக்கிறேன். ஒவ்வொரு தலைவரும் தலைவியும் தங்களுக்கே உரித்தான பாணிகளில் பணியாற்றியிருக்கிறார்கள். ஆனால் கருத்துக் கூற இயலாமல் இருக்கிறேன். தேசியத் தலைவர்களை ஒப்பிடுவதும் அவர்களிடையேயான வேறுபாடுகளை இனங்காண்பதும் குறுகிய கால நோக்கில் ஊடகங்களின் தொழிலாகவும் நீண்ட கால நோக்கில் சரித்திரவியலாளர்களின் தொழிலாகவும் இருக்கிறது.

- **ஜனாதிபதிகள் வெறுமனே பொம்மைத் தலைவர்களாக அல்லது ரப்பர் முத்திரைகளாக இருக்கிறார்கள். உங்களால் ஏதாவது மாற்றங்களை அதில் காணக்கூடியதாக இருக்குமா?**

அரசியலமைப்பு ரீதியில் நோக்குகையில் ஜனாதிபதியின் பேரில் தான் நிர்வாக அலுவல்கள் நடைபெறுகின்றன. ஆனால் அதிகாரம் பிரதமரிடமும் அமைச்சரவையிடமுமே கொடுக்கப்படுகின்றது. பயணத்திட்டம் மிகவும் தெளிவாகவே வரையப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னர் 12 ஜனாதிபதிகள் பதவியில் இருந்திருக்கிறார்கள். பாபு ராஜேந்திர பிரசாத்,சர்வபள்ளி இராதாக்கிருஷ்ணன் மற்றும் சாகீர்ஹுசைன் ஆகியோரினால் வரையப்பட்டது இந்தப் பயணத்திட்டம்.

- **முதலீட்டுக்கான சூழ்நிலைகள் குறித்து ஒபாமா தெரிவித்த விமர்சனங்கள் உங்களது கொள்கைகள் மீதான ஒரு குற்றச்சாட்டாக நோக்கப்படுகிறது. இந்தியாவின் பொருளாதார மந்த நிலைக்கு உங்களைக் குற்றம் சாட்டுகிறார்கள்.**

இது குறித்து நான் கருத்துக் கூறவில்லை. நிதியமைச்சு அந்தக் குற்றச்சாட்டுகளுக்குபதில்கூறட்டும். அமைச்சர்கள் வருவார்கள், போவார்கள். ஆனால் அமைச்சுகளும்அரசாங்கமும் என்றென்றைக்கும் தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டேயிருக்கும். அமைச்சு அதன் செயற்பாடுகளை ஒரு நிமிடம் கூட நிறுத்துவதில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுல்காந்தி ஒரு புதிர்

யோகேஷ் வாஜ்பேயி

தேசிய மட்டத்திலும் மாநில மற்றும் உள்ளூராட்சி மட்டங்களிலும் நன்றாக இயங்குகின்ற ஜனநாயகக் கட்டமைப்புகளைக் கொண்ட நிறுவனங்களை இந்தியாவினால் உருவாக்கி மேம்படுத்தக்கூடியதாக இருந்து வந்திருக்கின்ற அதேவேளை, அரசியல் கட்சிகளின் தலைமைத்துவங்கள் எதிர்த்திசையில் - அதாவது எதேச்சாதிகாரத்தை நோக்கி - நகர்ந்து வந்திருக்கின்றன என்பது சுதந்திரத்திற்குப் பின்னரான இந்தியாவின் அரசியல் சமுதாயத்தின் கட்டவிழ்க்கப்பட்ட புதிர்களில் ஒன்றாகும். இதற்கு இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு செம்மையான உதாரணமாகும். காங்கிரஸ்கட்சியின் நவீனயுக வழிகாட்டிகள் நாட்டின் மிகவும் பழைமை வாய்ந்த தங்கள் கட்சியே சுதந்திரப் போராட்ட இயக்கத்திற்கு தலைமை தாங்கியது என்று எமக்கு நினைவுபடுத்துவது ஒருபோதுமே சலிப்படைவதில்லை.


பொறுப்பு வாய்ந்த பெரிய பங்கை வகிக்கத் தயாராகியிருப்பதாக காங்கிரஸின் தேசிய பொதுச் செயலாளர் ராகுல் காந்தி அறிவித்த உடனடியாகவே, அவர் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுவதற்கு தங்களைத் தாங்களே அவரின் ஆலோசகர்களாக நியமித்துக் கொண்ட பேர்வழிகள் விரைந்தோடிச் சென்று கொண்டிருக்கிறார்கள். ராகுல் காந்தி வகிக்கத் தயாராக இருப்பதாகக் கூறும் பெரிய பொறுப்பு கட்சி அமைப்பிலா அல்லது அரசாங்கத்திலா என்பதை அவர் தீர்மானிக்க வேண்டும் என்று கட்சியின் ஒரு பொதுச் செயலாளரான திக்விஜய் சிங் விரும்புகின்ற அதேவேளை, இன்னொரு பொதுச் செயலாளரான ஜனார்த்தன் திவிவேதி ராகுல்காந்தி அரசாங்கத்தில் அல்லது கட்சி அமைப்பில் இரண்டில் ஒன்று என்றில்லாமல் இரண்டிலும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பதுடன் நின்றுவிடாமல், தனதுவாதத்தைநியாயப்படுத்த காங்கிரஸ் அமைப்பில் இரட்டைப் பொறுப்புகளைத் தலைவர்கள் வகித்த முன்னைய உதாரணங்களையும் சுட்டிக் காட்டுகிறார். இவர்கள் எல்லாரையும் மீறி உத்தரகாண்ட் மாநிலத்தில் முதலமைச்சரான விஜய் பகுஹுனா 2014 பொதுத் தேர்தலில் மாத்திரமல்ல அடுத்த 20 வருடங்களுக்கு கட்சியின் பிரதமர் வேட்பாளராக ராகுல்காந்தி முன்னிறுத்தப்பட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

காங்கிரஸ் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இவர்கள் எல்லோரினதும் ஆரவாரக் கூச்சல்கள் ஏதோ பெரிய பொறுப்புகளை ஏற்பதற்குத் தயங்குகிற ஒரு தலைவரை பெரும் பிரயத்தனப்பட்டு, (கட்சி பாரதூரமான அரசியல் நெருக்கடியில் இருக்கின்ற ஒரு தருணத்தில்) ஒரு மீட்பர் பாத்திரத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்க வைப்பதைப் போன்ற ஒரு தோற்றப்பாட்டைக் காண்பிக்கும் நோக்குடனானவை என்பதை புரிந்துகொள்வதில் சிரமம் ஏதும் இல்லை. தலைமைப்பதவியை ஏற்றுக் கொள்வதற்கு ராகுல்காந்தி காட்டிவந்திருப்பதாகக் கூறப்படும் தயக்கம் பற்றி மத்திய சட்டத்துறை அமைச்சர் தெரிவித்த கருத்துகள் முக்கிய நாடக ஆட்டத்திற்கு முன் நிகழ்த்தப்படும் ஒரு சிறு நாடகம் போன்று அமைந்திருக்கின்றன. தனது பொறுப்புக் குறித்து தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டியது ராகுல்காந்தியைப் பொறுத்தது என்று சோனியா காந்தியும் மன்மோகன் சிங்கும் தொடர்ந்து கூறிக்கொண்டு வந்திருக்கின்ற அதேவேளை, ராகுல்காந்தி 8 வருடங்களாக தனது கட்சிக்காரர்களை எதிர்பார்ப்புடன் காத்திருக்க வைத்திருக்கிறார். பெரிய பொறுப்பு ஒன்றை வகிப்பதற்கு தான் இணங்குவதற்கு முன்னதாக தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டியது தனது "இரு தலைவர்களினதும்" பொறுப்பு என்பது போன்று ராகுல்காந்தி நடந்து வந்திருக்கிறார்.

பீகார், உத்தரப்பிரதேசம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தேர்தல்களில் காங்கிரஸுக்கு ஏற்பட்ட வீழ்ச்சிகளின் பின்னணியில் நோக்குகையில், சுருங்கிவரும் வாய்ப்புகளிலிருந்து கட்சி மீட்சிபெறும் என்று நம்புவதற்கு ஆச்சரியம் ஒன்று நேரவேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் கொண்டிருக்கும் அங்கலாய்ப்பைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. எவ்வாறெனினும் கட்சியை ராகுல்காந்தியினால் மீட்டெடுக்க முடியும் என்று எதிர்பார்ப்பது ஒரு விடயம். அதேவேளை, வரவிருக்கும் நாட்களில் எதிர்நோக்க வேண்டியிருக்கின்ற பெரிய தேர்தல் சமர்களுக்காக கட்சிக்குப் புது வலுவைக் கொடுப்பதற்கு அவரிடம் இருக்கக்கூடிய ஆற்றலில் நம்பிக்கை வைப்பது என்பது வேறுவிடயம். பகிரங்கமாகக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் சான்றுகளின் அடிப்படையில் கூறுவதானால் பொறுப்பை ஏற்பதில் ராகுல்காந்திக்கு இருக்கின்ற விருப்பமும் எதிர்பார்க்கப்படுகின்ற விளைவுகளைக் கொண்டு வருவதில் அவருக்கு இருக்கக்கூடிய ஆற்றலும் பெரும்புதிராகவே தொடருகின்றன.

வம்ச அரசியலுக்கு எதிரான சர்ச்சைகள் இந்திய வாக்காளர்களின் மனங்களில் பெரும் செல்வாக்கைச் செலுத்துவதில்லை என்பது உண்மையே. அரசியல் குடும்பங்கள் மீது மக்களுக்கு ஒரு விஷேட நாட்டம் தொடர்ந்து இருக்கவே செய்கிறது. இறுதியில் அரசியல் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் தனிப்பட்ட கவர்ச்சியும் தலைமை தாங்குவதில் அவர்களுக்கு இருக்கக்கூடிய ஆற்றலுமே கணக்கிலெடுக்கப்படவேண்டியவையாகும். மாநிலங்களில் மிகுந்த செல்வாக்குடையவர்களாக விளங்கிய தலைவர்கள் குழுவொன்றினால் 1967 இல் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட போது இந்திராகாந்தி தனது திறமையை (காங்கிரஸிற்குள்ளேயும் வெளியேயும் இருக்கின்ற அரசியல் எதிரிகளை விடவும் கெட்டிக்காரி என்று காண்பிப்பதன் மூலமாக) நிரூபிக்க வேண்டியிருந்தது. முன்னணியில் நின்று தன்னால் தலைமை தாங்க முடியும் என்றும் இந்திரா காந்தியினால் காட்டவேண்டியிருந்தது. நவீன் பட்நாயக் மற்றும் அகிலேஷ் யாதவ் போன்றவர்கள் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு முன்னதாக தங்களது அரசியல் புத்திக் கூர்மையை நிரூபிக்க வேண்டியிருந்தது. அத்துடன் தொடர்ந்தும் அதிகாரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ராகுல்காந்தியின் மறைவடக்கமான ஆற்றல்கள் பற்றி வெளிப்படையாகத் தெரியக்கூடியதாக இருந்த சான்றுகள் வெகு சொற்பமே. கட்சியின் மிகவும் சக்தி வாய்ந்த பொதுச் செயலாளராக இருக்கின்ற போதிலும்கூட கட்சியின் அமைப்புகளுக்கு புத்தூக்கம் கொடுத்து செயல் விரைவுபடுத்த அவர் தவறிவிட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க அவர்கள் விரும்புவார்களேயா னால் தொடர்ந்தும் பரீட்சைகளுக்கு உள் ளாகவேண்டியிருக்கும்.

காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ள மறுத்த சோனியா காந்தி அந்தப் பதவிக்கு மன்மோகன் சிங்கை நியமித்த போது ராகுல் காந்தி மிகப்பெரிய ஒரு சொத்தைப் பெற்றவராகவே அரசியலை ஆரம்பித்தார் என்பதை எவரும் மறுத லிக்க மாட்டார்கள். ஒரு சாதாரண பாரா ளுமன்ற உறுப்பினராகவும் கட்சியின் ஒரு சாதாரண செயற்பாட்டாளராகவும் (ஆட்சி அதிகாரத்தை விரும்பாத துறவு பூண்ட தாயாரின் ஒளிவட்ட பிரகாசத்தின் கீழ்) நிலைவரங்களைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்த ஒரு இளம் அரசியல்வாதி என்ற படிவம் ராகுல்காந்திக்கு இருந்தது.

அதற்குப் பிறகு ராகுல்காந்தியின் மறைவடக்கமான ஆற்றல்கள் பற்றி வெளிப்படையாகத் தெரியக்கூடியதாக இருந்த சான்றுகள் வெகு சொற்பமே. கட்சியின் மிகவும் சக்தி வாய்ந்த பொதுச் செயலாளராக இருக்கின்ற போதிலும்கூட கட்சியின் அமைப்புகளுக்கு புத்தூக்கம் கொடுத்து செயல் விரைவுபடுத்த அவர் தவறிவிட்டார். தேர்தல்களில் காங்கிரஸு க்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரக்கூடிய ஒரு தாயத்து போன்று கருதப்பட்டவர் என்ற வகையில் ராகுல்காந்தியின் செயற் பாட்டினால் மக்கள் கூட்டத்தை கவருவதில் மாத்திரம் வெற்றி பெறக்கூடியதாக இருந் ததே தவிர வாக்குகளை குவிக்கமுடிய வில்லை.

உதாரணத்துக்கு கூறுவதானால் காங் கிரஸின் அமைப்புகளை ஒழுங்கமைக் கும் பதவியை ஏற்றுக்கொண்ட பிறகு இளைஞர் காங்கிரஸை ஜனநாயகமயப் படுத்தப் போகிறதாகவும் அதை ஒரு போராட்டச் சக்தியாக மாற்றப்போவதாக வும் ராகுல்காந்தி பிரகடனம் செய்தார். 2007ஆம் ஆண்டு டில்லியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத் தொடரில் உரையாற்றும்போது அவர் பின்வருமாறு கூறினார்;

"நாம் இரண்டு விடயங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. எமது பண்பு விழு மியங்களை நம்பிக்கை கொண்டவர் களாகவும் தேசத்துக்கு சேவைசெய்யும் நாட்டம் கொண்டவர்களாகவும் இருக் கின்ற பரந்தளவிலான இளம் இந்தியர் களுக்குப் பொருத்தமானதாகவும் ஒளிவு மறைவு அற்றதாகவும் ஓர் இயக்கத்தை நாம் முதலில் கட்டியெழுப்ப வேண்டி இருக்கிறது. அடுத்து திறமையின் அடிப் படையில் உயர்பதவிகளுக்கு ஆட்கள்

## நேரு-காந்தி குடும்பத்தின் புதிய ஒரு உறுப்பினரின் வருகை முழு இந்தியாவிலும் காங்கிரஸுக்கு ஆதரவாக மக்களை அணிதிரட்டுவதற்கு போதுமானதாக இருந்த நாட்கள் மலையேறிவிட்டன

வரக்கூடியதான இயக்கமொன்றைத் தோற்றுவிக்க வேண்டியிருக்கிறது. இளை ஞர்கள் எமது இயக்கத்துக்கு பெருமளவு விருப்பார்வத்தையும் சக்தியையும் கொண்டுவரக்கூடியவர்களாக இருக்கி றார்கள். அவர்கள் பதில்கூறும் கடப் பாட்டைக் கொண்டவர்களாக வளர்வதை நாம் உறுதிசெய்துகொள்ள வேண்டும். அவர்களது முன்னேற்றம் அவர்களது செயற்பாட்டுடன் இணைந்ததாக இருப் பதை உறுதி செய்யவேண்டியது எமது கடமையாகும்."

இந்த வார்த்தைகளைச் செயலுரு வாக்குவதை நோக்கி எந்தவொரு நடவடி க்கையையும் ராகுல்காந்தியோ அல்லது காங்கிரஸிலுள்ள அவரின் சீடர்களோ இன்றுவரை முன்னெடுக்கவில்லை. உண்மையில் ராகுல்காந்தி அக்கறையுட னான எந்தவிதமான முயற்சியுமே மேற் கொள்ளாமல் அந்த நிகழ்ச்சி நிரலை கைவிட்டுவிட்டார் என்றே தோன்றுகின் றது.

காங்கிரஸின் தேர்தல் தாயத்து என்ற வகையில் ராகுல்காந்தியின் செயற்பாடு பீகார், உத்தரப் பிரதேசம் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களின் சட்டசபைகளுக்கு அண்மையில் நடைபெற்ற தேர்தல்களின் போது மனதில் பதியத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கவில்லை. 2007 தொடக்கம் 2012 வரை அவர் தனது சொந்த மாநிலமான உத்தரப்பிர தேசத்தில் கட்சிக்கு புத்துயிர் அளிப்ப தற்கான "குறிக்கோள் 2012" பற்றி பெரிதாகப் பேசிப்பேசி வருடங்களை

கழித்துவிட்டார். சமாஜ்வாதிக் கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவ் மற்றும் பகுஜன் சமாஜ்வாதிக் கட்சித் தலைவி மாயாவதி ஆகியோரினால் ஏற்படுத்தப் பட்ட சாதியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் சேர்மானத்துக்குள் எந்தவொரு உள்நுழைவையும் ராகுல்காந்தியின் "விஷேட முயற்சிகளினால்" (அஜித் சிங் கின் ராஷ்டிரிய லோக்தள கட்சியுடன் சந்தர்ப்பவாதக் கூட்டணி ஒன்றை அமைத் துக்கொண்டபோதிலும் கூட) செய்யமுடிய வில்லை.

ராகுல்காந்தி காங்கிரஸ் கட்சியின் மீட்பராகவும் ஒரு புத்தாக்க சக்தியாகவும் திகழுவார் என்ற எண்ணம் இந்தியாவின் பல பாகங்களிலும் அந்தக் கட்சியின் செல்வாக்கு படிப்படியாக அரித்தெடுக்கப் படுவதற்கு பங்களிப்புச் செய்த பல்வேறு சமூக மற்றும் பொருளாதாரக் காரணி களை விளங்கிக் கொள்வதில் உள்ள இயலாமையின் வெளிப்பாடேயாகும். நேரு-காந்தி குடும்பத்தின் புதிய ஒரு உறுப்பினரின் வருகை முழு இந்தி யாவிலும் காங்கிரஸுக்கு ஆதரவாக மக்களை அணிதிரட்டுவதற்கு போதுமான தாக இருந்த நாட்கள் மலையேறிவிட்டன.

1980களின் ஆரம்பத்தில் ராஜிவ் காந்தி அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட போது இந்திரா காந்தி பிரதமராக இருந்தார். அத்துடன் மத்தியிலும் பல மாநிலங்களிலும் காங்கிரஸ் அதிகாரத் திலிருந்தது. இன்று காங்கிரஸ் மத்தியில் ஒரு சஞ்சலமான கூட்டரசாங்கத்துக்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறது. அத்துடன் அநேகமான பெரிய மாநிலங் களில் அது ஆட்சி அதிகாரத்திலும் இல்லை. கூட்டணி அரசியல் என்பது பிராந்தியக் கட்சிகளையும் சாதிகளை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளையும் தலைவர்களையும் இணைக்கின்ற வித்தி யாசமான இயக்க ஆற்றலைவேண்டி நிற்கிறது. யதார்த்த நிலைவரங்களுடன் தொடர்பறுந்துபோன ஒரு தெரிந்தெடுத்த ஆலோசகர் வட்டத்தின் உதவியுடன் 10 ஜன்பத்திலிருந்து ரிமோட்கொன்ரோல் மூலம் விவகாரங்களைக் கையாள்வதை விடுத்து பிராந்திய மற்றும் உள்ளூர் மட்டத்தில் கட்சியமைப்பை மீளக் கட்டி யெழுப்பும் சவாலுக்கு முகங்கொடுப்ப தற்கான அணுகுமுறைகளே இன்று தேவை என்பதே இதன் அர்த்தமாகும். அந்தப் பொறுப்பை ராகுல்காந்தி ஏற்றுக் கொள்வாரேயானால் அவர் முன்னால் உள்ள பணி மிகவும் கடும் முயற்சியை வேண்டி நிற்பதாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கர்களைத் திணறடிக்கும் துப்பாக்கி நபர்களின் வெறியாட்டங்கள்

## 30 கோடி சனத்தொகையின் மத்தியில் 20 கோடி துப்பாக்கிகள் புழக்கத்தில்

ஆ.விரகத்தி



அமெரிக்காவின் கொலராடோ மாநிலத்தின் தலைநகரான டென்வாரில் அமைந்திருக்கும் கொலராடோ பல்கலைக்கழகத்தில் நரம்பியல் மருத்துவ மாணவனான 24 வயதுடைய ஜேம்ஸ் ஹோம்ஸ் அமெரிக்க விஷேட அதிரடிப்படையினர் அணிவதைப் போன்ற கறுப்புச் சீருடையை அணிந்து கொண்டு கடந்த மாதம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை திரைப்பட மாளிகை ஒன்றுக்குச் சென்று கண்மூடித் தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். இதில் 12 அப்பாவிகள் கொல்லப்பட்டனர். 58 பேர் காயமடைந்தனர்.

பாற்மன் திரைப்படம் ஒன்று காண்பிக் கப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் இடம்பெற்றிருந்த இந்தத் தாக்குதலை அங்கிருந்த ரசிகர்கள் ஆரம்பத்தில் திரையில் தாங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் அதிரடிகள் நிறைந்த காட்சிகளில் ஒன்றை தங்கள் முன்னால் ஒருவர் போலியாக நடித்துக் காண்பிப்பதாகவே அப்பாவித் தனமாக நினைத்துக்கொண்டார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்வதற்கு முன்னதாக ஜேம்ஸ் ஹோம்ஸ் கண்ணீர் புகைக்குண்டொன்றை வெடிக்க வைத்தான். வாயுத் தடுப்பு முகமூடியும் தலைக் கவசமும் அணிந்திருந்த அவன்வசம் தன்னியக்கத் துப்பாக்கி ஒன்றும் ஷொட் கண் ஒன்றும் கைத்துப்பாக்கிகள் இரண்டும் இருந்தன. இவற்றை அவன் உள்ளூர் கடைகளிலேயே வாங்கியிருந்தான். அத்துடன் இணையம் ஊடாக கோரிக்கை விடுத்து கொள்வனவு செய்து கொண்ட 6000 சுற்றுக்கள் தோட்டாக்களும் அவனிடம் இருந்தன.

ஜேம்ஸ் ஹோம்ஸை கைது செய்த பிறகு தொடர்மாடித் தொகுதியிலுள்ள அவனது வீட்டை சோதனையிடச் சென்ற பொலிஸார் அங்கு பெருமளவு பொறி வெடிகள் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார்கள். தனது வீட்டை பொலிஸார் முற்று கையிட்டுச் சோதனை செய்யும் பட்சத்தில் மேலும் கூடுதலான அளவுக்கு உயிரிழப்புகளை விளைவிக்கும் நோக்குடன் அவன் வீட்டில் மின்சாரக் கம்பி இணைப்புகளுடன் சேர்த்து எளிதில் தீப்பற்றக்கூடிய இரசாயனப் பதார்த்தங்களை வைத்திருந்தான்.

இந்தக் கொடூரச் சம்பவம் அமெரிக்காவில் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் தோற்றுவித்திருந்தது. ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் மூன்று மாதங்களே இருக்கும் நிலையில் இடம்பெற்ற இச்சம்பவம் தேர்தல் பிரசாரங்களின் போது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இரண்டாவது பதவிக் காலத்துக்குப் போட்டியிடும் ஜனாதிபதி பராக் ஒபாமாவும் அவரை எதிர்த்துப் போட்டியிடும் குடியரசுக் கட்சி வேட்பாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிட் றொம்னியும் தங்கள் நாட்டில் துப்பாக்கிகள் தாராளமாக பயன்பாட்டில் இருப்பதை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கு ஏட்டிக்குப் போட்டியாக வாக்குறுதிகளை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருக்கிறார்கள்.

இத்தகைய தனிநபர்களின் துப்பாக்கி வெறியாட்டங்கள் அமெரிக்காவில் ஒன்றும் புதுமையானதல்ல. அவை அண்மைக்காலமாக அடிக்கடி இடம்பெறுகின்ற துரதிர்ஷ்டவசமான நிலைமை தோன்றியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக பாடசாலைகள், பல்கலைக்கழகங்களின் வளாகங்களிலும் மதுபான விடுதிகள் மற்றும் களியாட்ட நிலையங்களிலும் துப்பாக்கி மனிதர்களின் வெறியாட்டங்களைப் பொறுத்தவரை அமெரிக்கா ஒரு சரித்திரத்தையே கொண்டுள்ளது.

அண்மைய தசாப்தங்களை நோக்குகையில் மிகவும் படுமோசமான சம்பவங்களில் ஒன்று 1966 ஆகஸ்ட் 1ஆம் திகதி இடம்பெற்றது. தனது மனைவியையும் தாயாரையும் சுட்டுக்கொலை செய்த மறுநாள் சார்ள்ஸ் வைற்மான் என்ற துப்பாக்கி மனிதன் ரெக்சாஸ் பல்கலைக்கழக வளாகத்தில் கோபுரம் ஒன்றின் மீது ஏறிநின்று 16 பேரைச் சுட்டுக்கொன்றான். இச் சம்பவத்தில் மேலும் 31 பேர் படுகாயமடைந்தனர். 1999 ஏப்ரல் 20 இல் கொலராடோரில் கொலம்பையின் உயர்நிலைப் பாடசாலை மாணவர்கள் இருவர் தங்களுடன் கல்வி கற்கும் சக மாணவர்கள் 12 பேரையும் ஒரு ஆசிரியையும் சுட்டுக்கொலை செய்து விட்டுத் தங்களையும் சுட்டுத்தற்கொலை செய்து கொண்டனர். 2007 ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் வேஜினியா மாநிலத்தின் தென்மேற்கு நகரான பிளக்ஸ் பேர்க்கில் அமைந்திருக்கும் தொழில்நுட்ப வளாகத்தில் 23 வயதான மனநிலை குழம்பிய தென்கொரிய வம்சாவளி மாணவன் ஒருவன் நடத்திய வெறியாட்டத்தின்போது 32 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அமெரிக்கச் சரித்திரத்திலேயே கல்வி நிறுவனமொன்றில் இடம்பெற்றிருக்கக் கூடிய மிகக் கொடூரமான துப்பாக்கிப் பிரயோகம் என்று வர்ணிக்கப்படுகிறது.

110க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த சுமார் 2000 சர்வதேச மாணவர்கள் இந்த தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் அன்று கல்வி கற்றுக்கொண்டிருந்ததால் இந்த படுகொலைச் சம்பவம் அமெரிக்கர்கள் மத்தியில் மாத்திரம் அல்ல வெளிநாட்டவர் மத்தியிலும் பெரும் பீதியையும் அதிர்ச்சியையும் தோற்றுவித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. வேர்ஜினியாவில் இடம்பெற்ற இப்படுகொலைகளுக்கு முன்னதாக அமெரிக்காவில் இடம்பெற்றிருக்கக்கூடிய மிகவும்


நீதிமன்றில்
ஜேம்ஸ் ஹோம்ஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடூரமான துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் என்றால் அது 1991இல் ரெக்சாஸில் உணவு விடுதியொன்றில் ஜோர்ஜ் கென்னார்ட் என்ற துப்பாக்கி மனிதன் 23 பேரைக் கொலை செய்த பிறகு தன்னையும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தான்.

இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு துப்பாக்கி நபர்களின் களியாட்டங்கள் அவ்வப்போது இடம்பெற்று வருகின்ற போதிலும், அண்மைக்காலத்தில் அவை அடுத்தடுத்து நிகழ்கின்ற விரைவுப் போக்கொன்றையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. சிறுவர் பாடசாலைகளுக்குள்ளும் பிரவேசித்து துப்பாக்கி மனிதர்கள் தங்கள் வெறியாட்டங்களை அரங்கேற்றியிருக்கிறார்கள். துப்பாக்கி மனிதர்களின் இத்தகைய ஒவ்வொரு வெறியாட்டச் சம்பவத்துக்குப் பின்னரும் அமெரிக்காவில் துப்பாக்கிச் சட்டங்கள் தொடர்பில் - அதாவது சர்வசாதாரணமாக துப்பாக்கிகளை வாங்கக்கூடியதாக இருக்கும் சூழ்நிலை தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் மூண்டிருந்தன. அமெரிக்காவில் காணப்படுகின்ற "ஆடம்பரமான சுதந்திரத்தின்" பெயரில் பின்னர் அந்த வாதப்பிரதிவாதங்கள் தணிந்து போய் விடும். துப்பாக்கிச் சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும் என்ற வலியுறுத்தல்களும் அமுங்கிப் போய்விடும். கடந்த மாதம் டென்வாரில் திரைப்படமாளிகையில் ஜேம்ஸ் ஹோம்ஸ் நடத்தியிருக்கும் வெறியாட்டத்தை அடுத்து துப்பாக்கிச் சட்டங்கள் தொடர்பில் மூண்டிருக்கும் வாதப்பிரதிவாதங்களுக்கும் அதேகதியே அநேகமாக நேரக்கூடும்.

உயிரைக் குடிக்கும் துப்பாக்கிகளை கொள்வனவு செய்வதில் அமெரிக்காவில் காணப்படக்கூடிய சுதந்திரத்திற்கு ஓரளவுக்கேனும் கட்டுப்பாடுகளைக் கொண்டு வரவேண்டிய தேவை பரந்தளவில் உணரப்படுகின்றது என்ற போதிலும் அமெரிக்க அரசியல் சமுதாயத்தின் மேல்மட்டம் இது விடயத்தில் பயனுறுதியுடைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு தொடர்ந்தும் தயக்கத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது. ஜேம்ஸ் ஹோம்ஸின் வெறியாட்டத்தையடுத்து இருவாரங்களுக்கு முன்னர் லண்டன் கார்டியன் பத்திரிகையின் இணையப்பதிப்பில் அமெரிக்காவின் துப்பாக்கிச் சட்டங்கள் தொடர்பில் பல்வேறு வகைப்பட்ட கருத்துகளை அறிஞர்களும் ஆர்வலர்களும் வெளிப்படுத்தியிருந்தார்கள். அதில் ஒரு கருத்தை கீழே தருகிறோம்;

"துப்பாக்கிகள் ஆட்களைக் கொல்வதற்கென்றே வடிவமைக்கப்படுகின்றன. ஆரம்பத்திலிருந்தே ஆட்களை வினைத்திறனுடன் கொல்வதற்கு அல்லது அவர்களுக்கு ஊறு விளைவிப்பதற்கென்று வடிவமைக்கப்படுகின்ற பொருளே துப்பாக்கிகளாகும். அவை போர் ஆயுதங்களாகும். அவற்றை பயிற்றப்பட்ட தொழில்முறை படைவீரர்கள் மாத்திரமே பயன்படுத்த வேண்டும். அமெரிக்க துப்பாக்கிக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் வெளிப்படையாகவே மடத்தனமானவை. அமெரிக்க அரசியலமைப்பின் இரண்டாவது திருத்தம் இந்த வகையான படுகொலைகளை ஒருபோதுமே நியாயப்படுத்த முடியாது. குழந்தைப்பருவத்திலிருந்த அமெரிக்க மாநிலங்களைப் பாதுகாப்பதற்கு திரட்டல் படைகளை அமைப்பதற்கான நோக்கத்துடன் 18 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது அந்த இரண்டாவது திருத்தமாகும். அதைச் சுதந்திரத்தின் பேரில் 21 ஆம் நூற்றாண்டின் மனநோயாளிகள் தங்கள் கைகளில் எடுக்கும் நிலை தோன்றியிருக்கின்றது. இந்த நிலைவரத்தை தொடர்ந்து அனுமதிக்க முடியாது என்பதை அமெரிக்கர்கள் விளங்கிக் கொள்வதற்கு இன்னும் எத்தனை அர்த்தமற்ற மரணங்கள் நிகழ வேண்டும்."

துப்பாக்கிகளைவிற்பனைசெய்வதற்கு பதிவு செய்யப்பட்ட விற்பனைநிலையங்களில் இருந்து 18 வயதிற்குக் கூடுதலான எவருமே துப்பாக்கிகளை அமெரிக்காவில் வாங்க முடியும். கொள்வனவு செய்பவர்களைப் பற்றி மிகவும் எளிதான விபரங்கள் கோரப்படுகின்றன. வேர்ஜினியா தொழில்நுட்ப பல்கலைக்கழக வளாகத்தில் பேராசிரியர்களையும் மாணவர்களையும் சுட்டுக்கொலைசெய்த தென்கொரிய மாணவன் - மாணவிகளுக்கு தொல்லை கொடுத்தமைக்காக 2005 ஆம் ஆண்டு மனநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவன் என்ற போதிலும் கூட அவனால் இரு கைத்துப்பாக்கிகளை வாங்கிக்கொள்ள முடிந்திருக்கிறது. அமெரிக்காவின் துப்பாக்கிக் கலாசாரம் மிகவும் ஆழமாகப் பேணப்பட்டு வருகின்றது. ஆயுதங்களை வைத்திருப்பதற்கான உரிமை (சுதந்திரங்களை ஊக்குவிப்பதாகக் கூறப்படும்) அமெரிக்க கலாசாரத்தின் ஒரு இருண்ட பக்கமாகும். அமெரிக்காவில் ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் பற்றிய விபரங்களை முழுமையாக அறிவது சிக்கலானது என்ற போதிலும் கிடைக்கக்கூடிய புள்ளிவிபரங்களை நோக்குகையில் சுமார் 30 கோடி சனத்தொகையின் மத்தியில் சுமார் 20 கோடி துப்பாக்கிகள் புழக்கத்திலிருக்கின்றன. அமெரிக்கர்களில் சுமார் 40 சதவீதத்தினரிடம் குறைந்தது ஒரு துப்பாக்கியாவது இருக்கிறது. துப்பாக்கிகளினால் சுட்டுக்கொலை செய்யப்படுகின்ற அபாயம் எந்தவொரு மேற்கு நாட்டையும் விட அமெரிக்காவிலேயே கூடுதலாக இருக்கிறது. துப்பாக்கிச் சூட்டுக் காயங்களினால் அமெரிக்காவில் வருடாந்தம் சுமார் 30 பேர் இறக்கின்றார்கள்.

துப்பாக்கிகளை வைத்திருக்கும் உரிமைக்காக சுதந்திரத்தின் பெயரால் குரல் கொடுப்பவர்கள் துப்பாக்கிகள் மனிதர்களைக் கொல்வதில்லை. மனிதர்களே மனிதர்களை கொலை செய்கிறார்கள் என்று ஒரு மந்திரத்தை காலம் காலமாக அமெரிக்காவில் சொல்லிக் கொண்டிருக்கிறார்களாம். கார் விபத்துகளில் ஆட்கள் பலியாவதால் கார்களைத் தடை செய்யுமாறு யாரும் கோருவதில்லை என்பது இவர்களின் (விதண்டா)வாதமாக இருக்கிறது. இது சுத்த அபத்தமாகும். எளிதாகத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கிகளைப் பெறக்கூடியதாக இருப்பது அட்டூழியங்களுக்கே வழிவகுக்கிறது. முன்னைய சம்பவங்களைப் போன்று டென்வார் திரைப்பட மாளிகையில் கடந்த மாதம் இடம்பெற்ற ஜேம்ஸ் ஹோம்ஸின் வெறியாட்டங்களும் இதையே உணர்த்துகிறது. பயங்கரவாதத்துக்கு எதிராக உலகளாவிய போரை முன்னெடுத்திருப்பதாகக் கூறிக்கொள்ளும் ஒரு நாடு அன்றாட சாதாரண வாழ்வில் துப்பாக்கிகளின் பயங்கரம் தொடர்ந்துகொண்டிருப்பதற்கு எதிராக எதையும் செய்ய முடியாமல் கையறு நிலையில் இருக்கும் பரிதாபத்தைக் காண்கிறோம்.

இதேவேளை, துப்பாக்கி மனிதர்களின் வெறியாட்டத்துக்கு காரணமாக இருக்கக் கூடிய உளவியல் மற்றும் சமூகவியல் காரணிகள் பற்றி நியூயோர்க் ரைம்ஸில் டேவிட் புருக்ஸ் என்ற பத்திரிகையாளர் தெரிவித்திருக்கும் கருத்துகளைக் கவனத்திலெடுப்பதும் பொருத்தமானதாக அமையும். கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இடம்பெற்றிருக்கக்கூடிய தனி நபர்களின் துப்பாக்கி வெறியாட்டங்களை வரிசைக்கிரமமாக உதாரணம் காட்டி அவற்றின் பின்புலங்கள் பற்றி அவர் எழுதியிருக்கும் சிறிய ஆய்வுக்கட்டுரையைக் கீழே தருகிறோம்.

ஜேர்மனின் டெஜெர்லொக் நகரில் 1913 செப்டெம்பர் 4 காலை ஏர்ன்ஸ்டி வக்னர் என்பவர் தனது மனைவியையும் 4 குழந்தைகளையும் சுட்டுக் கொன்றார். பிறகு அவர் முஹ்ல்ஹோஷன் நகருக்குச் சென்றார். அங்குள்ளவர்கள் மிருகமொன்றுடன் பாலியல் உறவு வைத்துக் கொண்டதாக தன்னைக் கேலி செய்வார்கள் என்று அவர் அஞ்சினார். அதன் விளைவாக 20 பேரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். அதில் 9 பேர் பலியானார்கள்.

இச் சம்பவம் 20 ஆம் நூற்றாண்டில் உலகின் கவனத்தை ஈர்க்கக்கூடியதாக இடம்பெற்ற முதலாவது துப்பாக்கி நபரின் வெறியாட்டங்களில் ஒன்று என்று நம்பப்படுகிறது. அடுத்த 60 வருடங்களில் ஒவ்வொரு தசாப்தங்களிலும் இத்தகைய ஒன்று அல்லது இரண்டு வெறியாட்டங்கள் இடம்பெற்றன. பிறகு துப்பாக்கி நபர்களின் வெறியாட்டங்கள் அடுத்தடுத்து நிகழ்கின்ற போக்கு விரைவடைய ஆரம்பித்தது. 1980களில் குறைந்தது 80 வெறியாட்டங்கள் இடம்பெற்றதாகச் சரித்திர நிகழ்வுகள் தொடர்பிலான இணையத்தளங்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. இவற்றில் தென்கொரியாவில் பொலிஸ் அதிகாரி ஒருவர் 1982இல் 57



டேவிட் புருக்ஸ்

இந்தக் கொலையாளிகளின் மனங்களை விசாரணை செய்யும் போது மருட்சியும் மயக்கமும் நிறைந்த, குணப்படுத்தப்படாத மனக் கோளாறுடனான, கடுமையாகச் சேதப்படுத்தப்பட்ட தற்பெருமை கொண்ட ஒரு உலகத்திற்குள் நீங்கள் இருப்பதைப் போன்று உணர்வீர்கள். இந்த வெறியாட்டங்கள் எல்லாவற்றையும் விளைவித்தது எது என்பதை எப்போதாவது எங்களால் முழுமையாக தெரிந்து கொள்ள நினைத்தால் அது தவறாகும். குழப்பத்திற்கு உள்ளானவர்கள் எப்போதும் எங்களுடனேயே இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய திடீர் வெளிப்பாடுகள் இப்போது கூடுதலான அளவிற்கு தீங்கும் விளைவிக்கும் ஆர்வமுடைய வடிவங்களை எடுக்கின்றன

பேரை சுட்டுப்படுகொலை செய்த சம்பவமும் அடங்கும்.

1990களில் உலகின் கவனத்தை ஈர்க்கக்கூடிய 11 வெறியாட்டக் கொலைகள் இடம்பெற்றன. எனது கணிப்பின்படி கடந்த தசாப்தத்தில் குறைந்தது 26 வெறியாட்டங்கள் இடம்பெற்றிருந்தன. ஜேர்மனியில் றொபேட் ஸ்டீன் ஹவுசர் என்பவர் 16 பேரைக் கொலை செய்த சம்பவம், வேர்ஜினியா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் சியூங்-ஹுயூங் சோஷாக் என்ற தென்கொரிய வம்சாவளி மாணவன் 32 பேரைக் கொலை செய்த சம்பவம், நோர்வேயில் கோடைகால முகாம் ஒன்றில் அன்டிரெஸ் பிறீவீக் 69 பேரைக் படுகொலை செய்த சம்பவம், கொலராடோவில் மூன்று வாரங்களுக்கு முன்னர் திரைப்படமாளிகையில் 12 பேர் கொலைசெய்யப்பட்டசம்பவம் ஆகியவை இவற்றில் அடங்கும்.

இந்தக் கொலையாளிகளின் மனங்களைநீங்கள் விசாரணைசெய்யும்போது மருட்சியும் மயக்கமும் நிறைந்த, குணப்படுத்தப்படாத மனக்கோளாறுடனான, கடுமையாகச் சேதப்படுத்தப்பட்ட தற்பெருமை கொண்ட ஒரு உலகிற்குள் நீங்கள் இருப்பது போன்று உணர்வீர்கள். ரெக்சாஸ் மாநிலத்தின் பெல்டன் நகரைச் சேர்ந்த ஜோர்ஜ் ஹென்னார்ட் பெண்கள் தன்னை நிராகரித்துக் கொண்டே இருந்ததால் கடும் கோபமடைந்திருந்தான். ஒரு மதுபான விடுதியில் யன்னலுக்கூடாக தனது காரைச் செலுத்திச் சென்று அவன் 14 பெண்களையும் 8 ஆண்களையும் சுட்டுக் கொன்றான்.

ரிம் கிரெட்ச்மர் (17) தலைசிறந்த டெனிஸ் விளையாட்டு வீரனாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால் தன்னைச் சுற்றியிருந்த உலகமோ டெனிஸ் விளையாட்டிலோ அல்லது வேறு எந்தத் துறையிலுமோ தனது ஆற்றல்களை மதிப்பதாக இல்லை என்று உணர்ந்தான். ஒரு வருடத்திற்கு முன்னர் தான் பட்டதாரியாக வெளியேறிய கிரெட்சமர் ஜேர்மன் பாடசாலைக்குச் சென்று நேரடியாக மேல்மாடியிலிருந்த இரசாயன ஆய்வுகூடத்திற்குள் பிரவேசித்து 9 மாணவர்களைக் கொலைசெய்தான். பின்னர் தப்பியோடுகையில் மேலும் 6 பேரின் உயிரைப் பறித்தான்.

இந்த வெறியாட்டங்கள் எல்லாவற்றையும் விளைவித்தது எது என்பதை எப்போதாவது எங்களால் தெரிந்துகொள்ள முடியும் என்று நினைத்தால் அது ஒரு தவறாகும். ஆனால் சமஷ்டி புலனாய்வுப் பணியகத்தினாலும் இரகசியச் சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினாலும் மற்றும் பல்வேறு உளவியல் நிபுணர்களினாலும் செய்யப்பட்டிருக்கும் மதிப்பீடுகளை நோக்குவோமேயானால், குறிப்பிட்ட சில பொதுவான பாணிகளை இந்த வெறியாட்டங்களில் காணக்கூடிய தாக இருக்கும்.

இக்கொலைகாரர்களில் பலர் தங்களது சொந்த முக்கியத்துவத்தைப் பற்றி மிகைப்படுத்தப்பட்ட உணர்வைக் கொண் டிருந்தார்கள். அந்த உணர்வுகள் உலகத் தினால் உகந்த முறையில் அங்கீகரிக்கப் படவில்லை என்ற எண்ணம் அவர்களிடம் காணப்பட்டது. பலர் தங்களது நன்மதிப்பு க்கு மீளமுடியாத தாக்கம் ஏற்பட்டதாகக் கவலைப்பட்டார்கள். தொழில் இழப்பு, விவாகரத்து அல்லது பாடசாலைகளில் சிறப்பாகச் செயற்பட முடியாமல் போனமை போன்ற நிகழ்வுகள் இத்த கைய தாக்கங்களை அவர்களுக்கு ஏற் படுத் தின. இதன் விளைவாக அவர்கள் பகட்டுத்தனமான வழிமுறைகளில் பழி வாங்குவதற்கு இவர்கள் தீர்மானித்தார் கள்.

பலர் கடுமையான மனஅழுத்தத் தினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள் அல்லது தற்கொலை செய்ய முயற்சித்தார்கள்.

பலர் தனிமையில் வாழ்ந்தார்கள். ஆனால் குற்றச் செயல்களைச் செய்வத ற்கு முன்னதாக தங்களது வன்முறைப் பித்துக் கொள்ளித் தனங்களை குறைந்த பட்சம் ஒருவருடனாவது பகிர்ந்து கொண் டார்கள்.

செயலில் இறங்குவதற்கு முன்னதாக இந்தக் கொலையாளிகள் பொதுவில் பதற்றத்தை உணர்ந்த போதிலும் வெறி யாட்டத்தின் போது கட்டுப்பாடு குலையா மல் தன்முனைப்புடன் செயற்பட்டார்கள். குற்றச் செயல்களைச் செய்த பிறகு சிலர் தற்கொலை செய்து கொண்டார்கள். ஆனால் பெரும் எண்ணிக்கையானவர் கள் சரணடைந்தார்கள். இங்கு முக்கிய மான ஒரு விடயம், இந்தச் செயல்களின் இயக்க ஆற்றல் உள்வயமானதே தவிர வெளிவயமானதல்ல. இந்தக் கொலை யாளிகள் பிரதானமாக உளவியல் கோளாறுகளின் உற்பத்திகளே தவிர சமூகவியல் கோளாறுகளின் உற்பத்திகள் அல்ல.

ஒவ்வொரு வெறியாட்டத்தின் பிறகும் சமூகத்தில் தங்களுக்கு விருப்பமில்லாத வற்றின் மீது குற்றச்சாட்டைச் சுமத்துவத ற்கு இந்தச் சம்பவங்களை பயன்படுத்த விரும்புகிற ஆட்கள் எப்போதுமே இருக் கிறார்கள். சில வருடங்களுக்கு முன்னர் கொலை வெறியாட்டங்களுக்கு காரண மானவையென்று வன்முறை வீடியோ விளையாட்டுகளை குற்றம்சாட்ட சில எழுத்தாளர்கள் முயன்றார்கள். வழமை யான கொலைகாரர்களை விட இந்த வெறியாட்டக் கொலையாளிகள் வயதில் மூத்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் வீடியோவிளையாட்டுகளில்கடுமையான ஆர்வம் காட்டாதவர்களாக இருந்தார்கள். இதுதவிர வன்முறை விளையாட்டுகள் நிஜ வாழ்க்கை வன்முறைக்கு வழிவகுக் கின்றன என்பதற்குப் போதுமான சான்று கள் இல்லை. தற்போது அமெரிக்காவின் துப்பாக்கிக் கலாசாரத்தை கண்டனம் செய்வதற்கு அல்லது கடுமையான துப் பாக்கிக்கட்டுப்பாட்டுச்சட்டங்கள்கொண்டு வரப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுப்பதற்கு கொலராடோ கொலைகளை பயன்படுத்துவதற்கு ஆட்கள் முயற்சி க்கிறார்கள். (ஆசியாவிலோ அல்லது ஐரோப்பாவிலோ இடம்பெற்றிருக்கக் கூடிய கொலைவெறியாட்டங்களுக்கு பிறகு இவ்வாறு கண்டனங்களோ கோரிக் கைகளோ எழுவதில்லை). தனிப்பட்ட முறையில் நான் கூடுதல் கடுமையான துப்பாக்கிக் கட்டுப்பாட்டுச் சட்டங்களை ஆதரித்திருக்கிறேன். ஆனால் அந்தச் சட் டங்கள் பொது மக்களின் பாதுகாப்பை மேம்படுத்துகின்றனவா என்பது தெளி வில்லை. நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான நிலையங்களின் சார்பில் துப்பாக்கிக் கட்டுப்பாடு கைநூல்களை மீளாய்வு செய்யும் ஆராய்ச்சியாளர்கள் அந்தச் சட்டங்கள் பயனுறுதியுடைய னவாக இருக்கின்றன என்பதை நிரூபிக்க இயலாதவர்களாக இருக்கிறார்கள். அத்து டன் துப்பாக்கிக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் பெரும்பாலும் இந்தக் கொலைவெறி யாட்டங்களுடன்சம்பந்தப்பட்டவிவகாரங் களுடன் பெருமளவுக்கு பொருத்தப்பாடு டையவையாக இல்லை என்றே தோன் றுகின்றது. வெறியாட்டக் கொலைகாரர் கள் மிகவும் உன்னிப்பாகத் தங்களின் திட்டங்களைத் தீட்டுபவர்களாக காணப் படுகிறார்கள். புதிய துப்பாக்கியொன் றைப் பெறுவதற்குச் சுலபமான வழி யொன்று கிடைக்காதபட்சத்தில் அவர்கள் அமெரிக்காவில் ஏற்கனவே புழக்கத்திலி ருக்கிற சுமார் 20 கோடி துப்பாக்கிகளில் ஒன்றை எடுத்துக்கொள்வதற்கு வழி ஒன்றை காணக்கூடியதாக இருப்பார்கள் என்பது நிச்சயம். அல்லது அவர்கள் குண்டுகளைப் பயன்படுத்துவார்கள். வேறு வழிகளும் அவர்களுக்குண்டு.

துப்பாக்கிகளைநோக்குவதோ அல்லது வீடியோ விளையாட்டுகளை நோக்கு வதோ எல்லாமே தவறான கோணங்களி லிருந்து பிரச்சினைகளை அணுகுவதன் ஆரம்பமாகவே இருக்கின்றன. கொலை வெறியாட்டங்களில் ஈடுபடுகின்ற நபர்கள் வழமையாக கடுமையான மனக்கோளா றுகளால் பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். எதிர்காலத்தில் இத்த கையதுன்பியல் நிகழ்வுகளைத்தடுப்பதற் கான வழிவகைகளும் அவற்றுக்கு அடிப் படையான பதிலிறுப்புகளும் மனநோய் மருத்துவத்திலிருந்தும் ஆரம்பிக்க வேண் டியவையாகும். கொலைவெறியாட்டங் களைத் தடுப்பதற்கான சிறந்த வழி உறவு முறைகளிலும் பெருமளவு தங்கியிருக்கி றது. நண்பரோ அல்லது அயலவரோ வழமைக்கு மாறான முறையில் - இயல்பு க்கு முரண்பட்டமுறையில் செயற்படு வதை நீங்கள் அவதானிப்பீர்களேயா னால் காட்டுமிராண்டித்தனமான நிலை வரங்களை அதன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு முன்னதாக அவரை அழைத்துச் சென்று சிகிச்சை செய்ய வேண்டும். இத்தகையவர்களில் 20-30 வயதுகளில் இருப்பவர்களுக்கு சிகிச்சை செய்வதற்கு மிகவும் வலிதான சிகிச்சை முறைகளும் இருக்கின்றன. உண்மை யில் குழப்பத்திற்குள்ளானவர்கள் எப் போதுமே எங்களுடன் இருந்திருக்கிறார் கள், அவர்களுடைய திடீர்வெளிப்பாடுகள் இப்போது கூடுதலான அளவிற்கு தீங்கு விளைவிக்கும் ஆர்வமுடைய வடிவங் களை எடுக்கின்றன. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் களரி

# முகத்தில் சிரிப்பு... மூளையின் தெறிப்பு...



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

"சிரிப்பு வருது சிரிப்பு
இதன் சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதே
நமது பொறுப்பு .."

நீங்களும் இப்பாடலைக் கேட்டு இரசித்திருக்கக்கூடும். வயிறு குலுங்க எம்மைச் சிரிக்க வைத்துக் கொண்டே சாகசச் சிரிப்பென்றும், சங்கீதச் சிரிப்பென்றும், அசட்டுச் சிரிப்பென்றும், ஆணவச் சிரிப்பென்றும், சிரிப்பை வகைப்படுத்திக் காட்டியவர் மூத்த நகைச்சுவை நடிகர் கலைவாணர் ஆகும். அத்துடன் நின்றுவிடாது சிரிப்பின் சிறப்புகளையும் சிரித்துக் கொண்டே தனது பாட்டுடே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

விஞ்ஞான உலகு இப்பொழுதுதான் விழித்துக் கொண்டு சிரிப்புப் பற்றிப் பல ஆய்வுகளைச் செய்து அதன் சிறப்புகளைக் கண்டறிய முற்படுகிறது.



### சிரிப்பு ஒரு சமூகச் செயற்பாடு

சிரிப்பு என்பது சொற்களின் பங்களிப் பற்ற மனிதத் தொடர்பாடலின் ஒரு வடிவம் எனலாம். மனிதர்கள் தினமும் சராசரியாக 17 தடவைகள் சிரிக்கிறார்களாம். ஆனால் குழந்தைகள் 350 தடவைகளுக்கு மேல் சிரிக்கிறார்களாம்.

"நீங்கள் எதற்கெல்லாம் சிரிக்கிறீர்கள்" என்று வினவப்பட்டால் விடை என்னவாக இருக்கும்? நகைச்சுவைகளைக் கேட்டுச் சிரிக்கின்றோம் என்கிறார்கள் பலர். ஆனால் அது எப்போதும் உண்மையாக இருப்பதில்லை.

இதற்குக் காரணம் என்ன? தனியேயிருந்து ஒரு ஜோக்கைப் படித்து அல்லது பார்த்துச் சிரிப்பதைவிட, மற்றவர்களுடன் உரையாடும்போதே மனிதர்கள் அதிகம் சிரிக்கிறார்கள் என்கிறார் நரம்பியல் விஞ்ஞானியான Robert Provine. அதாவது சிரிப்பானது தன்னளவானது என்பதை விட சமூக ஊடாடலுடன் கூடிய செயற்பாடாகவே பெரும்பாலும் இருக்கிறது. ஒரு விடயத்தையிட்டு நாம் தனியாக இருக்கும்போது சிரிப்பதைவிட மற்றவர்களுடன் கூடியிருக்கும்போது முப்பது மடங்கு அதிகமாகச் சிரிக்கின்றோம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

எத்தகையவர்களுடன் நாம் கூட இருக்கின்றோம் என்பதும் சிரிப்பின் அளவைத் தீர்மானிக்கிறது. எமக்கு விருப்பமானவர்களுடன் சேர்ந்திருக்கும்போதும், எம்மை அவர்கள் விரும்ப வேண்டுமென நாம் நினைப்பவர்களுடனும் கூடியிருக்கும் போதும் சிரிப்பு அதிகமாக வருகிறது.

### சிரிப்பு ஆய்வு...
### சிரிக்கச் சிரிக்க ஆய்வு...

இவ்வருட Summer Science Exhibition 2012 இல் இது பற்றிய ஆய்வு நடைபெற்றது. எதிரொலி எழும்பாத முறையில் அமைக்கப்பட்ட அறையிலேயே இது நிகழ்த்தப்பட்டது. பல்வேறு விதமான, வித்தியாசமான சிரிப்புகளை இங்கு ஆய்வு செய்தார்கள். தன்னிச்சையாக எழுகின்ற சிரிப்பு, ஒருவர் தான் சிரிக்க விரும்பாத வேளையிலும் சிரித்தல், வலுக்கட்டாயமாகச் சிரித்தல், சிரிப்பதாக வெளிக்காட்டும் தோரணை (posed laughter) போன்ற பல வகையான சிரிப்புகள் இங்கு ஆய்வு செய்யப்பட்டன.

உங்களுக்கு விருப்பமான எதை வேண்டுமானாலும் செய்து உளமாரச் சிரியுங்கள் என பங்கு பற்றியவர்களுக்குச் சொல்லப்பட்டது. பிற்பாடு தாங்கள் சிரிப்பதாக மற்றவர்களுக்கு வெளிக்காட்டும் வண்ணம் சிரிக்கவும் எனவும் வேண்டப்பட்டனர். உள்ளே என்ன நடக்கிறதெனத் தெரியாமல் வெளியிலிருந்து இச் சிரிப்புகளைப் பார்த்தவர்களால் எது உண்மையான சிரிப்பு, எது போலியான சிரிப்பு என்பதைப் பெருமளவு சரியாக இனம் காண முடிந்திருக்கிறது. இதற்குக் காரணம் உண்மையான சிரிப்பில் இருக்கக் கூடிய சில தனித்துவமான வெளிப்பாட்டுத்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தன்மைகள்தான் என்கிறார்கள்.

"மனம் கறுப்பா வெளுப்பா என்பதை எடுத்துக் காட்டும் கண்ணாடிச் சிரிப்பு.." என எமது கலைவாணர் அன்றே பாடி வைத்தார். இவர்கள் இப்போதுதான் ஆராய்கிறார்கள் என எள்ளுகிறீர்களா?

இப்பொழுது நவீன கருவிகளின் உதவியுடன் விஞ்ஞானபூர்வமாக உறுதிப் படுத்த முடிந்திருக்கிறது. ஆனால் ஆதி மனிதனால் கூட உளம் நிறைந்த சிரிப்பையும், வெளிப்பூச்சுச் சிரிப்பையும் தெளிவாக இனம் காண முடிந்திருக்கிறது என்பது உண்மைதான்.

இந்த ஆய்வின் மற்றொரு பகுதியும் சுவாரஸ்யமானது. இது தரும் செய்தி மேலும் கவனத்திற்குரியது. அச் செய்தி என்ன?

"கவனம்! போலியாகச் சிரியாதீர்கள்.


உங்களுடன் உரையாடிக் கொண்டிருப்பவரின் மூளையானது ஏன் இவர் அவ்வாறு போலிச் சிரிப்பில் இறங்கியிருக்கிறார் என்பதைக் கூர்மையாக ஆராயும். அவரது உள்ளெண்ணம் என்ன என்பதைப் பகுத்தறிய முனையுமாம். இதை எவ்வாறு கண்டறிந்தார்கள் fMRI (Functional magnetic resonance imaging)ஸ்கான் மூலம்தான். இரண்டு விதமான சிரிப்புகளையும் அவதானித்துக் கொண்டிருந்தவர்களின் மூளையின் செயற்பாடுகள் நுணுக்கமாக ஆராயப்பட்டது. வெளிப்படையாகத் தெரியும் மனித நடத்தையின் உள்நோக்கத்தைக் கண்டறியும் மூளையின் குறிப்பிட்ட பகுதியானது போலிச் சிரிப்பை அவதானித்துக் கொண்டு இருந்தவர்களில் அதீதமாகச் செயற்பட்டதாகக் கண்டறியப்பட்டது. போலிச் சிரிப்பிற்கான காரணத்தைத் தேடுவதற்காக அந்தப் பகுதி அதிகமாக உழைக்க நேர்ந்திருக்கிறது.

ஆம், மனம்விட்டுச் சிரிப்பது மற்றவர்களைச் சந்தேகப்பட வைக்காது, உளம் மலர வைக்கும். அதே நேரத்தில் போலிச் சிரிப்பானது மற்றவர்களின் மூளையைச் சிந்திக்க வைக்கும்.

**போலிச் சிரிப்பு கேடானதா?**

நாம் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கும்போது சிரிப்பதானது நாம் மகிழ்ச்சியுடன் இருப்பதை எடுத்துக்காட்டுகிறது. அவர்களை விரும்புகிறோம் என்பதையும் நாம் அவர்களோடு மனதார இணைந்திருக்கிறோம் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

அதேவேளை வலிந்து சிரிப்பதானது கேடானது என்றும் சொல்ல முடியாது. அது மற்றவர்களுக்குப் போலியாகத் தெரிந்தாலும் அதற்குள் மகிழ்ச்சியளிக்க வேண்டும் என்ற நேர்சிந்தனைச் செயற்பாடு இருப்பதை நினைவு கொள்ள வேண்டும்.



**மனித இடைவெளிகளை நிரப்புவது சிரிப்பு**

சிரிப்பு என்பது மனிதனோடு கூடப் பிறந்த ஒரு உணர்வின் வெளிப்பாடு என்கிறார்கள் பலர். மனிதனின் முதற் சிரிப்பானது ஆபத்திலிருந்து தப்பி வந்தவன் தன் மன ஆறுதலை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் ஆரம்பித்திருக்கலாம் என்கிறார் தத்துவஞானியான John Morreall. சிரிக்கும்போது பிறக்கின்ற உளஅமைதியானது உயிரினங்களில் இயல்பாக உள்ளுறைந்திருக்கும் சண்டையிடும் உணர்வைத் தளர வைக்கிறது.

இக்கருத்தின் நீட்சியாகவே சிரிப்பு என்பது மனித அல்லது உயிரினங்களிடையே உறவுகளை ஏற்படுத்துவதையும், வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது என்கிறார்கள் இன்றைய ஆய்வாளர்கள்.

இதைத்தான் "சிரிப்பென்பது இருவர்களுக்கு இடையேயான மிகக் குறைந்த இடைவெளி" என Victor Borge சொன்னார் போலும்.

**மனித இனத்திற்கே சொந்தமானதா சிரிப்பு**

அது சரி. "மனித இனத்திற்கே சொந்தமானது சிரிப்பு" என்றும் பாடினாரல்லவா கலைவாணர்.

**அது உண்மைதானா?**

சில மிருகங்கள் சிரிப்பதுண்டு என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். எலிகள், குரங்குகள் மற்றும் நாய்கள் எழுப்புகின்ற சில ஒலிகள் அவை சிரிப்பதை எடுத்துக் காட்டுகின்றன.

உதாரணமாக எலிகள் ஒன்றோடு ஒன்று விளையாடும்போது உணர்ச்சிப் பெருக்கில் உச்சஸ்தாயியில் கீச்செனெச் சத்தமிடுவது சிரிப்பதன் அறிகுறிதான். குரங்குகளும் அவ்வாறே. விளையாடும் போது சத்தமிடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

நாய்களின் சிரிப்பை நீங்களே அவதானித்திருக்கக்கூடும். உங்களோடு விளையாடும்போது அல்லது தன் எஜமானைக் கண்ட மகிழ்ச்சியில் இருக்கும் போது அது வாலை ஆட்டிக் குலைத்துக் கொண்டு ஒலி எழுப்புகிறது அல்லவா? அதுதான் அதனுடைய சிரிப்பு எனலாம் அல்லவா?

இருந்தபோதும் மிருகங்கள் மனிதனைப்போல போலியாகச் சிரிப்பது அறியப்படவில்லை.

**மருந்தாகும் சிரிப்பு**

Laughter is the best medicine என ஆங்கிலத்தில் சொல்வார்களே. அது உண்மையா?

சிரிப்பதானது மனதையும், உடலையும் வலிமைப்படுத்தி புத்துணர்வுடன் வைத்திருக்கும்என்பதைபல மருத்துவ ஆய்வுகள் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளன. ஆனால் அதைப் பற்றி இங்கு பேச அவகாசமில்லை.


இருந்தபோதும்....

"சிரி.. சிரி.. சிரிசிரியெனச் சிரி." என ஆளவந்தானில் கமல் பாடுகிறாரே.

அதுபோல "கலகலவெனச் சிரி கண்ணில் நீர் வரச் சிரி"

சிரித்திருப்போம், மகிழ்ந்திருப்போம், நலமடைவோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலக் கண்ணாடி

# மர்லின் மன்றோ மறைந்து கடந்து விட்ட அரை நூற்றாண்டு

கே.எஸ்.சிவகுமாரன்

சென்ற நூற்றாண்டின் ஐரோப்பிய/அமெரிக்க சினிமா நடிகைகளுள் அதிக கவனத்தைப் பெற்ற ஹொலிவுட் நடிகையின் பெயர் மர்லின் மன்றோ அதற்குக் காரணங்கள் பல. அவற்றுள் சில; அவரின் அழகு, கவர்ச்சி, குழந்தை மனப்பாங்கு, ஓரளவு நடிப்புத் திறன், மிகப்பெரிய புள்ளிகள் அவரிடம் மயங்கித் தம் வாழ்நாட்களிற் சிலவற்றை அவருடன் பங்கிட்டுக் கொண்டமை, 1950களில் துணிகரமான நிழற்படத்திற்குத் தன்னையே அவர் அனுமதித்துக் கொண்டமை, அவருடைய சோக வாழ்க்கை, எதிர்பாராத அவரின் தற்கொலை போன்றவை.

அவரைப் பற்றி நாம் இந்த 21 ஆம் நூற்றாண்டிலே ஏன் நினைக்க வேண்டும்? இது ஏனெனில் 1962 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி பின்னிரவில் மர்லின் மன்றோ தற்கொலை செய்து கொண்டமை உலகின் பரபரப்பான செய்தியாய் வெளிவந்தமையே. 50 வருடங்களின் பின் அவரது தற்கொலை நிகழ்வு இன்றைய வாசகர்களுக்குப் பெரிய செய்தியாக - அசாதாரணமான புதினமாக - தென்படாமலிருக்கலாம். ஆயினும் அவருடன் சம்பந்தப்பட்ட ஆண்கள் உலகின் மிகப்பெரிய பிரபலமானவர்களாக இருந்தமை முக்கியத்துவத்தை உண்டு பண்ணுகிறது.

ஜோடி மகியோ,ஆர்தர் மிலர், எலியா கஸான், மார்லன் பிராண்டோ, ப்ராங் சினார்டா, கெனடி சகோதரர்கள் போன்றவர்கள் தத்தமது துறைகளின் மூலம் உலகப் பிரசித்தி பெற்றவர்கள். இவர்களுடன் தொடர்புகொண்டமையாலும், இந்த ஹொலிவுட் நட்சத்திரம் கவனத்தை ஈர்த்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவர் தாங்கொணா உடல் நோய்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டு அவதிப்பட்ட போதும் பிற உலகிற்கு வெளிக்காட்டாமல் சிரித்த முகத்துடன் தன் இளமை அழகைப் பார்ப்பவர் கண்களுக்கு விருந்தளித்து வந்தார்.

“செக்ஸ்” என்று சொல்லப்படும் பாலியல் சம்பந்தப்பட்ட விடயங்கள் இப்பொழுது போல் அப்பொழுது பகிரங்கமாகப் பேசப்படாத காலத்தில் அவருடைய நிழற்படம் பல்லாயிரக்கணக்கான சினிமா இரசிகர்களைக் கிறுகிறுக்க வைத்தது.

BILLY WILDER (பிலி வைல்டர்) என்ற பிரபல அமெரிக்கத் திரைப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியாளர் "Seven year Itch" (ஏழாண்டு அமைதியற்ற அவர்)என்ற படத்தை 1954இல் படம் பிடித்த வேளையில் ஒரு காட்சி;

அப்பாவித் தன்மையையும் தூய்மை யையும் காட்டும் வண்ணம் வெள்ளை நிற அங்கியொன்றை முழங்கால்வரை அணிந்த இந்த அழகியின் "ஸ்கேர்ட்" காற்று அடித்ததனால் மேலே கிளம்பி அவர் தொடைகளையும் அணிந்திருந்த ஈமல்லிய உள்ளணியையும் பார்ப்பவர்க ளுக்குக் காட்டி நின்றது. இந்தப்படமே, 'glamorous Sex'பிரதிபலிப்புப் படங்க ளின் முன்னோடியாகப் பிரசித்தி பெற்றது.

மர்லின் மன்றோவின் அற்ப ஆயுள் வாழ்க்கை ஒரு துன்பீற்று Tragedy நாடக மாகவே அமைந்துவிட்டது. சோகமே நிறைந்த அவருடைய வாழ்க்கையை நாம் நினைவுபடுத்திப் பார்த்தால் அவர் மீது நாம் பச்சாத்தாபப் படவே வேண்டும்.

அவருடைய தகப்பன் யார் என்றே தெரியாது. தாயார் மனவியாதி நிலைய மொன்றில் அடைபட்டுக் கிடந்தார். அவரை வளர்த்தவர்கள் இல்லத்தில் சில நாட்களும், அனாதை இல்லத்தில் சில நாட்களுமாக அவரது வாழ்க்கை நிரந்தர வசிப்பிடமின்றித் தத்தளித்தது.

பலவித இடுக்கண்களுக்கும் ஆளாகிய இந்தச் சுமைதாங்கி சிறுவயதிலிருந்தே, திக்குவாய் போன்றவற்றினால் பாதிக்கப் பட்டார். பயங்கரமான கறைகளைக் கண் டார். அதனால் போதிய நித்திரையின்றி வாடினார்.

யதார்த்த வாழ்க்கையினின் றும் வேறுபட்ட துருவங்களில் அவர் வாழ்ந்து வந்தார் என்றும் கூறலாம். மாதவிடாய் காலத்தில் அவர் மிகவும் வேதனைக்கு உட்பட்டார்.

வயிற்றில் ஏதோ ஒரு சிக்கல், வலி, சத்தி எடுக்க வேண்டும் போன்ற பரிதவிப்பு இத்தனையையும் தாங்கிக் கொண்டு இந்த உயிர் பிறரைத் தன் அழகி னாலும், ஆற்றலினாலும் மகிழ்வித்து வந்தது. போதை மருந்துகளும் அவருக்குத் துணை செய்யவில்லை.

மென்மையான இனிய குரல்,தனது நடிப்பைக் வெளிக்கொணர அவர் மேற் கொண்ட பயிற்சிகளும் அவர் வாழவே விரும்பினார் என்பதைக் காட்டி நின்றன.

அவர் சுயமாகவே அறிவை வளர்த்துக் கொண்ட அக்காலப் புதுமைப் பெண். உளவியல்,இலக்கியம்போன்றவற்றிலும் ஈடுபாடு இருந்ததனாற் போலும், இடது சாரியான ஆர்தர் மிலர் என்ற நாடகாசிரியர் அவரை மனதார நேசி த்தார். தனது மதம் "ப்ரொய்டியனிஸம்" என்று ஒரு முறை கூறியிருக்கிறார்.

இவருடைய மரணம் தொடர்பாக சில ஐயப்பாடுகள் இருந்தனவாயினும், அவர் தன்னையே மாய்த்துக் கொண்டார் என்று தான் நம்பவேண்டியிருந்தது.

மர்லின் மன்றோ பற்றி கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் வரலாறு / பாலியல் தொடர்பாகப் பணிபுரியும் பேராசிரியர் (LOIS BANNAR) லொயிஸ் பனர் 'The Passion and the Paradox' என்ற நூலை எழுதியிருக்கிறார். இது ஓர் சிறந்த ஆய்வு நூல் எனக் கருதப்படுகிறது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# இந்த மண்ணும் கடல்வ
# முடிந்தாலும் மறக்க மு

## கணேசனை திரும்பிப் பார்க்கிறோம்

இருபதாம் நூற்றாண்டு தொடங்குவதற்கு முன்பே திரைப்படம் தமிழ் நாட்டில் தொடங்கிவிட்டது. 1897ஆம் ஆண்டு எட்வர்டு என்ற ஆங்கிலேயர் சென்னையில் முதல் சலனப்படக் காட்சியைத் திரையிட்டார். அன்று தொடக்கம் சில நிமிடங்கள் ஓடக்கூடிய துண்டுச் சலனப்படங்கள் திரையிடப்பட்டன. அப்போது திரைப்படக் காட்சிகளுக்கு மக்கள் மத்தியில் பரவலான வரவேற்பு இருந்தது. திரைப்படங்கள் தயாரிப்பதற்கான உத்வேகம் வளர்ந்தது. சுதேசிகள் படத்தயாரிப்பில் ஈடுபாடு காட்டத் தொடங்கினர். 1916இல் நடராஜ முதலியார் என்பவர் “கீசகவதம்” எனும் மௌனப் படத்தைத் தயாரித்தார். இதுவே தென்னிந்தியாவின் முதல் திரைப்படம். 1931ஆம் ஆண்டு முதல் பேசும் படம் திரையிடப்பட்டதுடன், ஒரு புதிய சகாப்தம் உருவானது. “காளிதாஸ்” என்ற முதல் முழுநீள தமிழ்ப்படம் வெளிவந்தது.

பேசும் படங்களின் வரவு நாடகக் கம்பெனிகளை நலிவுறச் செய்தது. மேடையில் இருந்து சினிமா நோக்கிய படையெடுப்புத் தொடங்கியது. சென்னையில் பேசும்பட ஸ்டுடியோ நிறுவப்பட்டதும் இந்தப் படையெடுப்பில் வேகம் கூடியது. இவ்வாறு சினிமாவுக்குள் வந்தவர்கள் நாடக வடிவத்தை அதன் இசை மற்றும் நடிப்பு முறைமைகளுடன் கொண்டுவந்தனர். அக்காலத்தமிழ்த் திரைப்படங்கள் நாடகங்களின் மறுபதிப்பாகவே அமைந்திருந்தன. இதனால் அன்றைய சினிமா, படமாக்கப்பட்ட நாடகமாகத்தான் இருந்தது.

சினிமா ஒரு கட்புல ஊடகம். இதன் தனித்தன்மையை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் நோக்கிய கவனம் குவிக்கப்படவில்லை. சினிமாவின் மொழி தமிழ்சார்ந்த பின்புலத்தில் முழுமையாக வளர்ச்சியடையவில்லை. 1931இல் வெளிவந்த முதல் தமிழ்ப் பேசும் படம் தொடக்கம் 1970களின் இடைப்பகுதி வரை நாடகக் கம்பெனிகளில் பயிற்சி பெற்ற கலைஞர்களே தமிழ் சினிமாவை ஆக்கிரமித்துள்ளனர்.

ஆரம்ப நடிகர்களான கே.பி. கேசவன் மற்றும் பி.யு. சின்னப்பா, எம்.கே. தியாகராஜ பாகவதர், டி.ஆர். ராஜகுமாரி, கே.பி.சுந்தராம்பாள் போன்றோர் நாடகத்திலிருந்து வந்தவர்கள். ஐம்பதுகளில் நுழைந்த எம்.ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன் ஆகியோரின் பெருவளர்ச்சி எழுபதுகளின் இறுதிவரை நீடித்தது. இந்த இரு நடிகர்களும் கூட நாடகத்திலிருந்து வந்தவர்கள் தாம். இவ்விருவரதும் நடிப்புப்பாணி பாய்ஸ் கம்பெனிகளில் அவர்கள் கற்றுக் கொண்ட தொடக்ககால மேடைப் பயிற்சிகளில் உருவானது. பின்னர் இவர்கள் தத்தமக்கான தனித்துவ முத்திரைகளுடன் வெளிப்பட்டனர்.

இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில் இருந்துதான் சிவாஜி கணேசன் மற்றும் எம்.ஜி.ஆர் குறித்த பார்வைகள், மதிப்பீடுகள் உருவாக்கப்பட வேண்டும். நாடகப் பின்புலத்தில் உருவாகி வளர்ந்து வந்த ஒரு கலைஞர், பின்னர் எப்படி சினிமாவில் ஆளுமைமிக்க கலைஞராகப் பட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# ...னும் மறைந்து ...யாதடா...

கலையுலகம்

தமிழாகரன்

தீட்டப்பட்டார். "நடிகர் திலகம்" என்ற அடைமொழிக்கு உரியவரானார்என்பதை நாம் கூர்ந்து நோக்கினால்தான் சிவாஜியின் ஆளுமை உருவாக்கம் தெளிவாகப் புரியக் கூடியதாக இருக்கும்.

கணேசன் விழுப்புரத்தில் ஒருசாதாரண குடும்பத்தில் அக்டோபர் 1, 1928இல் பிறந்தார். கணேசனுக்குச் சிறுவயது முதலே பாட்டு என்றால் உயிர். தன் பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து பாடிக் கொண்டே இருப்பார். சுமார் 15 மாதப் பள்ளி வாழ்க்கைக்குப் பிறகு கணேசனின் பள்ளிப்படிப்பு முடிவுக்கு வந்தது. இவரது தந்தையார் வேலை நிறுத்தம் காரணமாக சிறைசென்றார். இதனால் வீட்டில் வறுமை குடிகொண்டது. அந்த நாள் கணேசனின் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள். கூத்து என்றும் கூறமுடியாத நாடகம் என்றும் சொல்ல முடியாத இரண்டும் கலந்த கட்டப்பொம்மன் ஆட்டம் கணேசன் வீட்டுத் தெருவில் நடந்தது. அக்கூத்துப் பார்க்கப் போன கணேசனுக்கு வெள்ளைக்கார சிப்பாய்களில் ஒருவராக வீறுநடைபோட்டு நடக்கும் வாய்ப்பு கிடைத்தது. கணேசன் கலைக்காகப் போட்ட முதல் நடை அது தான். தொடர்ந்து கணேசனுக்கு நாடகக் கம்பெனியில் சேர்ந்து நடிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. அத்துடன் வீட்டின் வறுமையைப் போக்கவும் விரும்பிய வராக வீட்டில் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் ஓடிப் போனார். "அப்பா, அம்மா இல்லாத அநாதை நான்" என்று பொய் சொல்லி யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளையின் நாடகக் கம்பனியில் சேர்ந்தார்.

ஏழு வயதில் பாலசீதையாக "யாரென இந்தப் புருஷனை அறிகிலேன்" என்று பாடி நடித்து, "நன்றாக நடித்தாய்" என்று குருவின் பாராட்டைப் பெற்றார். நாடகக் கம்பனியில் ஏனையவர்களை விட இவருக்குப் பேரும் புகழும் கிடைத்தது. பல்வேறு கலைஞர்களின் அறிமுகமும் கிடைத்தது. அப்பொழுது "ராஜபார்ட்" வேடம் ஏற்பதுதான் ஒரு நாடக நடிகரின் வெற்றி. தொடர்ந்து கணேசன் சின்னச் சின்ன வேடங்களில் நடித்து பிரபலமான ஸ்த்பீபார்ட் வேடம் போடுமளவுக்கு உயர்ந்தார், வளர்ந்தார்.

சி.என். அண்ணாத்துரை, நடிகர் எம்.ஜி.ஆருக்காக "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" எனும் நாடகத்தை எழுதியிருந்தார். இதில் சத்ரபதி சிவாஜி வேடத்தை எம்.ஜி.ஆர். ஏற்று நடிக்க இருந்தார். ஆனால் பின்னர் எம்.ஜி.ஆர். இந்த நாடகத்தில் இருந்து விலகிக்கொள்ள நேரிட்டது. அப்பொழுது சிவாஜி வேடத்தில் கணேசன் நடித்தார். இந்த நாடகத்தைப் பார்க்க வந்திருந்த ஈ.வெ.ரா. பெரியார் "கணேசன், சிவாஜி கணேசன், நல்லா நடிச்சாரு; சிவாஜி மாதிரியே இருந்தாரு" என்று பாராட்டிப் பேசினார். அன்று முதல் கணேசன், "சிவாஜி கணேசன்" ஆனார்.

திரைப்படங்களில் சிறுசிறு வேடங்கள் ஏற்றுத் திரைப்பட நடிகராகும் சூழ்நிலை இருந்தபொழுது, "பராசக்தி" (1952) படம் மூலம் சிவாஜி கதாநாயகனாக அறிமுகம் ஆனார். பகுத்தறிவை வலியுறுத்தும் இந்தப் படம் பரவலான வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுக் கொடுத்தது. பட்டிதொட்டி எங்கும் சிவாஜி என்ற நடிகர் அறிமுகமானார். அன்று தொடங்கிய மவுசு தமிழ்த் திரைப்பட வரலாற்றில் சிவாஜிக்கு தனியான அடையாளத்தைப் பெற்றுக் கொடுத்தது. நட்சத்திர அந்தஸ்து மிக்க கதாநாயகனாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து வலம் வந்தார். ஆதிக்கம் செலுத்தினார். அன்று தொடங்கிய இந்தக் கொண்டாட்டம் தான் அதன் பிறகு கணேசன் திரும்பிப்பார்க்க நேரமில்லாமல் உழைத்துக்கொண்டிருந்தார். பராசக்திக்கு முன்பு வரை முழுச்சாப்பாடு கிடைக்காமல் கணேசன் தன் நடிப்பையே தனக்கான உணவாகக் கருதி பசி ஆறினார். பராசக்தி வந்தபிறகோ பசியாற நேரம் இல்லாமல் முழுச்சாப்பாடும் சாப்பிட காலம் போதாமல் கடுமையாக உழைத்தார்.

சிவாஜி நடிப்பில் தனக்கென்று ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டார். புராண சமூக வரலாற்றுப் பாத்திரங்களில் தனித்து ஒளிர்ந்தார். தொடர்ந்து பல்வேறு பட்ட பாத்திரங்களை ஏற்று நடித்தார். இந்த அம்சங்கள் சிவாஜியின் ஆளுமை விகசிப்பின் பரிமாணமாகவும் பரிணாமமாகவும் அமைந்திருந்தன.

தனக்குள் உள்வாங்கப்பட்ட நடிப்பு முறைமையின் பல்வேறு மேற்கிளம்புகையின் உச்சங்களைத் தமிழ்ப் பண்பாட்டு அசைவியக்கத்தின் மனிதநேயப் பாடுகளாக வெளிப்படுத்தினார். இதன் ஓர் முதிர்ச்சியாகவே சிவாஜி விளங்கினார். சொல்லிலும் அங்க அசைவிலும் (உடல் மொழியிலும்) பல்வேறு கோலங்களை வெளிப்படுத்தினார். தமிழ்ச் சினிமாவின் நடிப்பு முறைமைக்கான நுண்திறன்கள், தன்மைகள் இதுதான் என்று பாடம் புகட்டும் சமாந்தரமான நகர்வாகவும் சிவாஜி விளங்கி வந்துள்ளார். இதன் பிடியில் இருந்து ஏனைய கலைஞர்கள் யாரும் இலகுவாக விடுபடமுடியாத நிலைமையும்ஏற்பட்டது. இதுஇன்றுவரை தொடர்கிறது.

சிவாஜி முன்னூறு படங்களுக்கு மேல் நடித்துள்ளார். கிட்டத்தட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட இயக்குநர்களிடம் பணிபுரிந்துள்ளார். இருபத்தியொரு படங்களில் இரட்டைவேடம்புரிந்துசாதனைபுரிந்தார். இதுதவிர பலே பாண்டியா (1962), தெய்வமகன்(1969),திரிசூலம்(1979), ரத்த பாசம் (1980) முதலான நான்கு படங்களில் மூன்று வேடங்களில் நடித்தார்.

தமிழ் சினிமாவில் 1952 முதல் 1982 வரையிலான காலகட்டம் "சிவாஜி கணேசன்" காலம் எனக் காட்டியதை யாரும் மறுக்க முடியாது. அவரது அயராத உழைப்பு இந்த இடத்தைப் பெற்றுக் கொடுத்தது. "திரும்பிப்பார்" என்ற படத்தில் சிவாஜி முழுக்க முழுக்க வில்லன் பாகத்தையே ஏற்றார். பல பெண்களைக் கெடுத்து பொய் சொல்லும் பாத்திரம் அது. அந்தப் பாத்திரத்தில் சிவாஜி பல்வேறு தன்மைகளை வெளிப்படுத்தி இருப்பார். "ஆங்கில பாணி" என்று உயர்த்திச் சொல்லப்படும் தகுதியோடு நடித்துப் புகழ் பெற்றார்.



"இன்று வேறு கோணங்களில் நின்று பார்ப்பவர்கள் சிலர், ஆங்கிலப் படங்களைப் பார்த்து அந்தப் பாத்திரங்களைப் போலவே அந்தப் பாணியிலே நடிக்கிறார் என்று கூறுவார்கள். ஆனால் திரும்பிப்பார் எடுத்த காலத்தில் அதிக ஆங்கிலப் படங்களை சிவாஜி கணேசன் எப்படிப் பார்த்திருக்க முடியும்? ஏற்று நடிக்கும் பாத்திரங்களுக்கு அவர் அற்புத மெருகேற்றி நடிக்கும் போது, அந்த நடிப்புக்குப் பிறப்பிடமான பயிற்சியையும், தேர்ச்சியையும் அல்லவா நாம் போற்ற வேண்டும். ஆங்கிலப்பாணியின் சாயல் அங்காங்கே இருக்குமானால், கடுமையான பயிற்சியாலும் உழைப்பாலும் இப்படிப் போற்றத்தக்க திறமை உண்டானது என்று உணர்வது தானே முறையும் பண்பும் ஆகும். "சிவாஜி கணேசனின் நடிப்பை மேலெழுந்த வாரியாக விமர்சிப்பது தவறு" என்று எம்.ஜி.ஆர். குறிப்பிட்டுள்ளார். எம்.ஜி.ஆரின் இந்த வார்த்தைகள் அறிவார்ந்த அனுபவ வெளிப்பாடு. இப்படிக்கூறுமளவுக்கு எம்.ஜி.ஆர். சினிமாவின் பல்வேறு நுணுக்கங்களையும் அறிந்து தெளிந்து கொண்டவர். இயக்குநர், எடிட்டர் எனப் பல நுட்பங்களைக் கொண்டிருந்தவர்.

சிவாஜி 1953 முதல் 1993 வரை பல தோல்விப் படங்களையும் சந்தித்தார். அவரது படங்களின் தோல்விக்கு முக்கிய காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். மாறிவரும் சமூக நிலைமைகளை கருத்தில் எடுக்காமை; போட்டி நடிகராகவிருந்த எம்.ஜி.ஆர் படங்களின் மகத்தான வெற்றி; படங்கள் காலம் தப்பிய பயிராக வெளியான சூழ்நிலை மற்றும் நீண்ட காலத் தயாரிப்புகள்; சிவாஜியின் நடிப்பின் மீது மக்களுக்கு இருந்த அதிகமான எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுத்து இயங்காத இயக்குநர்கள்; தவறான கதாநாயகித் தேர்வு; மிகமாறுபட்ட தரமான கதைகளில் சிறப்பாக நடித்தும் புற்றீசல் போல் ஆண்டுக்கு பத்துப் படங்களுக்கும் அதிகமாக நடித்ததால் சிவாஜியே அவருக்கு போட்டியானார்.

1976 கிறிஸ்மஸ் தினத்தன்று சிவாஜி நடித்த ரோஜாவின் ராஜா படம் வெளியானது. இதில் கல்லூரி மாணவனாக நடித்தார். இப்படம் அவரைப்பற்றிய பல்வேறு சர்ச்சைகளைக் கிளப்பியது. "சிவாஜிகணேசன் சமீபகாலங்களில் நல்லவேடங்களாக தேர்ந்தெடுக்காமல் கல்லூரி மாணவராக ஆடிப்பாடி காதல் களியாட்டங்களில்ஈடுபடுவதைத்தவிர்க்க வேண்டும்" என்று ஆனந்தவிகடன் இதழில் நடிகை பத்மினி வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது. அதுமட்டுமல்ல கல்கி இதழ் சிவாஜி சகாப்தம் முடிந்துவிட்டதென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்ச்சையை தொடக்கி வைத்தது. ஒவ்வொரு வாரமும் சிவாஜிகணேசனுக்கு ஆதரவாகவும் எதிராகவும் பிரபலமான திரைக்கலைஞர்கள் பேட்டியளித்தார்கள். வயதுக்குத் தக்க வேடங்களில் சிவாஜி கணேசன் நடிக்க வேண்டும் என்று நடிகை சௌகார் ஜானகி கூட கருத்து தெரிவித்திருந்தார். இதயம் பேசுகிறது இதழின் ஆசிரியர் மணியன், சிவாஜி கணேசன் ஓய்வுபெற்றுக்கொள்ள வேண்டும் என்று எழுதினார். இவ்வாறு பல்வேறு மட்டங்களிலிருந்தும் விமர்சனங்கள் வெளிவந்தன. நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் சிவாஜி நடித்திருப்பினும் அவர் நடிப்பு மிகைநடிப்பு (ஓவர் ஆக்டிங்) செய்கிறவர் என்ற விமர்சனம் உண்டு. ஆரம்பத்தில் எஸ்.எஸ். வாசன், எல்.வி. பிரசாத், சி.எச். நாராயணமூர்த்தி போன்ற மூத்த இயக்குநர்கள் தவிர வேறு இயக்குநர்களால் சிவாஜியை மிகைநடிப்பிலிருந்து திசை திருப்ப முடியவில்லை. அவ்வாறு முயற்சித்தபோது சிவாஜியின் இயக்குநர்களாக அவர்களால் நீடிக்க முடியவில்லை. சிவாஜியின் இந்த மிகைநடிப்புக்கு ஒத்துப் போகிறவர்களுக்கே அவரது ஒத்துழைப்பு, கால்ஷீட் கிடைத்தது.

இந்த மிகைநடிப்பு குறித்த விமர்சனத்துக்கு சிவாஜி அளித்த விளக்கம் மேலும் அவரை விளங்க, விளக்க உதவும். "நடிப்பு என்பதே இயற்கைக்கு மாறுபட்டதுதானே. மனைவி இறந்துவிட்டால் "அய்யோ போயிட்டியேம்மா" என்று உரக்கக் கத்திக் குலுங்கிக் குலுங்கித் தானே ஒருவன் அழுவான்? "போய்ட்டியா?" என்று கேட்டுவிட்டு முகத்தைத் திருப்பிக் கொள்வதுதான் நல்ல நடிப்பா? நடிப்பு என்பதே பார்வையிலேயும், வசனத்திலேயும் தான் இருக்கிறது" என்றார். கம்பெனி நாடக நடிகராக இருந்து சினிமாவுக்கு வந்தவர் சிவாஜி கணேசன். அந்த நடிப்பு முறையில் இருந்து விடுபட முடியாது சினிமாவின் மொழிக்கு இயல்பாகி வரக்கூடிய பக்குவத்தையும் அவரால் அடையமுடியவில்லை. அதனால் தனது இந்தக் கருத்தில் தெளிவாகவும் உறுதியாகவும் இருந்தார்.

"நடிப்பு என்றாலே மிகைப்படுத்திக் காட்டும் உணர்ச்சிதான். இதில் ஓவர், அண்டர், நேச்சுரல், அன்நேச்சுரல் என்பதெல்லாம் வெறும் விதண்டாவாதம். உயிரைக் கொடுத்து நடித்தால் ஓவர் ஆக்டிங் என்கிறார்கள். கொஞ்சம் சாது போல் நடித்தால் நடிக்கவே இல்லை என்கிறார்கள். இதற்கெல்லாம் முடிவே கிடையாது. எனவே நமக்கு நமது வாத்தியார் என்ன சொல்லிக் கொடுத்திருக்கிறாரோ, நம்முடைய கற்பனைக்கும் திறமைக்கும் என்ன வருகிறதோ, மக்கள் எதை நம்மிடம் எதிர்பார்க்கிறார்களோ அதுபோல் நடிக்க வேண்டும். அதுதான் எனக்குத் தெரியும்." இவ்வாறு தனது மிகைநடிப்பு குறித்த விமர்சனத்துக்கு சிவாஜி பதில் வைத்திருந்தார். "நமது வாத்தியார் என்ன சொல்லிக் கொடுத்திருக்கிறாரோ" என்று கூறும் போதே சிவாஜி எந்த மனநிலையில் இருந்தார் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும், நாடகத்தில் இருந்து சினிமாவில் வந்த சிறுகூறுகள், மரபுகள் குறித்து நாம் விரிவான உரையாடல்களை தமிழில் வளர்க்கவில்லை; இதனால் தான் சிவாஜி கணேசன் குறித்த மதிப்பீடு தெளிவாக முன்வைக்கப்படாமல் போய்விட்டது. சினிமாவை தீர்க்கமாக அணுக வேண்டும் என்ற பீதியில் நாம் பேசியிருந்தால் ஊடகங்களில் நல்ல சினிமா ரசனையும் தமிழ்சினிமா குறித்த உரையாடல்களும் விரிந்திருக்கும், ஆழப்படுத்தப்பட்டிருக்கும். நல்ல திரைப்படம் ஒன்றை எதிர்கொள்ளும் திறனை நாம் வளர்த்துக்கொண்டிருப்போம்.

எழுபதுகளின் நடுப்பகுதியின் பின்னர் தமிழ் சினிமாவில் புதிய அலை உருவானது. இக் காலத்திற்குப் பின் சிவாஜியும் எம்.ஜி.ஆரும் பரவலான வரவேற்பை பெறத்தவறிவிடுகின்றனர். இந்த மாற்றத்தின் பின்னணியில் தான் பாரதிராஜா இயக்கிய "முதல் மரியாதை"யில் சிவாஜியின் நடிப்பு அமைந்ததையும் காணலாம்.

குறிப்பாக, காட்சி ஊடகத்தைத் தன் வயப்படுத்துகின்ற நுண்திறன்கள் வெளிப்படும் பொழுது பழகிப்போன நடிப்பு முறைமையை கைவிட்டு, படிப்படியாக காட்சி ஊடகத்தின் சினிமா மொழியின் சாத்தியங்களுக்குள் இயல்பாக வரமுடியும். "முதல் மரியாதை" படத்தில் தொடங்கி "தேவர்மகன்", "ஒரு யாத்திர மொழி" (மலையாளம்) போன்ற படங்களில் நாம் கண்ட சிவாஜி வேறு. முன்னைய திரைப்படங்களில் இருந்து மாறுபட்ட சிவாஜியை நாம் மேற்கூறிய படங்களில் தரிசித்தோம்.

பல்வேறு சிறப்புக் கூறுகளும் மேதைமையும் கொண்ட கலைஞர் சிவாஜி முழுமையாக கலையாக்கம் பெறாமல் வீணடிக்கப்பட்டுள்ளார் என்ற விமர்சனமும் சில மட்டங்களில் இன்னும் உள்ளது. இதில் நியாயம் இல்லாமல் இல்லை. எவ்வாறாயினும் தமிழ் சினிமா வரலாற்றில் சிவாஜியின் திரைப்படங்கள் ஒரு சகாப்தமாகவே இருக்கும். திரைப்பட மாணவர்கள், சினிமா கற்கை சார்ந்து சிவாஜியை இன்னும் பல்வேறு கோணங்களில் அணுக முடியும். அப்பொழுது தமிழ்ப்பண்பாட்டு அசைவியக்கத்தின் கலைத்துவப் பெறுமானமாக, ஆளுமையாக சிவாஜிகணேசன் மேற்கிளம்புவதை நாம் காணலாம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்



## பெரும்பான்மையினரின் கருத்தாக்கங்கள்

நான் பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்டவன் என்பதாலும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 35 ஆண்டுகள் பணிபுரிந்தமையினாலும் பெரும்பான்மையினரோடு நெருங்கிய பழக்கம் உண்டு. அவர்களில் பலர் தாராள சிந்தையுடன் தேசியப் பிரச்சினை பற்றி நல்ல உடன்பாட்டு நோக்குடையவர்கள். அடிப்படையான அரசியல் திட்ட மாற்றங்களுடன் தேசியப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமெனச் சிந்தித்தவர்கள்- எழுதியவர்கள். இதன் காரணமாகப் பெரும்பான்மை இனவாதிகளுடைய எதிர்ப்பைத் தேடிக்கொண்டவர்கள். கால ஓட்டத்தில் இக்கருத்தாடல்களிலிருந்து விலகிக்கொண்டவர்களும் உண்டு. மறுபுறம் சந்தர்ப்பம் கிட்டும்போது என்னிடம் ஐயங்கேட்கும் வேறுசில படித்தவர்களும் உண்டு.

அண்மைக்காலங்களில் அவர்கள் இருவகையான கேள்விகளைக் கேட்டு வருகின்றனர். முதலாவது கேள்வி- தமிழர்கள் இவ்வளவு தூரம் போராடுகிறார்களே அவர்களது பிரச்சினை தான் என்ன? என்பது. இக் கேள்விக்கான மூலாதாரம் விளங்கக் கூடியதே. இனமோதல்களின் உச்சக் கட்டத்தில் பேரினவாதத் தலைவர்கள் முன்வைத்த ஒரு பிரதான வாதம் தமிழர்களுக்கு எதுவிதமான பிரச்சினையும் இல்லை. நன்றாகத் தான் வாழ்கின்றார்கள். பயங்கரவாதமே இன்று நாடு எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை. அதனை ஒழித்துக் கட்டிவிட்டால் நாட்டில் எதுவித பிரச்சினையும் இல்லை. இந்தக் கருத்தின் செல்வாக்குக்குட்பட்டவர்களே என்னிடம் தமிழர்களுக்கு என்ன பிரச்சினை என்ற கேள்வியை முன்வைத்தனர்.

இப்படியான சந்தர்ப்பம் எத்தனை தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்குமோ தெரியாது. என்னிடம் இதனைக் கேட்டவர்கள் பேரினவாதிகளும் அல்ல, பெரும்பாலும் நன்கு படித்தவர்கள். இக்கருத்தை முற்றாக நம்பிக் கேட்பவர்களுடன் நாம் பொதுவாக விவாதத்தில் ஈடுபடுவதில்லை. இக்கேள்விகளைக் கேட்டவர்களுக்குப் பதிலாக நான் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பட்டியலிடுவதை விடுத்து வேறுவகையாக அக்கேள்விகளைக் கையாண்டது உண்டு. எனது விடையின் சாராம்சம் பின்வருமாறு அமைந்தது.

இலங்கையின் அரசாங்கத் தலைவர்கள் யாவருமே சிங்களத் தலைவர்கள். பெரும்பான்மையாகச் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று அதிகாரத்துக்கு வந்தவர்கள். அதன் காரணமாக சிங்கள மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர்கள். நாட்டைப் பிரிப்பதற்குச் சற்றேனும் ஒத்துக்கொள்ளாதவர்கள். தாம் சிங்கள மக்களின் தலைவர்கள் என்பதை தயக்கமின்றிப் பேச்சிலும் செயலிலும் முழுமையாக நிலைநாட்டியவர்கள். எவ்வாறாயினும் வரலாற்று ரீதியாக அவர்கள் தமிழ்த் தலைமைகள் உடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்ற நோக்கில் பல ஒப்பந்தங்களைச் செய்தவர்கள்.

பின்னர் அவற்றில் இருந்து பின்வாங்கினாலும் அவ்வொப்பந்தங்கள் (பண்டா-செல்வா,செல்வா-டட்லி ஒப்பந்தங்கள்) வரலாற்றில் பதிவுசெய்யப்பட்டவை. அதன் பின்னரான இலங்கை - இந்திய ஒப்பந்தம்,13ஆம், 16ஆம் அரசியல் யாப்பு சீர்திருத்தம் வழிவந்த மாகாண சபைகள், தமிழ்மொழிப் பயன்பாட்டுக்கான புதிய ஏற்பாடுகள்,1995இல் சந்திரிகா அரசியல் யாப்பு வரைவு, ரணில்கால மோதல் ஒப்பந்தம்,ஜே.ஆர்.காலத்திலும் அண்மைக்காலங்களிலும் நடைபெற்ற சர்வகட்சி மாநாடுகள், அம்மாநாடுகள் உருவாக்கிய அறிக்கைகள், நல்லிணக்க ஆணைக்குழுவின் நியமனம், அதன் பரிந்துரைகள் போன்றன யாவுமே இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடனும் பங்கேற்புடனும் செய்யப்பட்டவை. இவையனைத்துமே தற்போதைய அரசியல் முறைமையை மாற்றியமைத்து தமிழ் மக்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கும் முயற்சிகள்.

நாட்டில் தேசியப் பிரச்சினை என்று ஒன்று இல்லையென்றால் இத்தகைய முயற்சிகளில் ஏன் சிங்களத் தலைவர்கள் ஈடுபட்டனர் என்பதே எனது பதிலாக இருந்தது. இந்தத் தலைவர்களுடைய ஒரு வகையான நிதானமான செயற்பாடுகளுக்கும் சிந்தனைகாரருக்கும் அப்பால் சிந்திக்கும் ஒரு சில பேரினவாதிகளின் கருத்துகள் பெரும்பான்மையின படித்தவர்களிடமும் இந்தளவுக்கு படிந்திருப்பது ஆச்சரியமானதுதான்.

மேலே தரப்பட்டுள்ள எனது விடை மிகவும் எளிமையானது. தமிழர்களைப் பொறுத்தவரையில் அதில் புதுமை எதுவும் இல்லை. ஆனால் பெரும்பான்மையினரின் மத்தியிலுள்ள சற்று நியாயப்புத்தியுள்ள படித்தவர்களிடம் நாம் இதனை வலுவாக எடுத்துக்கூறவேண்டியுள்ளது. இனப் பிரச்சினையால் சமூகங்கள் துருவப்படுத்தப்பட்டு வாழும் நிலையில் இவற்றை படித்த சிங்களவரிடம் எடுத்துக்கூறக்கூடிய சிங்களக் கற்றறிவாளர்களும் அருகிவிட்டனர். பெரும்பான்மையினர் மத்தியில் நிதானமான சிந்தனைகள் துளிர்விடுவது இனப்பிரச்சினைக்கான தீர்வுநோக்கிய ஒரு பிரதான ஒளிக்கீற்று என்பதை மறுப்பதற்கில்லை.

அந்த நண்பர்கள் என்னிடம் எழுப்பும் மற்றொரு கேள்வி,தற்போது போர் முடிவடைந்து விட்ட நிலையில், அரசாங்கம் நாட்டில் சமூக இணக்கத்தையும் ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்த பலவாறு முயன்று வருகிறது.

ஆனால் தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் அரசாங்கத்தின் இம்முயற்சிகளுக்கு போதிய ஆதரவு தருவதாக இல்லை. இவ்வாறு அவர்கள் ஒதுங்கிப் போவதற்கான காரணம் என்ன?

மேலே சுட்டப்பட்ட இரண்டு வினாக்களும் இக்கற்றறிவாளர் மத்தியில் உதிர்ந்ததற்கான ஒரு முக்கிய காரணத்தையும் நான் கேட்டுத் தெரிந்துகொண்டேன். பெரும்பான்மை ஊடகங்களின் இனப்பிரச்சினை தொடர்பான செய்திகளும் அவை முன்வைக்கும் கருத்துகளும் இக்கற்றறிவாளர் மனதில் இவ்வாறான கேள்விகள் எழப் பிரதான காரணங்களாகும்.

இதற்கான எனது பதிலும் தமிழர்களால் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதுடன், அவர்கள் நாள்தோறும் ஏதோ வகையில் அனுபவித்து வருவதொன்றாகும். போர் முடிந்து வடக்கிலும் கிழக்கிலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் வடக்கில் இடம்பெற்று வரும் இராணுவமயமாக்கல் மக்களின் ஜனநாயக உரிமைகளை மேம்படுத்துவதாக இல்லை. அங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை இல்லை. இராணுவ அதிகாரி ஆளுநராக கடமையாற்றுகின்றார். சாதாரண சமூக நிகழ்வுகள்,மரணச் சடங்குகள் போன்ற குடும்ப நிகழ்வுகள் எல்லாவற்றிற்குமே மேலிடத்தில் அனுமதிபெறவேண்டிய அவசியம் உண்டு.

சுதந்திரமான பேச்சு, கலந்துரையாடல் என்பவற்றுக்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலைமை, இராணுவத் தேவைகளுக்காக தனியார் நிலங்கள் அபகரிக்கப்படும் நிலை, பெரும்பான்மையினரை ஆங்காங்கு குடியேற்றி மக்கள் தொகை விகிதாசாரத்தை மாற்றும் முயற்சிகள், பௌத்தர் வாழாத இடங்களில் புத்தர் சிலைகளை அமைக்கும் முயற்சிகள், கொலை, களவு என சட்டமும் ஒழுங்கும் பாதிக்கப்பட்ட நிலை, அரசியல் யாப்பின் மொழி ஏற்பாடுகள் சரிவர நடைமுறைப்படுத்தப்படாமையால் மக்கள் படும்பாடு என பலவற்றை எடுத்துரைக்கும் போது கற்றறிவாளர்கள் இது பற்றி எதுவும் அறிந்ததாகத் தெரியவில்லை. போர் முடிந்த பின்னர் எல்லாமே சுமுகமாகவே நடைபெறுவதாக அவர்கள் எண்ணுகிறார்கள்.

தெற்கில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகளை விட வடக்கிலும் கிழக்கிலும் ஏராளமாக நடைபெறுகின்றன. அரசாங்கமும் வெளிநாடுகளும் ஏராளமான பணத்தை அங்கு கொட்டுகின்றன. என்றாலும் தமிழர்கள் சும்மா முறைப்பாடுகளைச் செய்கின்றார்கள் என்ற முறையிலேயே அவர்களது பேச்சு அமைந்திருந்தது. இவையெல்லாம் பெரும்பான்மை கற்றவர்களின் மனப்பதிவுகள்.

இலங்கை பல இனங்களைக் கொண்ட ஒரு பன்மைச் சமூகம். இலங்கைக்கு ஒரு தமிழ்ப்பக்கமும் முஸ்லிம் பக்கமும் உண்டு. இவையெல்லாம் சேர்ந்ததே இலங்கையென்ற உணர்வும் கொள்கையாக்கமும் அதனை மேம்படுத்தும் செயற்பாடுகளும் இல்லையாயின் ஒட்டுமொத்த இலங்கையும் எக்காலத்திலும் ஏற்றங்காண முடியாது. பன்முக அடையாளங்கள் உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டு யாவருக்கும் சம உரிமை, சமத்துவம் என்பன அரசுக் கொள்கையின் தாரக மந்திரமாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Home Builder*
*a complete guide*
*for an*
*outstanding house*




## Gardening & Landscaping



## Interior Decorating








## Construction & Architecture

& Many more interesting Topics to turn your house a home

Available at Cargills & Keells Supermarket
for more information please contact
Suven 077 5790370

*A Home Improvement Companion*   **An Express Publication**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதுமுள்ள தமிழர்களுக்கான
பிரத்தியேக திருமணசேவை

THIRUMANAM.LK™
இருமனம் சேர்ந்தால் திருமணம்

இன்றே உங்கள் அங்கத்துவத்தைப் பதிவு செய்து
வாழ்க்கை துணையை தெரிவுசெய்யுங்கள்...

www.thirumanam.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.